Black 150 lpi at 45 degrees
www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 15 யூலை 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 115



# மீண்டும் வருகிறது

இருபத்தியொரு வருடங்களுக்குப் பின்பு மீண்டும் இந்தியப் படை இலங்கை மண்ணில் கால்பதிக்கப் போகிறது. அதற்கான ஒப்புதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதியிடம் பெறப்பட்டு விட்டது. இலங்கையின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் என எவ்வளவிற்கு பேரினவாத முதலாளித்துவாதிகள் கூக்குரல் இட்டாலும் யாவும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்திற்கு முன்னால் வெற்று முழக்கங்கள் மட்டுமேதான்.

1987ம் ஆண்டு யூலை 29ம் திகதி அன்று அன்றைய இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் அன்றைய இந்தியப் பிரத மர் ராஜீவ் காந்திக்குமிடையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. அந் நிகழ்வு இடம் பெற்ற ஓரிரு மணித்தியாலங்களில் கடல் ஆகாய மார்க்கங்களில் இந்தியப் படைகள் வடக்குக் கிழக்கில் வந்திறங்கிக் கொண்டன. அதற்கு இடப்பட்ட பெயர் அமைதி காக்கும் படை என்பதாகும்.

இப்போது 2008ம் ஆண்டு யூன் 20ம் திகதி அன்று இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர்

2ம் பக்கம்

**யூலை 10 கோரிக்கை ரூபா 5000/= சம்பள உயர்வு அவசியம் நியாயமானது**

# ஊடக சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்போம். அதன் மீது ஒரு போதும் கை வைக்க மாட்டோம். உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள். இவ்வாறு அரசாங்கத்தின் ஊடகத்துறை அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் ஊடகவியலாளர்களைப் பார்த்து அடிக்கடி கூறி வருகின்றனர். இவற்றை அரசாங்க ஊடகங்கள் அழகாகப் பரப்புரை செய்தும் கொள்கின்றன. இந்த வாய்மொழியின் அடிப்படையில் அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

ஆனால் ஊடகவியலாளர்கள் கைது செய்து தடுத்து வைக்கப்படுவது தாக்கப்படுவது கடத்தப்படுவது அச்சுறுத்தப்படுவது இறுதியில் கொல்லப்படுவது ஒழுங்காக இடம் பெற்று வருகின்றன. கடந்த இரண்டு வருடக் காலப் பகுதியில் 12 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடக அமைப்புகள் தெரிவித்துள்ளன. ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படுவதும் விசாரணைக்கு நிறுத்தாது தடுத்து வைக்கப்படுவதும் தொடர்கின்றது. ஏற்கனவே தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் விடுதலையின்றி விளக்க மறியலில் இருந்து வருகிறார்கள். அண்மைய மாதங்களில் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகமும் அவரோடு சேர்த்து இருவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவசர காலச் சட்டத்தின் கீழான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்கள் திட்டமிட்டே வதைக்கப்படும் நிலை தொடர்கிறது. உள்ளூர் ஊடக அமைப்புகள் கண்டனங்கள் எதிர்ப்புக்கள் தெரிவித்துக் கொண்டே இருக்கின்றன. அவ்வாறே சர்வதேச ஊடக அமைப்புகளும் மனித உரிமை நிறுவனங்களும் கண்டனம் தெரிவித்தும் வருகின்றன. "இலங்கை ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு அற்ற நாடு" என்று சர்வதேசக் குரல் ஓங்கி எழுந்த பின்பும் அரசாங்கத்தின் காதுகளில் மட்டும் அவை கேட்கவில்லை.

இறுதியாகப் பட்டப்பகலில் வெட்டிக் கொல்லப்பட்டவர் சக்தி தொலைக் காட்சியின் யாழ்ப்பாண ஊடகவியலாள. தேவரும் அவரவது நண்பருமாவர் அவ்வாறு கடைசியாகத் தாக்கப்பட்ட ஊடகவியலாளர் நாமல் பெரேராவும் அவரது நண்பரான மகிந்தரத்தினவீரவுமாவார். இதில் உள்ள முக்கிய விடயம் என்னவெனில் கடந்த இரண்டு வருடகாலப்பகுதியில் கொல்லப்பட்ட தாக்கப்பட்ட கடத்தப்பட்ட அச்சுறுத்தப்பட்ட எந்தவொரு சம்பவத்திற்கும் உரிய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை என்பதாகும்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





# 1 1/2 வருடங்களாகியும் விடுதலையும் விசாரணையும் இல்லை

புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்கள் ஐவர் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் விடுதலை செய்யப் படவும் இல்லை. விசாரணைக்கு நீதி மன்றத்தில் நிறுத்தப்படவும் இல்லை. ஏன் இந்த நிலை இந் நிலையில் புதிய- ஜனநாயக கட்சி தனது ஐந்து தோழர்களையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய் அல்லது விசாரணை செய் என்பதற்கான ஒரு லட்சம் கையெழுத்துக்கள் சேகரிக்கும் வெகுஜன இயக்கத்தை முன்னெடுத்து வருகின்றது. அதனை விரிவுபடுத்த மேன் மேலும் மக்கள் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என புதிய- ஜனநாயக கட்சி கேட்டுக் கொள்கிறது.

# மாகாணசபைத் தேர்தலில் மலையக மக்கள்

எதிர் வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையக மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்ற பெரும் கேள்விக்கு முன்னால் உள்ளனர். குறிப்பாக சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை இரத்தினபுரி மாவட்டங்களில் அதிகளவு மலையக மக்களின் வாக்குகள் உண்டு. இங்கே இ.தொ. காவும் மலையக மக்கள் முன்னணியும் தனித் தனியே போட்டியிடுகின்றன. வழமை போன்று மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள இவ்விரு கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியான பொய் வாக்குறுதிகளை வழங்க ஆரம்பித்துள்ளனர். இன அடையாளத்தை வைத்து "நம்ம ங்க எல்லாம் நம்மளையே ஆதரிக்கனும். நாம் தான் தலைவர் தொண்டமான் காலத்திலிருந்து உரிமைகளை வென்று தந்திருக்கிறோம். இப்பவும் நம்ம தலைவர் ஆறு முகன் தான் ஆசிரியர் வேலையெல்லாம் எடுத்துக் கொடு த்தாரு" இவ்வாறு இ.தொ.கா பிரசாரகர்கள் முழங்க ஆரம்பித்து விட்டனர். இதற்குச் சற்றும் குறைபடாது மலையக மக்கள் முன்னணி தேர்தல் வேலை செய்ய ஆரம்பித்து விட்டனர். தாமே மலையக மக்களின் நவீன ரட்சகர்கள் என்பதாக அழகான உரைகள் அறிக்கைகள் வெளியிட ஆரம்பித்து விட்டனர். ஐக்கியம் அரசியல் விழிப்புணர்வு மாகாண அபிவிருத்தி என நீட்டி வாசிப்பதில் முன்னிப்பவர்கள் இந்த ம.ம முன்னணியினர்.

ஆனால் இ.தொ.கா வும், ம.ம.மு இருபகுதின ருமே ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் அதேவேளை மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் பிரதான பங்காளிகள் எல்லோருமே அமைச்சர்கள் அரை அமைச்சர்கள் அவற்றால் மலையக மக்கள் பெற்ற நன்மைகள் உரிமைகள் யாவை என்று இவ் வேளையில் மலையக மக்கள் சிந்திப்பது தேவையான தாகும். மாகாணசபைகளின் மூலமாகப் பெறக் கூடிய அபிவிருத்திகளோ அல்லது வேலைத்திட்டங்களோ தோட்டப் புறங்களைச் சென்றடைவதில்லை. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் அவர்களைச் சுற்றியிருப்பவர்களும் பெற்ற இலாபங்கள் சலுகைகள் சுய ஈடேற்றங்கள் எதுவும் வாக்களித்த மக்களுக்குச் சென்றடையவில்லை.

எனவே தான் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதால் என்ன பயன் என்பதையிட்டு மலையக மக்கள் யோசிக்க வேண்டும். அதற்கும் மேலாக வாக்களிப்பதாயின் நம்மவர்கள் என்ற பெயருடன் வரும் ஏமாற்றுத் தலைமைகளுக்கு வாக்களிப்பதைத் தவிர்க்க வேண்டும். அரசாங்கத்திற்கோ எதிர்க் கட்சிக்கோ வாக்களிப்பது நமது தலைகளில் நாமே மண்போடுவதாகும். இவற்றுக்கு அப்பால் இனவாதமற்ற மலையக மக்களை சமமாக மதித்து நடாத்தும் நிலைப்பாட்டைய சக்திகளை அடையாளம் கண்டு அத்தகையோருக்கு வாக்களிப்பதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது.

## ஊடக சுதந்திரம்

1ம் பக்க தொடர்ச்சி

அவ்வாறெனில் அரசாங்கம் எவ்வாறு ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாக்கப் போகிறது. அரசாங்கத்தின் சட்டத்தைப் பாதுகாப்போர் பல துறையினராக உள்ளனர். அவர்களுக்கு அப்பாற்பட்டு ஒரு கும்பல் தொடர்ந்து ஊடகவியலாளர்களைத் கொன்று தாக்கி கடத்தி அச்சுறுத்தி வருமாயின் அதன் அர்த்தம் என்ன? ;பாசிசம் அரங்கிற்கு வந்து விட்டது எனக் கொள்ளலாமா ;பாசிசத்தின் முதல் நடவடிக்கையே ஊடக சுதந்திரத்தை நசுக்கி ஊடகவியலாளர்கள் மீதும் கை வைப்பது தான் என்பதையே வரலாறு நமக்குப் பாடமாகத் தந்துள்ளது. அப்படியாயின் இன்றைய இலங்கையின் நிகழ்வுகளின் திசை பயங்கரமானவையாகவே காணப்படுகின்றது. ;பாசிசத்தை நோக்கிய பயணம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டதா. இது ஆரம்பமெனில் அடுத்தடுத்து இடம் பெறப்போகும் நிகழ்வுகள் பற்றி மக்கள் தூர நோக்குடன் சிந்திப்பது அவசியம். இத்தகைய அபாய நிலையை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த மக்கள் அணிதிரள்வது அவசியமாகின்றது. அல்லாது விடின் "............... இறுதியில் என்னிடம் வந்தபோது எனக்காக குரல் கொடுக்க எவருமே இருக்கவில்லை" என்ற புகழ் பெற்ற நாஜிகள் காலத்து பாதிரியார் ஒருவரின் அனுபவ வரிகளை நாம் எல்லோரும் அனுபவித்துக் கொள்ள வேண்டியதாகவே இருக்கும்.

1ம் பக்க தொடர்ச்சி

## மீண்டும் வருகிறது......

சிவசங்கர் மேனன் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயனன் பாதுகாப்புச் செயலாளர் விஜேசிங் ஆகிய மூவரும் திடீரென இலங்கை வந்தனர். அலரி மாளிகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஒரு மணி நேரப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அதன் போது எதிர் வரும் சார்க் மாநாட்டின் பாதுகாப்பிற்காக கொழும்பில் மூவாயிரம் இந்தியப் படைகள் நிலை நிறுத்தப் படுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. கடல் தரை ஆகாயம் என்பன மூலமாக மாநாட்டுக்கு முன் கூட்டியே கொழும்பு பாதுகாப்பிற்காக இந்தியப் படைகளிடம் ஒப்படைக்கப்படும் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அன்று அமைதி காக்கும் பணிக்காக ஐம்பதினாயிரம் இந்தியப் படைகள் வருவதாகவே கூறப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கு பூராவும் ஒரு லட்சம் முதல் ஒன்றரை லட்சம் படையினர் வியாபித்து நின்றனர் என்பது நினைவிற்குரியதாகும். இப்பொழுது கொழும்பின் பாதுகாப்பிற்கு மூவாயிரம் படைகள் என்றே கூறப்படுகிறது. இந்த எண்ணிக்கை கூடுமா மாநாட்டிற்குப் பின்பும் இப்படையின் பிரசன்னம் நீடிக்குமா மாநாட்டின் பெயரில் இந்தியப் படை நிரந்தர நிலைநிறுத்தத்திற்கு பரீட்சார்த்தம் செய்யப் போகின்றதா போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் பல நிலைகளிலும் எழுப்பப்படுகின்றன.

இலங்கை இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் உள்ள ஒரு நாடெனில் பாதுகாப்புக்கு என அடுத்த நாட்டின் படை இறங்கிக் கொள்ள அனுமதிப்பது எவ்வகையில் நியாயமானது. இலங்கை படையை வருமாறு கேட்கவில்லை. இந்தியா தனது பிரதமரின் பாதுகாப்புக்கு எனக் கூறியே படை கொண்டு வருகிறது. உண்மையில் இது பாதுகாப்புக்குத்தானா? அல்லது வேறு உள்நோக்கங்கள் ஏதாவது உண்டா?

எவ்வாறாயினும் இன்றைய இன நெருக்கடி யுத்த சூழலில் இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க நோக்கங்கள் நிறைந்த காய் நகர்த்தலை மிகுந்த அரசியல் ராணுவ தந்திரோபாயத்துடன் நகர்த்தியிருக்கிறது. இத்தகைய அந்நியப் பாதுகாப்பு எமக்கு அவசியம் இல்லை என்று கூறவோ அல்லாது விடின் அத்தகைய பாதுகாப்பின் மத்தியில் சார்க் மாநாடு நடத்தத் தேவை இல்லை என்று மறுத்து நிற்கவோ இலங்கையின் ஆளும் வர்க்கத் தலைவர்களுக்கு துணிவு இருக்கவில்லை. இது இன்று மட்டுமல்ல அன்றும் இருக்கவில்லை. இத்தகைய பலவீனம் தான் இந்தியாவின் பெரியண்ணன் பாத்திரத்திற்கு வலுவூட்டுவதாகும். இறைமை சுதந்திரம் பறிபோனாலும் போகட்டும் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கக் கூடாது என்ற பேரினவாத நிலைப்பாட்டின் காரணமாகவே இந்தியப் படைகள் வந்திறங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதே உண்மையாகும்.

# நாலும் நடக்கும் உலகிலே

(ந ற் கு ண ன்)

## கருணாசாகர கருணாநிதி

கருணாநிதி தனது 85வது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாட வேண்டாம் எனக் கழகக் கண்மணிகளுக்குக் கட்டளையிட்டபோதும் அவர்கள் கொண்டாடியே தீருவது என்று முடிவு செய்துவிட்டனர். (தேனெடுத்துப் புறங்கை நக்கும் நன்னெஞ்சங்கள் சும்மா இருக்குமா?)

தான் பங்குபற்ற மாட்டேன் என்று பிடிவாதமாகச் சொன்ன முதல்வர் கலைஞர் இறுதியில் தனது மனதை மாற்றி விட்டார். ஏனென்று கலைஞர் மகள் கவிஞர் கனிமொழி எம்பி சொல்கிறார். அவரது அப்பாவுக்கு மிகவும் இளகிய மனமாம். தூரத்திலிருந்து வருகிறவர்கள் எல்லாரும் தன்னைக் காண முடியாது ஏமாற்றமடைவார்கள் என்று மனமிரங்கிதான் தனது முடிவை மாற்றினாராம். ஐயனே கருணாகரனே என்னே நின் கருணை!

வரவே மாட்டேன் என்று ஊடகங்கள் மூலம் திட்டவட்டமாக அறிவித்திருந்தால் அவரைத் தரிசிக்கத் தொலைவிலிருந்து வருகிறவர்கள் வராமலே விட்டிருக்க மாட்டார்களா? கனிமொழியின் விளக்கம் நமக்கு விளங்கிக் கொள்ளக் கடினமாக இருக்கலாம். பகுத்தறிவுப் பாசறையில் பிறந்தவரல்லவா. நமக்கெல்லாம் அவர்களது தர்க்கம் விளங்காது.

## சாதிய முற்போக்குப் பேரவாக்காரர்

சாதியம் ஒழிந்து விட்டதா இல்லையா என்று விவாதித்துக் காலத்தை வீணாக்காதீர்கள். அதைக் காப்பாற்றியே தீருவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள சிலர் உயர் கல்வி நிறுவனங்களின் உச்சக் கொம்புகளில் உள்ளனர். வாலில்லாத குறையுடைய சிலது உச்சக் கொப்புக்குப் போக அதுவே இலகுவான வழி என்று நினைப்பதும் உண்மை.

நாட்டின் மூத்த உயர்கல்வி நிறுவனமொன்றின் மூத்த ஆசான் ஒருவருக்கு எடுக்கவுள்ள விழாவை வழிநடத்த ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. அதில் ஒரு இளம் ஆசிரியரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார். பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த அவர் வெளிவெளியாகவே பேசுவதால் அதே கல்விப் பிரிவைச் சேர்ந்த தான்தோன்றி ஈசுவரனார் ஒருவருக்கு அந்த இளைஞரைப் பிடிக்காது. அதை விடத் தன்னுடைய தில்லு முல்லுகளையும் பின்னவர் அம்பலப்படுத்தி விடுகிறதாக ஒரு சந்தேகம். எனவே விழா நாயகரின் வீட்டுக்குப் போய் அவரது மனைவி முன்னிலையில் அவரிடம் "............... பிள்ளையையும் தூக்கிக் கொமிற்றியிலை போட்டிருக்குது. நான் உந்தக் கொமிற்றியிலை இருந்து விலகப்போறன்" என்று அறிவித்துத் தனது சாதியச் சினத்தை வெளிப்படுத்தினாராம். விழா நாயகருக்கோ பெரும் அதிர்ச்சி.

பகிடி என்னவென்றால் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்கும் நு.'மானுக்கும் பிறகு தான் தான் பெரிய விமர்சகன் என்று கொழும்பிலும் தன்புகழ் பேசித் திரிகிற இந்தத் தான்தோன்றி ஈசுவரனார் புதிதாக கொழும்பில் முற்போக்கு கலை இலக்கியக்காரர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிற ஒரு கூட்டத்தில் தன்னை ஒரு பிரமுகராகத் தக்க வைத் துக் கொண்டு இருக்கிறது தான்.

"அதிலென்ன பகிடி? அங்கே ஒட்டி இருக்கிற பலரும் இப்படிப்பட்ட பொறுக்கிகள் தானே" என்கிறீர்களா. அதுவும் மெய்தான்!

## அங்கீகாரத்துக்கான ஆதங்கம்

"அடியேன்" புகழ் அரைகுறைப் பத்தி எழுத்தாளர் அண்மையில் ஒருவருக்குப் பாராட்டுத் தெரிவித்து ஒரு தமிழ்ச் சஞ்சிகையில் எழுதும் போது ஒரு முக்கியமான உண்மையையும் சொல்லியிருந்தார். ஆங்கிலப் பத்திரிகைகளில் தான் எழுதுகிற பற்றைத் தமிழ்ப் பேசுவோரில் மூன்றே மூன்று பேர் மட்டுமே வாசித்துத் தன்னைப் பாராட்டுவார்களாம். மற்ற எவருமே வாசிப்பதுமில்லையாம், எதுவுமே சொல்லுவதுமில்லையாம். இவ்வளவு புகழ் வாய்ந்த அவரது பத்தியில் அவர் தனக்களிக்கப்பட்ட இடத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறதாக ஒரு விமர்சகர் தாக்கியிருப்பதாகவும் அழுது வடித்துள்ளார். அடப்பாவமே!

இவரது பத்தியை ஏன் யாரும் கண்டு கொள்ளுவதில்லை என்பதைக் கொஞ்சம் நோண்டினால் அந்த "விமர்சகர்" சொன்னதிலுள்ள உண்மை அடியாருக்கு விளங்காமலா போகும்?

கோட்டான் ஒன்று மேற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. ஒரு மணிப்புறா அதை வழி மறித்து "எங்கே போகிறாய்?" என்று கேட்டது. "கிழக்கில் யாருக்கும் என்னைப் பிடிக்கவில்லை. அதனால் மேற்கே போகிறேன்" என்றது. "கோட்டானே உன் குரல் உள்ளபடி உள்ளவும் எங்கே போனாலும் உன்னை யாருக்கும் பிடிக்காது" என்று மணிப் புறா சொன்னது.

## லண்டனிசம்?

முன்னாள் "லண்டனிலிருந்து" இந்து மாகடலில் சீனாவின் அந்நியக் கடற்படைத் தளங்களைக் காணாமலாக்கி விட்டது. இப்போது வேறு விதமான கதைகள் எழுதப்பட்டு வருகின்றன. ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதையில் வருகிற மாதிரிச் சீனா எதையாவது பொல்லாத வேலை செய்கிறதாகச் சொல்லி விட்டால் எசமானர்கட்கு மகிழ்ச்சி தானே.

அது ஒரு புறமிருக்கப் புதிய ஜனநாயக ஏகாதிபத்தியம் என்று ஒரு புதிய அரசியல் விஞ்ஞானச் சொற்றொடரையும் அண்மையில் "மு.கு." அறிமுகப்படுத்தியிருந்தார். இதற்கான வரை விலக்கணத்தையும் அவரே தந்தருள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் முன்பு எம்.ஜி. ராமச்சந்திரன் அ.தி.மு.கவை நிறுவிய போது உங்கள் கொள்கை என்ன வென்று கேட்ட பத்திரிகையாளரிடம் "அண்ணாயிசம்" என்றார். இது வரை விளக்கங் கூற இயலாத பெரும் தத்துவங்களில் ஒன்றாக அண்ணாயிசம் இருந்து வருவது தமிழருக்கு பெருமை தமிழுக்கும் பெருமை. இந்த வரிசையில் புதிய- ஜனநாயக ஏகாதிபத்தியம் என்பதும் இணையக் கூடும்!

அது சரி எங்கள் கூட்டாளி வழி நடத்துகிற தத்துவம் எதுவாக இருக்கும்? லண்டனிசமா, வாஷிங்டனிசமா?

## குற்றேவலும் கூழைக் கும்பிடும்

மு. பொன்னம்பலம் என்பவர் கவிஞர் முருகையனை என்றுமில்லாத அதிசயமாகப் போற்றி எழுதிய கட்டுரைத் தொடரில் முருகையனைப் பழைய கூட்டாளிகள் யாரும் கவனிப்பதில்லை என்ற தொனிப்படவும் தேவையின்றிக் கவிஞர் சில்லையூர் செல்வராசனை நிந்தித்தும் எழுதியிருந்தார். அதைக் கண்டித்து மாவை வரோதயன் என்பார் எழுதிய குறிப்பிற்கு விடையெழுதுகிற பேரில் மாவை வரோதயனைக் "குற்றேவற்காரர்" என்றும் இழிவுபடுத்தி உள்ளார்.

இந்த எசமானர் இப்போ யாருடைய ஏவல்களைச் செய்பவரோ தெரியாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்த போது யாருடைய குற்றேவல்களைச் செய்தார் என்றும் வெளியே வந்து தன் காரியங்களைப் பார்த்துக்கொள்ள யார் யாருக்குப் பின்னால் அலைந்தாரென்றும் பலரும் அறிவர்.

காந்தியின் ஆசிரமங்களில் ஒருவர் தவறாது மலசலகூடங்கழுவுவது வரை பல குற்றேவல்களும் செய்தனர். எல்லாப் பணிகளையும் சமமாய் மதிப்பது காலைக் பிடித்துக் காரியம் பார்க்கிறதை விட மேலானது என்றே நினைக்கிறேன்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# திருமலை சம்பந்தன் எடுத்த சீன எதிர்ப்பு வாந்தி

திருகோணமலையின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா. சம்மந்தன் அண்மையில் சீன எதிர்ப்பு வாந்தியை எடுத்தார். இது அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் தலைமைகளுக்கு இருந்து வரும் இடதுசாரி சோஷலிச எதிர்ப்பு நோயின் வெளிப்பாடுதான்.

அண்மையில் இலங்கைக்கு திடீர் வருகை தந்திருந்த உயர்மட்ட இந்தியக் குழுவினரை இரா. சம்மந்தன் சந்தித்து உரையாடினார். இலங்கையில் தமிழர்கள் படும் அவலங்கள் பற்றி எடுத்துரைத்துக் கொண்டிருந்த அவருக்கு ஒரு கட்டத்தில் சீன எதிர்ப்பு வாந்தி வந்து விட்டது. அடக்க முடியாமல் கக்கியே விட்டார். இதனை அவர் ஏன் எடுத்தார் என்றா யோசிக்கின்றீர்கள். காரணத்தோடு தான் அதனைக் கக்கினார். அதாவது இந்தியா இலங்கை விடயத்தில் தமிழர் தரப்புடன் தான் நிற்க வேண்டும். ஏனெனில் தமிழர்கள் எப்பொழுதும் இந்தியாவின் "இயல்பான நண்பர்கள்" சிங்களவர்கள் அப்படி அல்ல என்ற தோரணையில் கருத்துரைத்தார். அதற்கும் அப்பால் சென்று சிங்களவர் சீனாவின் பக்கம் தான் நிற்பவர்கள் என்றவாறு கூறியதுடன் எண்ணெய் வள ஆய்வுக்கு மன்னாரில் சீனாவிற்கு இலங்கை அரசாங்கம் இடம் கொடுத்திருக்கிறது. இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும் தமிழரின் ஏகப்பிரதிநிதியாக எடுத்துரைத்தார்.

அதாவது சம்மந்தனின் எடுத்துரைப்பில் நாங்கள் தான் உங்களது நீண்டகால நிரந்தர விசுவாச அடிமைகள் என்பதை இந்தியத் தரப்பிற்கு நினைவூட்டியது போலவே இருந்தது. அதுமட்டுமன்றி சீனா பாகிஸ்தான் இங்கு வருவதற்கு முன்பு நீங்கள் முந்தி வந்து கொள்ள வேண்டும். அதுவும் எங்களுக்கு ஊடாக வரவேண்டும் என்ற மன்றாட்டமாகவே இருந்தது. இவ்வாறு தான் முன்பு அமிர்தலிங்கமும் அவர் தம்பிமாரும் இந்தியாவைக் கெஞ்சி வரவழைத்ததையும் தமிழ் மக்கள் அனுபவித்தவற்றையும் மறந்து விடமுடியாது.

சீன எதிர்ப்பிற்கு சம்மந்தன் தூக்கிக் காட்டிய விடயம் மன்னாரில் எண்ணெய் வள ஆய்வுக்கு இலங்கை அரசு சீனாவிற்கு இடம் கொடுத்திருக்கிறது என்பதாகும். ஆனால் அதே மன்னாரில் இந்தியாவிற்கும் குறிப்பிட்ட பிரதேசம் ஒதுக்கப்பட்டுள் ளதை சம்மந்தன் குறிப்பிடவில்லை. மன்னாரில் எண்ணெய் வளமுள்ள பிரதேசங்கள் என அடையாளம் காணப்பட்ட இடங்கள் பிரித்து பிரித்து சீனா இந்தியா உட்பட வேறும் ஒரிரு நாடுகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவே பெற்றோலிய அமைச்சர் அண்மையில கூறி இருந்தார்.



இவ்வாறு இருக்கையில் சீனாவிற்கு வழங்கப்பட்டதையிட்டு கூக்குரல் எழுப்பும் இந்த தமிழர் கூட்டமைப்புச் சீமானுக்கு தனது மாவட்டத்தில் தன் தொகுதிக்கு அருகாமையில் சம்பூரில் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை அனல்மின் உற்பத்திக்காக் இந்தியாவிடம் தாரை வார்த்திருப்பதை அறிய மாட்டாரா? அவை வெறும் தரிசு நிலங்கள் அல்ல. வளமான விவசாய நிலங்கள் மட்டுமன்றி பதின் மூவாயிரம் தமிழ் முஸ்லீம் குடும்பங்களை பலாத்காரமாக வெளியேற்றி அகதிகளாக்கியே சம்பூர் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதனை திருமலை மாவட்டத்தினதோ சம்பூரினதோ தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? இதற்கு ஐயா சம்மந்தன் என்ன நியாயம் கூறுவார். ஏற்கனவே இந்தியா திருமலையில் எண்ணெய்க்குதங்களை குத்தகைக்கு எடுத்ததை இந்தக் கனவான் இந்திய ஆதிக்கத்தின் ஒரு பகுதி என ஒப்புக் கொள்வாரா? காங்கேசன்துறை சீமெந்து ஆலையை இந்திய பெருமுதலாளியக் கம்பனியான பிர்லா குழுமம் கையேற்கப் போவதைப் பற்றி சம்மந்தன் என்ன கூறுவார்? சீனத் துவக்கும் பாகிஸ்தான் எறிகணையும் தான் தமிழர்களைக் கொல்லும் இந்திய ஆயுதங்கள் வெறுமனே தமிழ் மக்களை ஆராத்தி எடுத்து அவ் வெடி மருந்துகள் மஞ்சள் குங்குமம் இட்டுக்கொள்ளுமாம். அல்லது அமெரிக்க இஸ்ரேலிய ஆயுதங்கள் ஜனநாயக சுதந்திர வெடிமருந்துகளையா தமிழ் மக்கள் மீது பொழிகின்றன. திருமலையின் சொந்த மக்களுக்கே உரிய பதில் கூற முடியாத சம்மந்தன் ஐயா அவர்களே முழுத்தமிழர்கள் சார்பாக இந்திய ஆளும் வர்க்கத் திடம் மன்றாட என்ன உரிமை உங்களுக்கு உண்டு. நீங்களும் உங்களையொத்தவர்களும் தமிழர் பழைமை வாத மேட்டுக்குடி பிற்போக்கு சக்திகளின் பிரதிநிதிகளே அன்றி ஏகப் பெரும்பான்மையான சாதாரண உழைக்கும் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர். உங்களுடையதும் உங்கள் மூதாதையரான மேட்டுக்குடித் தமிழ்த் தலைவர்களினதும் ஊறிப்போன பிற்போக்கு கொள்கைகளும் இடதுசாரி சோஷலிச விரோத அணுகு முறைகளும் தான் இன்றைய தமிழர் அழிவுகளினதும் அவலங்களினதும் ஒரு பகுதி என்பதை தமிழ் மக்கள் இன்று உணர ஆரம்பித்து விட்டனர். இனிமேலும் உங்களது சீனப் பூச்சாண்டி இந்திய அடிமை விசுவாசம் அமெரிக்க அரவணைப்பு விளங்கிக் கொள்ள முடியாதவைகள் அல்ல.

**வைகறையன்**

## போர்- சில பதிவுகள்

மரித்துப் போன  
தனது கனவுகளை சுமந்து  
அழுகிறது  
முடமாக்கப்பட்ட குழந்தை

சிதைந்து குருதிதோய்ந்து  
வீதியெங்கும் பரவிய  
பிணங்கள்

சப்பாத்துக் கால்களில்  
மிதிப்பட்டு நசிந்து மரித்தன  
வசந்த மலர்கள்

துயரைப்பாடிச்  
சோர்ந்துவிட்டன  
மாந்தோப்புக் குயில்கள்

முகாரியிசைத்தே  
இரண்டாய் போனது  
புல்லாங்குழல்

கண்ணீரின்றி  
வரண்டு போயின  
விழிகள்  
தண்ணீரின்றி  
வற்றிப் போயின  
விளை நிலங்கள்

உயிரைக் குடித்த  
போதையில்  
சூடேறிய துவக்குகள்

மேசையில்  
தூக்கி வழிந்தபடி  
தீர்மானங்கள்  
இராப்பகலாய்  
விழித்திருக்கின்றன  
அச்சத்துடன் இதயங்கள்

உச்சஸ்தாதியில்  
ஊளையிடுகின்றன  
பனங்காட்டு நரிகள்.

**கிருஷ்ணா**  
எழுதியது 17-06-2008

# பேரினவாதிகளின் அடுத்த முயற்சி

ஜே.வி.பி- ஜாதிக ஹெல உறுமய பேரினவாதிகள் நீதிமன்றப் படிகள் ஏறுவதில் விண்ணர்கள். அதற்குக் காரணம் பேரினவாதத்தை சதா தியானித்து வரும் பௌத்த பிக்குமாருக்கான சட்ட வல்லுனர்களின் ஆலோசனைகளாகும். இவர்கள் சட்டத்தில் உள்ள சிறிய ஓட்டைகளுக்குள் விரல் விட்டு விடயங்களை உடைப்பவர்களாவர். இதனால் பெருந் தொகைப் பணம் இந்த சட்டவாதிகளுக்குக்கிடைக்கும் அதே வேளை பேரினவாத நச்சுத் தனங்களும் அரங்கேறிக் கொள்கின்றன.

இந்த வகையில் ஏற்கனவே சுனாமிக் கட்டமைப்பு வடக்கு கிழக்குப் இணைப்பு என்பன நீதிமன்றத் தீர்ப்புகளால் சிதைக்கப்பட்டன. இவற்றில் ருசி கண்ட ஜாதிக ஹெல உறுமயவின் பேரினவாதப் பிக்குமார் இப்போது கிழக்கில் அம்பாறை மாவட்ட திகவாபிப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ள வீட்டுத் வீட்டுத் திட்டத்தை தடுத்து நிறுத்த நீதிமன்றத்தில படியேறி நிற்கின்றனர். அம்பாறை மாவட்டத்தின் கரையோர முஸ்லீம் மக்கள் சுனாமியின் கோரப் பிடிக்குள் சிக்குண்டவர்கள். மீனவர்களான அவர்களின் வீடுகள் தொழில் உபகரணங்கள் யாவும் சுனாமியால் அழிந்து கொண்டன. அகதிகளாகி இன்றுவரை இடைத்தங்கல் முகாம்களில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அவலங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய முஸ்லீம் அகதிகளான மக்களுக்கென திகவாபியில் 500 வீடுகள் சவதி அரேபியாவின் நிதி உதவியால் அமைக்கப்பட்டன. அவ் வீடுகள் கட்டும் வரை காத்திருந்த ஹெல உறுமய பிக்குப் பேரினவாதிகள் அகதிகளான மக்களுக்கு வீடுகள் கையளிக்கத் தயாரான நிலையில் அதனைத் தடுத்து நிறுத்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அவர்களது வாதம் திகவாவி பௌத்த புனித பிரதேசம் என்பதாகும். அடுத்து அவ் வீட்டுத் திட்டத்தில் தனியே முஸ்லீம்களுக்கு மட்டும் வீடுகள் வழங்கக் கூடாது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இவ் வழக்கு நீதிமன்றத்தில விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் விசாரணை முடியும் வரை மேற்படி வீடுகள் எவருக்கும் கையளிக்கக் கூடாது என்ற இடைக்கால தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலே இந்தப் பேரினவாத நிலைப்பாடு சுனாமியால் அழிவுற்று எஞ்சியுள்ள முஸ்லீம் மக்கள் மத்தியில் வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போன்றதாகவே உள்ளது. நீதி அமைச்சரான டிலான் பெரேரா அண்மையில் ஜாதிக ஹெல உறுமய தலைவர் அத்துரலிய ரத்தினதேரருக்கு இது பற்றி ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் இத்தகைய வீட்டுத் திட்ட தடுப்பு நடவடிக்கை பௌத்த தர்ம அடிப்படைகளுக்கு முரண்பாடானது எனவும் தயவு செய்து மேற்படி வழக்கை வாபஸ் வாங்கும் படியும் கேட்டிருந்தார். மேலும் அக்கடிதத்தில் மேற்படி வீடுத்திட்டத்திற்கு அண்மித்த பிரதேசத்தில் சிங்களவர்கள் எவரும் குடியிருக்கவும் இல்லை சுனாமியால் பாதிக்கப்படவும் இல்லை என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் அவையெல்லாம் பேரினவாத வெறி தலைக்கேறிய பௌத்தக் கட்சியான ஹெல உறுமயவின் செவிகளுக்கு ஏறப்போவதில்லை என்பதையே அவர்களது தொடர் நடவடிக்கைகள் எடுத்துகாட்டி வருகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில் இதே ஹெல உறுமயவுடன் தான் முஸ்லீம் கட்சிகள் இணைந்து அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் இருந்து வருகின்றன என்பதாகும். எந்தவொரு முஸ்லீம் அமைச்சரும் இது பற்றி பெரிதாக அலட்டிக் கொண்டது கிடையாது. கட்டி முடிக்கப்பட்ட 500 வீடுகளில் வௌவால்கள் தான் இப்போது குடியேறியுள்ளன. இலங்கையில் பௌத்த தர்மம் இவ்வாறு தான் முன்னெடுக்கப்படுகிறது. இதனையிட்டு நேர்மையான பௌத்ததர்ம நம்பிக்கையாளர்கள் வெட்கித் தலை குனியவே செய்வார்கள். பேரினவாதம் பற்றி முஸ்லீம் மக்கள் உரத்துச் சிந்திப்பார்களா?

**எழுவான்**

## விடுதலை

அழுது கொண்டிருக்கிறது  
போத்தலில் அடைக்கப்பட்ட  
நிலவு

பொருமிக் கொண்டிருக்கிறது  
கூண்டில் சிறைவைக்கப்பட்ட  
புறா

முனகிக் கொண்டிருக்கிறது  
காயப்பட்ட  
நட்சத்திரம்

ஏங்கிக்கிடக்கிறான்  
பாலை நிலத்தின்  
விவசாயி

வாடிப் போகின்றான்  
வறுமைப் பீடித்த  
தொழிலாளி

தலை நீட்டிச் சிரிக்கிறது  
வேர் பரப்பி மண்பிளந்து  
ஆழத்திலிருந்து முளைத்த  
வித்து

அவர்கள் அழகாய்ச் சொன்னார்கள்  
"போராடிப் பெறுவது தான்  
விடுதலை"

**கிருஷ்ணா**  
எழுதியது 16- 06- 2008

# ஜே.வி.பி என்றும் நாய் வால் தான்

**முதற் கோணல் முற்றும் கோணல்** என்பது முது மொழி. அது நடைமுறை மூலம் பெறப்பட்ட ஒரு உண்மையுமாகும். 1965ல் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்ட ஜே.வி.பி அதன் தலைவரான றோகண விஜயவீராவினால் கோணல் கொள்கையுடனேயே வழிநடாத்தப்பட்டது. இன்றுவரை அது தனது கோணலை நிமிர்த்தியது கிடையாது. நாய்வாலை நிமிர்த்த முடியாது போன்றே ஜே.வி. பி யைத் திருத்த முடியாது என்பதை அதிலிருந்து காலத்துக்குக் காலம் வெளியேறிய முக்கிய நபர்கள் உட்பட சாதாரண இளைஞர் யுவதிகள் கூறி வந்துள்ளனர்.

ஜே.வி.பி யை ஒரு இடதுசாரி சோஷலிசக் கட்சியாகக் காண்பதற்கு சிலருக்கு அதீத விருப்பம். ஏனெனில் அதனிடம் சிங்கள மக்களும் குறிப்பாக இளைஞர் யுவதிகளும் திரண்டிருப்பது கண்ணைக் கவரக் கூடியது என்பதாகும். குறுக்கு வழியிலும் உணர்ச்சி வழிகளிலும் மக்கள் மத்தியில் வரலாற்றுப் பொய்மைகளின் வழியாகப் படிந்துள்ள இன மொழி மத பற்றுதல்களை இனவெறியாகத் தூண்டி செல்வாக்குப் பெறுவது இலகுவானதாகும். இலங்கையில் பாராளுமன்றக் கட்சிகள் முன்னெடுத்து வந்த "நாகரீகமான பேரினவாதத்தை"த் தான் ஜே.வி.பி பகிரங்கமான "சிகப்புப் பேரினவாதமாக" முன்னெடுத்து வந்துள்ளது. அதனால் இளைஞர் யுவதிகளையும் தொழிலாளர் விவசாயிகளையும் நசுக்கப்படுத்தியதுடன் நாட்டை யுத்த அழிவுப் பாதையிலும் நடக்க வைத்தது. அது மட்டுமன்றி ஏற்கனவே 1971லும் 1988- 89 கால கட்டத்தில் பல்லாயிரம் இளைஞர் யுவதிகளையும் பலியெடுக்கக் காரணமாகியும் கொண்டது.

அண்மையில் ஜே.வி.பி தலைமையைச் சேர்ந்த ஒருவர் உரையாடும் போது தற்போது தம்மத்தியில் இருந்த இனவாதிகள் வெளியேறி விட்டனர் எனக் கூறினார். அதாவது விமல் வீரவன்சா குழுவினரையே அவ்வாறு இனவாத சக்திகள் எனச் சுட்டியிருந்தார். அப்படியாயின் ஜே.வி.பி இனப்பிரச்சினையில் புதிய நிலைப்பாடு அல்லவா எடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒன்றும் இடம் பெற்றுள்ளதாக அறிய முடியவில்லையே. அண்மையில் ஜே.வி. பி த் தலைவர் சோமவன்ச அமரசிங்கா ஒற்றையாட்சி பற்றியும் யுத்தம் தொடரப்பட வேண்டும் எனவும் பதின்மூன்றாவது திருத்தம் நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் அடித்துக் கூறியுள்ளார். இது எதைக் காட்டுகிறது. இன வாதிகள் வெளியேறி விட்டதாகக் கூறப்படுவது உண்மையல்ல. ஜே.வி.பி என்றுமே நிமிர்த்த முடியாத நாய்வால் தான் என்பதை மீண்டுமொரு முறை அதன் தலைவர்கள் நிரூபித்து நிற்கின்றனர்.

**செங்காவலன்**

புதிய பூமி 04 யூலை 2008

# மலையகத் தலைவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எங்களை ஒட்டு மொத்தமாக குத்தெடுத்து எங்கள் நலன் காப்பதாகவே பல பதவிகளையும் பெற்று என்றென்றும் அமைச்சர்களாகவே அமர்ந்திருக்கும் பெரிய தலைவர்களே! எங்கள் மீதுள்ள அக்கறையால் சங்கங்கள் அமைத்து உங்களையே எங்களுக்காக அர்ப்பணித்துக் கொண்ட சின்னத் தலைவர்களே! அனைவருக்கும் துயரத்திலும், வேதனையிலும், தாங்க முடியாத பொருளாதார சுமையிலும் அச்சம் நிறைந்த அமைதியற்ற சூழலிலும் நிம்மதியான வாழ்வுக்காக ஏங்கும் தொழிலாளியின் வணக்கங்கள்.

அனைவரும் நலமாகவும் சொகுசாகவும் மிகுந்த பாதுகாப்புடனும் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் எங்களை நினைத்துப் பார்க்கவோ, நாங்கள் அனுபவித்து வரும் துயரங்களைப் பற்றித் தெரிந்துக் கொள்வதற்கோ தேடியறிவதற்கோ உங்களுக்கு நேரமோ அவசியமோ இருக்காது என்பதும் எங்களுக்கு தெரியும். கடந்த தேர்தலில் போஸ்டர்களிலும் மேடை பேச்சுகளிலும் இலவசமாக நீங்கள் அள்ளிக் கொட்டிய வாக்குறுதிகள் அனைத்தும் உங்களுக்கு மறந்து போயிருக்கும் என நினைக்கிறேன். என்றாலும் எங்கள் உழைப்பால் உயர்த்தி வைத்து உங்களுக்காக நாங்கள் எங்களுக்குள்ளேயே அடிதடிப்பட்டு வாக்களித்து நீங்கள் அனுபவிக்கும் பதவிகளையும் பட்டங்களையும்பெற்று கொடுத்தவர்கள். அந்தச் சோக நிகழ்வுகளை அடிக்கடி நினைவுப்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

எப்போதாவது இங்கு நடக்கும் ஏதாவது ஒன்று பற்றி நீங்கள் விடும் காரசாரமான அறிக்கைகளை காணும் போது ஆச்சரியமாக இருக்கும். உங்களில் சிலர் கொழும்பில் இருந்து கொண்டு தொலைக்காட்சி விவாதங்களிலே எங்களின் வாழ்வின் ஒட்டு மொத்த துயரங்களையும் துடைத்து எங்களுக்கு புத்துயிர் அளித்துவருவதாகவும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மிகப் பெரும் புரட்சி நடத்தி வருவதாகவும் விடும் புருடா இவ்வளவு வேதனைகளிலும் எங்களை சிரிக்க வைக்கிறது. நல்ல நகைச்சுவையாக இருக்கிறது. உங்களில் சிலர் நல்ல பழுன்களாக வேஷம் போட்டு எப்போதும் எங்களை மகிழ்விக்க எடுத்துக் கொள்ளும் அக்கறையைப் பற்றி என்னவென்று கூறுவது.

யார் ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சர்களாகும் பாக்கியத்தை உங்களுக்கு தந்து விடுவோம். ஏன் என்றால் எங்கள் பிரதிநிதிகள் எப்போதும் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்ற நம்பாசை எங்களுக்கு உண்டு. நீங்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் முண்டு கொடுத்து வரும் அரசு எங்கள் மீது திணித்து வரும் பொருளாதாரச் சுமை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது. 300/= சம்பளவுயர்வு வாங்கி கொடுத்ததாக ஆளுக்காள் தம்பட்டம் அடித்து கொண்டீர்கள். ஆனால் இங்கு கம்பனிகள் வாரத்தில் மூன்று நான்கு நாள் வேலை கொடுப்பதே பெரிய விஷயமாக இருக்கிறது. அத்தோடு அவர்களின் கெடுபிடி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கூட்டு ஒப்பந்தத்தில் இரகசியமாக கையொப்பம் வைத்து விட்டு கோடி, கோடியாய் உங்கள் வங்கி கணக்கையும், சொத்துக்களையும் உயர்த்திக் கொண்ட நாடறிந்த இரகசியம் எங்களுக்கும் தெரியும். ஆனாலும் சந்தாப் பணத்தை மட்டும் நாங்கள் நிறுத்தமாட்டோம் ஏன் என்றால் எங்கள் தொழிற்சங்கம் பலம் குறைந்து விடக் கூடாது என்பதற்காக. அரிசிக்கு மானியம் பெற்றுத் தருவதாக நீங்கள் விடும் அறிக்கைகள் எங்கள் பானைகளில் சோறாகாது என்பது உங்களுக்கு புரியுமோ தெரியாது. இப் போது கூட்டு ஒப்பந்தத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை எனக் கூறிக் கொள்ளும் சில உத்தமர் கள் 500/= சம்பளம் வழங்க வேண்டும் என பேசி வருவதை கேட்கக் கூடியதாக உள்ளது. ஆனால் சம்பள உயர்வுக்காக நாங்கள் ஒற்றுமையாகப் போராடிய போது நீங்கள் அடித்த குத்துக் காரணங்களையும் நாங்கள் அறிவோம்.

ஏதேதோ அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியெல்லாம் அவர்கள் வாய்ப்பாட்டை வாசிக்கும் போது நீங்களும் ஒத்தூதி தாளம் போட்டு வருகின்றீர்கள். ஆனால் எங்கள் வாழ்க்கைக்கு எந்த விருத்தியும் இது வரை கிட்டியது கிடையாது. எங்கள் பிரதேசத்துப் பாதைகள் குன்றும் குழியுமாக, சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாமல் நமது பிள்ளைகள் பல மைல்கள் பாடசாலைகளுக்கு நடந்தே போய் வருகிறார்கள். தண்ணீர் வசதி மலசலகூட வசதி போன்ற அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே தொடர்கின்றன. அழுகின்ற பிள்ளைக்கு சிறு இனிப்புக் கொடுப்பது போல மாடி வீடு தனி வீடு என்றெல்லாம் ஆங்காங்கு ஒன்றிரண்டு திட்டத்தை காட்டியதோடு எல்லாம் சரி. நூற்றி எண்பதைந்து வருஷத்து வாழ்க்கை அப்படியே தான் இருக்கு. தோட்டத்து மருத்துவ மனைகளில் காய்ச்சல் தலைவலிக்குக் கூட மருந்து மாத்திரைகள் கிடையாது. மருத்துவம் சுகாதாரம் பற்றியெல்லாம் பெரிய பெரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாக வானொலியில் கேட்கிறோம். ஆனால் எங்களுக்கு இவை வெறும் செய்தி மட்டுமே. எங்கள் பெண்கள் குழந்தை பெறுவதற்கு முதல் நாள் வரை வேலை செய்வதும் ஏன் தேயிலை மலைகளிலேயே பிள்ளை பெறுவதும் சரியான மருத்துவ வசதி ஆலோசனைகள் இல்லாமல் பிரசவத்தின் போது இறந்த போவதும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. எமது தாய்க்குலத்தின் அவலக் குரல்கள் மலைகளிலே எதிரொலிக்கின்றன. ஆனால் கனவான்களான நமது தலைவர்களின் காதுகளில் அவை கேட்கவில்லையே.

எத்தனையோ தடவைகள் இனவாதக் காடைத்தனங்கள் எங்கள் மீது மோசமான தாக்குதல்களை நடத்தி வந்த வரலாறு இன்றைக்கும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூட இரத்தினபுரியில் நமது தோட்ட மக்கள் தாக்கப்பட்டார்கள். ஒரு வயம் சம்பூரணமாகத் தீக்கரையானது. ஆனால் இது பற்றி செய்திகள் கூட பெரியளவில் வரவில்லை என்பது தான் வேதனையான விடயம். இன்னும் கிராமபுறங்களை அண்டிய தோட்டங்களில் வீடு புகுந்து வெட்டுவதும் பெண்களை கற்பழிப்பதும் கொள்ளை அடிப்பதும் நடந்துட்டு தான் இருக்கிறது.

நாங்கள் நெருக்கமாக வாழ்ந்த தோட்டங்களைச் சுற்றி கொலனிகள் உருவாக்கப்பட்டது. அபிவிருத்தி என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தேயிலைக் காணிகள் பறிக்கப்பட்டன. அங்கு வாழ்ந்தவங்க அகதிகளாக்கப் பட்டு அடையாளம் இல்லாமலே போயிட்டாங்க. அப்போதும் அந்த அரசாங்கங்களில் நீங்கள் அமைச்சர்கள். இப்போது மண்சரிவு வெள்ளம் போன்றவற்றில் பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களுக்கும் இராணுவ வீரர்களுக்கும் தோட்டத்து நிலங்களை பிரிக்க கொடுக்க வேண்டும் என்ற பிரச்சாரமும் அதற்கான வேலை திட்டங்களும் மும்முரமாக மேற்க் கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போதும் உங்களில் எல்லோருமே அமைச்சர்கள். எஞ்சியோர் ஆலோசகர்கள் என்பதுடன் அரசாங்கத்துக்கு மிக நெருக்கமான விசுவாசிகள் என்பதை நாங்கள் தெரியாதவர்கள் அல்ல.

இருப்பினும் உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரிந்த எங்கள் மக்கள் இன்னும் சரியாகப் புரிந்துக் கொள்ளாத உண்மை ஒன்று இருக்கிறது. இது வரை நாங்கள் பெற்றுக் கொண்ட அற்ப சொற்ப உரிமைகள் கூட நாங்கள் எங்கள் உழைப்பை பணயம் வைத்துப் போராடி பெற்றவை தான். சம்பள உயர்வுப் போராட்டங்கள் தொட்டு அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்கள் வரை நாங்களும் எங்கள் பிள்ளைகளும் செய்த போராட்டங்களினாலும் கொடுக்க அழுத்தங்களாலும் கிடைத்த வையே. பிந்தனுவெவ, கந்தபொல, மல்லியப்பூ சந்தி, மேல் கொத்மலை இன்னும் ஏராளமான போராட்டங்களை விலை பேசி எங்கள் போராட்டங்களையும், உணர்வுகளையும் குழி தோண்டி புதைத்தவர்கள் நீங்கள். அதற்குப் பரிசாகப் பெற்றவைகளே நீங்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்.........

# சம்பள வாசல்

— ஓடும்பிள்ளை



**ஒரு வருடத்திற்கு முன்பு நியமனம்** பெற்ற மலையகத்தமிழ் ஆசிரியர்களுக்கு (1367) வழங்கப்பட்ட பயிற்சி நெறிக்கு கடந்த மாத நடுப்பகுதியில் கண்டியில் விழா நடத்தப்பட்டது. அந்நிகழ்வில் இ.தொ.கா தலைவரும் பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம இ.தொ.கா பொதுச செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் உட்பட பல பிரபலங்கள் கலந்து கொண்டனர். மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சரான அருள்சாமி அவ்விழா பற்றி தெரியாததால் கலந்து கொள்ளவில்லை.

இ.தொ.கா வின் உப தலைவராக்கப்பட்டு பின்னர் எம். பியாக் கப்பட்டு (தற்போது பிரதியமைச்சர்) சட்டத்தரணி பைசர் முஸ்தாபாவின் தூண்டுதலில் சில முஸ்லீம் பிரமுகர்கள் மலையகத் தமிழ் ஆசிரியர் நியமனத்தில் முஸ்லிம் மக்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டதாக அடிப்படை உரிமைகள் மீறல் வழக்குகளை தாக்கல் செய்தனர். அவ்வழக்கில் இ.தொ.கா இடையில் இணைந்து கொண்டது. அவ்வழக்கில் முஸ்லீம்களுக்கு 600 ஆசிரியர் நியமனங்களை விட்டுக்கொடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அவ் வழக்கில் முஸ்லிம் பிரமுகர்களுக்காக முஸ்லீம் சட்டத்தரணிகள் பலர் ஆஜராகினர்.

அவ்வழக்கில் இ.தொ.கா மலையகத் தமிழ் சட்டத்தரணிகளின் ஆலோசனையைப் பெறவும் இல்லை ஆஜராகும்படி கேட்கவு மில்லை. "பிரபல்யமான சட்டத்தரணிகள்" இ.தொ.கா விற்காக ஆஜராகினர். அவவழக்கை நடத்த 16 லட்சம் ரூபா செலவென கூறப்படுகிறது. இது பழைய கதை.

அந்த நிகழ்வில் பேசிய முத்துசிவலிங்கம் மலையக லோயர்னு சொல்லுறவங்க எவனும் அந்த வழக்கை பேச முன் வரவில்லை. (எந்த மலையக லோயரையும் இ.தொ.கா வினர் கேட்கவில்லை) கொழும்பிலிருந்து கொண்டு பேப்பருக்கு எழுதிற லோயர் அவன் தம்பையா கண்டமாதிரி பேப்பருல எழுதினான். கடைசியில் நாங்கதான் ஆசிரியர் நியமனம் வாங்கிக் கொடுத தோம் என்று குறிப்பிட்டு ஆத்திரத்துடன் ஏக சொற்களைப் பாவித்து திட்டித்தீர்த்தாராம.

மலையகத் தமிழ் ஆசிரியர் நியமனம் பற்றி ஒழிவு மறைவான விடங்களைப் புதிய- ஜனநாயக கட்சி அம்பலப்படுத்தியதும் ஆசிரியர் நியமனங்களை வழங்கும்படி கோரி வெகுஜனப் போராட் டங்களை முன்னெடுத்தது. அதற்கான ஆசிரியர் நியமனங்கள் பெறத் தகுதியானவர்களின் அமைப் பொன்றை கட்டி அதற்கு தலைமைதாங்கியதில் பு.ஜ.கட்சி தோழர்கள் முன்நின்றனர்.

கடந்த ஒன்றரை வருடமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பு.ஜ.கட்சியின் தோழர்களான வெ. மகேந்திரன், சு. சுகேசனன், ரா. ஜெயசீலன், ச. மோகன்ராஜ், சி. கிருஸ்ணப்பிரியன் ஆகியோர் அப்போராட்டங்களுக்கு தலைமை தாங்கினார்கள். ச. மோகன்ராஜ், சி. கிருஸ்ணப்பிரியன் ஆகியோர் அந்த ஆசிரியர் நியமனத்தில தெரிவு செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் கடமையைப் பொறுப்பேற்க முடியாதவாறு சிறையில் இருக்கின்றனர். போராடிப் பெற்றதை அனுபவிக்க முடியாது அவர்கள் இருவர் மட்டும் தடுக்கப்பட்டுள்ளனர்.

இது அமைச்சர் சிவலிங்கத்திற்கு மகிழ்வானதாக இருக்கலாம். நியமனங்களை பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரினது மனச் சாட்சியும் இது குறித்து- ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொள்ள வெகுஜனப்போராட்டங்களை முன்னெடுத்த புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்கள் சிறையில் இருப்பதை- நியம னம் கிடைத்தும் கடமையை பொறுப்பேற்க முடியாது இருக்கும் இரு தோழர்கள் சிறையில் இருப்பது குறித்தும் மகிழ்வடைய முடியாது.

எத்தனையோ கட்சிகளிலிருந்து அங்கத்தவர்களும் தலைவர்களும் கடத்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளனர். நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மலையகத்தின் ஒரு கட் சியை சேர்ந்த ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கைது செயயப்பட்டிருப்பது பற்றியோ காணாமல போயிருப்பது குறித்தோ, கடத்தப்பட்டிருப்பது பற்றியோ வெளியில் கதைப்பதற்கு கூட அக்கட்சித் தலைமைகள் மௌனம் சாதிக்கின்றன. அது பற்றி தேசியப்பத்திரிகைகளில் செய்திகள் வெளிவராமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளப்படுகின்றன.

காணாமல் போவோர் பற்றிய அமைப்பொன்றின அறிகைக செய்பவர் அண்மையில் கடத்தப்பட்டுள்ளார். அந்த அமைப்பின் தலைமை அதனை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அது பற்றி பத்திரிகையில் செய்தி வெளியிடப்படுவதையும் தடுத்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் புதிய- ஜனநாயக கட்சி இல்லை. சிறையில் இருக்கும் தோழர்களை பின்கதவால் வெளியில் எடுக்க முடியும் என்று நம்பவில்லை. சட்டப்பிரமாணங்களுக்கும் அப்பால் மக்கள் மீது நம்பிக்கை வைத்தே செயற்பட்டுவருகிறது. அவர்களை விடுதலை செய்வதற்காக தற்போது நடத்திக் கொண்டிருக்கும் கையொப்ப இயக்கத்திறகு பெருமளவில் ஆதரவு கிடைத்து வருகிறது. மலையகத்தில் தொழிலாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் வர்த்தகர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் ஆதரவு வழங்கி வருகின்றனர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியே மேற்படி இயக்கம் தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறு நாளாந்த மலையக இளைஞர்கள் கடத்தல் காணாமல் போதல் கைது செய்தல் போன்ற அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றபோதும் அதைக் கண்டுக்கொள்ளாமல் அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருப்போர் புதிய- ஜனநாயக கட்சியின் மீதோ அதன் தோழர்கள் மீதோ சேறு பூசுவதைக் கைவிடுவது நல்லது.

மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வருவதாக பிரதியமைச்சர் வீ. புத்திரசிகாமணி திடீரென்று இப்போது கூறுகிறார். அவர் மாகாண அமைச்சராக எம்.பி.யாக இருந்தார். தற்போது பிரதி நீதியமைச்சராக இருக்கிறார். மலையக தேசிய தொழிலாளர் சங்கத்தை அமைத்துள்ளார். மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்க அவர் முன்பு பதவி வகித்த அரசாங்கங்களின் மூலமோ இன்று பதவி வகிக்கும் அரசாங்கத்தின் மூலமோ என்ன செய்தார், என்ன செய்கிறார்? அவருக்கு தேசியம் என்பதன் அர்த்தம் தெரியுமா? எல்லோருமே அரசாங்கத்தில் இருக்கிறார்கள். ஆனால் தனித்தனி சிற்றரசர்களாக இருக்கிறார்கள். அதற்காக காலத்திற்கு ஒரு கோஷமும் வேசமும் கொண்டிருக்கிறார்கள்.

சப்பிரகமுவா, வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறவிருக்கிறது. சப்பிரகமுவ மாகாணத்தில் தனித்தனியாக மலையக கட்சிகள் போட்டிப்போடவுள்ளதாக அறிவித்துள்ளன 'மஹிந்த சிந்தனை' என்ற பேரின மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு செயற்படும் அக்கட்சிகளுக்கு மாகாணசபைகளில் தனித்தனியாக போட்டியிடுவது ஒரு கேடா என்று கேட்கத்தோன்றுகிறது. தோட்டத்தொழிலாளர்களுக்கு பெயரளவிலான சம்பளஉயர்வு கூட இல்லை. வாழ்க்கை செலவு உயர்வால் பெரிதும் பாதிக்கப்படுவர்களாக இருக்கின்றனர். நாளாந்த சம்பளமாக 500 ரூபா வழங்கப்பட வேண்டுமென்று அறிக்கை விடுகிறார்கள். அறிக்கைகளை அவித்து சாப்பிட முடியுமா? அமைச்சர் பெருமக்கள் மலையக மக்களுக்குப் பதில் கூறுவார்களா?

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 யூலை 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 115
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# சமாதானத்திற்காக விட்டுக் கொடுப்புகள் செய்யலாம்

# சமாதானத்தையே விட்டுக்கொடுக்க முடியாது

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு** அரசியல் தீர்வு காண்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தேவை இல்லை. அதனுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை ஏற்படுமாயின் அது அவர்களுடான மோதலுக்கு முடிவு கட்டுவதற்கான பேச்சுவார்த்தையாகவே அமையும் என ஒரு இந்திய அவதானி தெரிவித்துள்ளார். அதாவது இலங்கை அரசாங்கம் இராணுவரீதியாக த. வி. பு இயக்கத்தை தோற்கடித்துக் கொண்டு வருவதால் அவர்களுடன் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றி பேச வேண்டியதில்லை என்ற அபிப்பிராயத்தை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளதாகவே அந்த இந்திய அவதானி வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று வடக்கிலும் மாகாணசபை தேர்தல் நடத்தப்பட்டு மாகாணசபை அமைக்கப்படும். அதன் பிறகு மாகாணசபைகளுக்கு இன்னும் கூடிய அதிகாரங்களை வழங்க வேண்டுமாயின் அது அனைத்து கட்சிகளின் கூட்டங்களில் முடி வெடுக்கப்பட்டு மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வரலாம் என்பது மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பற்றிய நிலைப்பாடாகும்.

வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை என்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தெரித்த போதும், கிழக்குமாகாணசபை தேர்தல் பற்றியும் மாகாணசபை அமைக்கப்பட்டிருக்கும் விதம் குறித்தும் இந்தியா திருப்தி தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகள் குறித்தும் இந்தியா திருப்தி கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இத்திருப்திகளை கடந்தமாதம் இலங்கைக்கு வந்திருந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர், பாதுகாப்பு செயலர், வெளிவிவகாரச் செயலர் ஆகியோர் வெளிப்படுத்தியதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வெகு விரைவில் வடக்கும் முற்றாக கைப்பற்றப்பட்டபிறகு அங்கு மாகாணசபை தேர்தல் நடத்தப்பட்டு மாகாணசபை அமைக்கப்படும் என்று இந்திய அதிகாரிகளிடம் தான் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். எனவே மாகாணசபைளை இயக்குவதும் அதற்கு நீண்டகாலத்தில் கூடிய அதிகாரங்களை வழங்க முடியுமா என்று பார்ப்பதும் தான் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அரசியல் தீர்வாகும். அதற்காக த.வி.பு இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதில்லை என்பதுடன் த.வி.பு இயக்கத்துடனான 'பயங்கரவாதப் பிரச்சினையை' இராணுவ ரீதியான நடவடிக்கைகளினால் அடக்கி இறுதியாக அவர்களுடனான பிரச்சினையை பேசித்தீர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டால் பேசுவது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். அதுவும் தவிபு இயக்கம் ஆயுதங்களை கீழ வைத்தால் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரினவாதத்திற்கு எதிரான போராட்டங்களை தமிழ் இனவாதமாகவும் தமிழ்மக்களின் போராட்டத்தின் வளர்ச்சியாக ஏற்பட்ட ஆயுதப் போராட்டத்தினை பயங்கரவாதமாகவும் தொடர்ந்து பேரினவாத அரசாங்கங்கள் கூறிவந்துள்ளன.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆயுதப் போராட்டத்தினை 'பயங்கரவாதம்' என அழுத்தம் திருத்தமாகக் கூறுவதுடன் அப்போராட்டத்தை முன்னெடுக்கின்ற தவிபு இயக்கத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றி பேச்சுவார்த்தை நடத்தத் தேவை இல்லை என்றும் கூறிவருகிறது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நாட்டின் தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாருமே கடைசி கட்டத்திலாவது தமிழ்மக்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்றும் அதனை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஏற்றுக் கொண்டனர். மஹிந்த ராஜபக்சவும் அரசியல் தீர்வு காணப்படுமளவிற்கு தமிழ்மக்களுக்கு பிரச்சினை இல்லையென்று மறுத்துரைப்பதாக இல்லை. ஆனால் அவரின் அரசியல் தீர்வு ஒற்றை ஆட்சிமுறைக்குள்ளானது. பேரினவாதிகளின் சம்மதத்துடன் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அத்தீர்வு தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இராது என்பதும் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்களை மத்தியிலிருந்து பகிர்ந்தளிக்க முடியாது என்பதும் புரியாத விடயங்களல்ல.

பேரினவாத அடக்குமுறையே தமிழ்மக்கள் மீது யுத்தத்தை திணித்துள்ளது. அதற்கு எதிரான போராட்டம் ஆயுத நடவடிக்கைகளாகவே வளர்ந்துள்ளது. இவ் ஆயுத நடவடிக்கைகள் மீதான விமர்சனங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு பிரச்சினை இல்லையென்றும் அரசியல் தீர்வு தேவை இல்லை என்றும் கூறுவதற்கு அடிப்படையாகாது.

யுத்தத்தை நிறுத்தி தவிபு இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் தீர்வுத்திட்டம் வகுக்கப்படுவதும் அத்தீர்வுத் திட்டம் தொடர்பாக பொது இணக்கப்பாட்டை காண்பதற்காக ஏனைய சக்திகளுடனும் பேச்சு வார்த்தை நடத்துவதும் சமாதானத்தை அடைவதற்கான இன்றியமையாத நடவடிக்கைகள். இதில் ஒருவரின் அகவிருப்பு, வெறுப்புகளுக்கு இடமில்லை.

சமாதானத்தை அடைவதற்காக பல விடயங்கள் விட்டுக்கொடுப்படலாம். விட்டுக்கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சமாதானத்திற்கு அடிப்படையான விடயங்களை விட்டுக்கொடுப்பது சமாதானத்தையே விட்டுக்கொடுப்பதாகும். சமாதானம் வெறும் அமைதியல்ல. அரசியல் தீர்வுடன் கூடிய அமைதியாகும்.

**ஆசிரியர் குழு**

# புதிய -ஜனநாயக கட்சியின் 30வது ஆண்டு நினைவாக

## மத்திய குழுவின் அறிக்கை

# நாட்டின் அவலங்கள் அகற்றப்பட அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும்

**கொடிய யுத்தத்தை முன்னெடுத்து வருவதாலும்** நவதாராள பொருளாதார முறைமையை நடைமுறைப்படுத்துவதாலும் முழு நாடும் மக்களும் அதல பாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டு வருகின்றனர். தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எதனையும் முன்வைக்க மறுக்கின்ற பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ நிலைப்பாட்டினால் யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. அதே வேளை தாராள தனியார் மயப் பொருளாதாரம் ஏகாதிபத்திய உலகமயமாதலினால் வழி நடத்தப்படுகின்றது. இவ்விரண்டு பாரிய பிரச்சினைகளையும் அவற்றின் மோசமான விளைவுகளையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தி உரிய தீர்வுகளை முன்னெடுக்காது விட்டால் யுத்த அழிவுகளும் வறுமையின் கொடுமைகளும் மேன் மேலும் அதிகரித்துச் செல்லும் அபாயமே தோன்றியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய தலையாய பொறுப்பும் கடமையும் இந்நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் உரியதாகும். தவறான அரசியல் பொருளாதார ராணுவக் கொள்கைகளை முன்னெடுக்கும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போருக் கும் அதே கொள்கைகளை வெவ்வேறு வடிவங்களில் நடைமுறையாக்கிக் கொள்ள அதிகாரத்திற்கு வர எத்தனிப் போருக்கும் எதிராக பாரிய எதிர்ப்பு அழுத்தங்களைக் கொடுக்கும் மக்கள் இயக்கங்கள் உருவாக வேண்டும். இதற்கான பொது வேலைத் திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்க நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற் போக்கு சக்திகள் முன்வரல் வேண்டும். இவ்வாறு தோற்றுவிக்கப்படும் சக்தி மிக்க மக்கள் இயக்கத்தினால் மட்டுமே நாட்டையும் மக்களையும் எதிர் நோக்கியுள்ள அபாயகரமான சவால்களை முறியடித்து முன்செல்ல முடியும் என்பதை புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் 30வது ஆண்டு நினைவை யொட்டி அதன் மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் தொடரும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாமலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க இயலாமலும் மகிந்த சிந்தனை அரசாங்கம் திணறி நிற்கிறது. இத்தகைய அவல நிலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தினால் மட்டும் உருவாகிய ஒன்றல்ல. கடந்த மூன்று தசாப்த காலத்தில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அரசியலமைப்பும் அதன் கீழான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினதும் மோசமான எதிர் விளைவுகளேயாகும். 1978ல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கி வைத்த தனிக் கட்சி தனிநபர் சர்வாதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் இரண்டு ஆளும் வர்க்க ஆண்டபரம்பரைக் கட்சிகளும் அதிகாரத்தில் இருந்து வந்துள்ளன. இத்தகைய கட்சிகளாலும் அவற்றின் தலைமைகளாலும் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் காண இயலவில்லை. அதற்கு அவர்களது பௌத்த சிங்கள பேரினவாத நிலைப்பாடு இடமளிக்கவில்லை. அதேபோன்று உலகமயமாதலின் நிர்ப்பந்த வற்புறுத்தலால் பொருளாதார முறைமைகளை வரவேற்று நடைமுறைப்படுத்தினர். அதற்கு இவர்களது ஏகாதிபத்திய அரவணைப்பும் விசுவாசமும் காரணமாகியது. இவை அனைத்தினதும் ஒட்டுமொத்தப் பாதிப்புகளையும் பிரச்சினைகளையும் நாட்டின் சாதாரண உழைக்கும் மக்கள் யுத்த அழிவு களாகவும் பொருளாதார நெருக்கடிகளாகவும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பாகவும் அனுபவித்து வருகின்றனர்.



பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல்.

அதேவேளை யுத்தத்தின் மறைவில் ஊழல் மோசடி அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றால் அதிகாரத்தில் இருந்தவர்களும் இருப்போரும் அவர்களது நெருக்கமானவர்களும் குறுக்கு வழிகள் மூலம் சொத்துக்கள் சேர்த்து பெரும் செல்வந்தவர்களாகிக் கொண்டனர். ஆனால் தெற்கின் சாதாரண தொழிலாளர் விவசாயிகளின் பிள்ளைகள் யுத்தத்தில் பீரங்கித் தீனியாகி மாண்டு வந்துள்ளனர். இந் நிலை இன்றுவரை நீடிக்கிறது. அவ்வாறே வடக்கு கிழக்கில் நாளாந்தம் யுத்தத்தாலும் போராட்டத்தாலும் மடிந்து வருவோர் சாதாரண உழைக்கு மக்களும் அவர்களது பிள்ளைகளுமாகவே உள்ளனர்.

மறுபுறத்திலே அந்நிய பல்தேசியக் கம்பனிகள் நாட்டின் வளங்களை கொள்ளையிட்டுச் செல்வதுடன் தொழிலாளர்களின் உழைப்பையும் சுரண்டிச் சென்றவண்ணம் உள்ளன. நாட்டின் விவசாயம் சீரழிக்கப்பட்டு இறக்குமதி நுகர்வுச் சந்தை விரிவாக்கப்பட்டது. அதனால் விவசாயிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட எமது நாட்டில அவர்கள் ஓட்டாண்டிகளாக்கப்பட்டுள்ளனர். அரிசி முதல் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக வெளிநாட்டுக் கப்பல்களை எதிர்பார்த்து நிற்பதுடன் மக்கள் அவற்றுக்கு அதிகவிலை கொடுத்து வாங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான உண்மைகள் மறைக்கப்பட்டு எண்ணெய் உணவுப் பொருட்களின் உலகச் சந்தை விலை உயர்வாலேயே நமது நாட்டில் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதாக ஆட்சியினர் மக்களை ஏமாற்றி வருகின்றனர். அத்துடன் யுத்தத்திற்கு நாளாந்தம் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவிடப்படுவதாலும் பணவீக்கமும் பொருட்களின் விலைகள் அதிகரிப்பும் இடம் பெறுவது மறைக்கப்படுகிறது. வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பள உயர்வை வழங்க முடியாத நிலையில் அரசாங்க தனியார் துறையினரின் எதிர்ப்பைச் சமாளிக்கும் விதத்தில் அற்ப சம்பள உயர்வை (அரசாங்க ஊழியர்களுக்கு யூலை முதல் 625/= ரூபாவை) அளித்துள்ளது அரசாங்கம். இது யானைப் பசிக்குச் சோளப் பொரி போன்றதாகும்.

யுத்தம் கோரத்தனத்துடன் நீடித்துச் செல்வதால் அழிவுகளும் இடப் பெயர்வுகளும் தொடர்வதுடன் மோசமான மனித உரிமை மீறல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் ஆட்கடத்தல்கள் காணாமல் போதல்கள் கட்டுப்படுத்த முடியாதவாறு தொடர்கின்றன. ஜனநாயக தொழிற்சங்க உரிமை மறுப்புகள் புதிய புதிய வடிவங்களில் மேற்கொள்ளப்படுகிறன. அத்துடன் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வருகிறார்கள். அரசியல் கைதிகள் நீண்ட காலமாக விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தாராள தனியார் பொருளாதாரத் தளங்களில் அமெரிக்க மேற்குலக யப்பானிய பல்தேசியக் கம்பனிகள் புகுந்து நிற்கின்றன. அவ்வாறே இந்தியக் கம்பனிகளும் வந்து கொண்டன. அமெரிக்க இந்திய ஆதிக்க சக்திகள் அன்று முதல் இன்றுவரை யுத்தத்தை முன்னெடுப்பதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சகலவகைப் பங்களிப்புகள் வழங்கி வந்துள்ளன. அதேவேளை அவர்களது இலங்கை மீதான ஆதிக்கப் போட்டி தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ் இரு சக்திகளும் ஒரு நேரடித் தலையீட்டிற்கு தயாராகி வரும் போக்கே காணப்படுகிறது.

எனவே பயங்கரவாதம் எனப் பெயர் மாற்றி அழைக்கப்படும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேவேளை மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்தி வாழ்க்கைச் செலவின் சுமையைக் குறைக்க தேசிய பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்ட அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படுவது அவசியமானதாகும். இவற்றுக்கான உறுதி மிக்க மக்கள் இயக்கம் பாராளுமன்ற ஆசனங்கள் பதவிகள் என்ற நோக்கங்களுக்கு அப்பால் கட்டி வளர்க்கப்படுவதையே புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்தி நிற்கின்றது.

**மத்தியகுழு**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# காலத்திற்கு முந்திய மா.சபைத் தேர்தல்?

## அமைப்பை மாற்றாமல் ஆட்களை மாற்றிப் பயன் இல்லை

சண்முகம்

மகிந்த சிந்தனை அரசாங்கம் நடாத்தும் மாகாணசபைத் தேர்தல் திருவிழா கிழக்கு மாகாணத்திற்குப்பின் இப்போது வட மத்திய சம்பிரகமுவ மாகாணங்களில் நடைபெற உள்ளது. இவ்விரு மாகாணசபைகளினதும் பதவிக் காலம் முடியும் முன்பே கட்டாயக் கலைப்பின் மூலம் தேர்தல் நடாத்தப்படுகிறது. அம் மாகாணங்களின் அபிவிருத்திகளோ முன்னேற்றங்களோ தங்கு தடையின்றி முன்னெடுக்கப்படுவதற்காக இத் தேர்தல் நடாத்தப்படவில்லை. முற்றிலும் ஆளும் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் இருப்பை உத்தரவாதப்படுத்தி தமது ஆட்சி அதிகாரப் போக்கை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள் எனக் காட்டிக் கொள்வதற்கே மேற்படி தேர்தல் நடாத்தப்படுகிறது.

மகிந்த சிந்தனை அரசாங்கம பதவிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கழிந்து விட்டன. இக்காலகட்டத்தில் யுத்தம் மும்மரமாக்கப்பட்டதும் அழிவுகள் பெருகியதும் தான் கண்ணெதிரே காணப்பட்டவையாகும். இந்த யுத்தத்தின் எதிர் விளைவாக பொருளாதார நெருக்கடி உச்சமடைந்த வாழ்க்கைச் செலவு வானத்தை நோக்கி எட்டமுடியாத அளவுக்கு உயர்ந்தன. அதனைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்தால் இயலவில்லை. அதற்குக் காரணம் பொருளாதார நெருக்கடியைப் பூதாகாரமாக்கிய யுத்தத்தை நிறுத்த அர சாங்கம் தயாராக இல்லாமையே ஆகும்.

கடந்த 30 வருடங்களில் தாராள தனியார் மயப் பொருளாதார ஊடுருவல்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீரழித்து வந்துள்ளன. அதே வேளை யுத்தம் பொருளாதார நெருக்கடிகளை மறைந்து திசை திருப்பியும் வந்தது. சுருங்கக் கூறின் உலக மயமாதலின் கீழான நவதாராள பொருளாதாரக் கொள்கையும் தமிழ் மக்கள் மீதான யுத்தமும் கை கோர்த்து பயணித்து வந்துள்ளன. அவற்றின் பயங்கரமான விளைவுகளையே நாட்டு மக்கள் அனைவரும் அனுபவிக்கின்றனர். இன்றும் கூட அவை பற்றி அறிந்து கொள்ள முடியாதவாறு யுத்த வெற்றிகள் எனக் கூறப்படுவற்றால் ஏமாற்றித் திசை திருப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய திசை திருப்பல்கள் மத்தியில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தி இங்கு ஜனநாயகம் உண்டு என்றும் அதன் மூலம் மக்கள் எமக்கு வாக்களித்து பதவிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் எனக் காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்தத் தேர்தலில் மகிந்த சிந்தனை அரசாங்கம் வெற்றி பெற்று மாகாண சபைகள் இரண்டினதும் ஆளும் பதவிகளை அடைந்து கொள்ளலாம் என்றே திடமாக நம்புகின்றது. இதற்கு முதன்மை அம்சமாகக் கொள்வது பேரினவாத யுத்தம் என்ற மயக்க மாத்திரை ஏற்கனவே அதிக அளவு கொடுக்கப்பட்டதால் ஏற்பட்ட மயக்கத்திலிருந்து சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் மீண்டும் சுய நினைவுக்குத் திரும்பவில்லை. அவ்வாறு திரும்பாமல் இருப்பதற் காகவே நாளாந்தம் வடக்கு யுத்த முனை வெற்றிகள் என்ற மேல திக மாத்திரைகள் வழங்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய சூழ லில் இலகுவாக மாகாணசபைகளில் ஆளும் தரப்பு வென்று விட லாம் என்ற நம்பிக்கையில் உள்ளது.

அடுத்த அம்சமாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே பிளவடைந்து பல வீனப்பட்ட நிலையில் இருந்து வருகிறது. அத்துடன் யுத்தத்திற்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும். மக்களை ஈர்க்கக் கூடிய மாற்றுக் கொள்கைகளை முன்வைக்க முடியாத கையறு நிலையிலேயே இருந்து வருகிறது. அத்துடன் கட்சித் தலைமைக்குள் பதவி அதிகாரப் போட்டி இருந்து வருவதும் அதனை அரசாங்கத்தரப்பு தூண்டி மேலும் பிளவையும் பலவீனத்தையும் ஏற்படுத்த முயன்றும் வருகின்றது. நிறைவேற்று அதிகார தனிக்கட்சி தனி நபர் சர்வாதிகார முறைமையின் கீழ் பதவிகள் பணக்கட்டுகள் தாராளமாக அள்ளி வீசப்படுவதால் அதற்கு முன்னால் ஐக்கிய தேசியக் கட்சியால் நின்றுபிடிக்க முடியவில்லை. இதில் ரசனைக்குரிய மற்றொரு விடயம் யாதெனில் இதே வழிமுறைகளைத் தான் முன்பு ஆட்சியில் இருந்த போது ஐக்கிய தேசியக் கட்சி செய்து தனது ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்தி வந்தது என்பதுதான். அத்துடன் யுத்தத்தை நடாத்தியும் உலகமயமாதலை உள்வாங்கியும் ஜனநாயக மறுப்புகளைச் செய்தும் வந்ததில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாராள பங்கு உண்டு. இத்தகைய நாசங்களைச் செய்து ஆட்சி நடத்தலாம் என்பதை முன்னுதாரணப்படுத்தியவர்கள் அவர்களேயாவர். அதனால் இன்று தாம் ஆட்சிக்கு வரவேண்டும் எனக் கோருகிறார்களே தவிர எத்தகைய புதிய மாற்றுக் கொள்கைகளையும் முன்வைக்கத் தயாராக இல்லை.

அடுத்த பெரிய எதிர்க்கட்சியாக விளங்கியது ஜே.வி.பி. அக்கட்சி உடைக்கப்பட்டுவிட்டது. ஐ.ம.சு முன்னணி மூலம் பெறப்பட்ட 38 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தனிப் பெரும சக்தி என மார்தட்டியது. அடுத்து தாமே ஆட்சிக்கு வரப் போவதாகவும் கனவு கண்டது. அந்தோ பரிதாபம். இன்று நாலாம் ஐந்தாம் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இதனை உடைத்ததில் மகிந்த சிந்தனையின் சகோதரர்களுக்குப் பூரண பங்கு உண்டு. இத்தகைய ஜே.வி.பி. யின் பலவீனச் சூழலில் வட மத்திய சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் அரசாங்கம் இலகுவாக வெல்லலாம் என்றே கணக்குப் போட்டு நிற்கிறது.

அத்துடன் இவ்விரு மாகாணங்களில் காணப்படும் தமிழ் முஸ்லீம் வாக்குகளைத் தம்மால் போசித்து பராமரிக்கப்படும் தமிழ் முஸ்லீம் தலைமைகளைக் கொண்டு பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையும் அரசாங்கத்திற்கு உண்டு. இவற்றுக்கும் அப்பால் அன்றாடம் வடக்கு யுத்த முனையில் ஈட்டப்படுவதாகக் கூறப்படும் ராணுவ வெற்றிகள் வாக்குச் சேகரிப்புக்கு உதவும் என்றே அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இவற்றுக்கும் மேலாக ஆளும் தரப்பாக உள்ள எவருக்கும் உள்ள வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி வெற்றிக்குரிய வாக்குகளை பெற்றுவிடலாம் என்பதும் சாத்தியமானதாகும். அச்சுறுத்தி எதிர்த் தரப்பு ஆதரவாளர்களை வாக்களிக்க விடாது தடுப்பது மேலாதிகமாக கள்ளவாக்கிடுவது தேர்தல் பெட்டிகளை மாற்றுவது தேர்தல் அதிகாரிகள் ஊழியர்களைப் பயன்படுத்துவது போன்றவற்றுக்கான வசதிகள் ஆளும் தரப்பிற்கு உண்டு. இதனைக் கச்சிதமாக அரங்கேற்றிக் காட்டியவர்களே ஐக்கிய தேசியக் கட்சியினர் தான். அதனையே பின்பு வந்த பொதுசன முன்னணியும் ஐ.ம.சு முன்னணியும் செய்தது. அண்மைய கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மகிந்த சிந்தனை செய்து கொண்டது. எல்லாவழி முறைகளையும் விட இறுதி நம்பிக்கை இவற்றின் மீதே தங்கி உள்ளது. இவையாவும் ஜனநாயகத் தேர்தலுக்குள் அடக்கம்.

எவ்வாறாயினும் இம் மாகாணசபைத் தேர்தலில் முனனிற்கும் அர சாங்கத் தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி யம் மக்கள் முன் பாகக் குற்றவாளிகளாகவே உள்ளனர். இவர்கள் மூன்று தரப்பினரும் கடந்த முப்பது ஆண்டு காலப் பகுதியில் யுத்தத்தையும் பொருளா தார நெருக்கடிகளையும் உச்ச நிலை நோக்கி வளர்த்து வந்த தேச விரோத மக்கள் விரோத சக்திகளாவர்.

இவர்கள் இன்றைய அரசியல் பொருளாதார சமூக அமைப்பிலும் அசைவியக்கத்திலும் மாற்றங்கள் எதனையும் செய்ய விரும்பாதவர்கள். முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையில் அடிப்படையான மாற்றம் எதனையும் கோரத் தயாராக இல்லாதவர்கள். ஏற்கனவே உள்ள கதிரைகளில் உள்ளவர்களை மாற்றி அமர்த்துமாறே மக்களைக் கேட்கிறார். கடந்த 60 வருடப் பாராளுமன்ற ஆட்சி முறையும் சுமார் இருபது வருட கால மாகாணசபை ஆட்சியும் எவற்றைக் கிழித்தன. நாம் கூறுவது நாட்டிற்கும் மக்களுக்கும் உதவாத முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையும் அதனால் பாதுகாக்கப்படும் இன்றைய ஏற்றத் தாழ்வும் சுரண்டலும் ஒடுக்கு முறைகளும் மிகுந்த சமூக அமைப்பு முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அதனை அரசியல் விழிப்புற்ற மக்களது பரந்துபட்ட பேரெழுச்சியானால் மட்டுமே சாத்திய மாக்க முடியுமே தவிர தேர்தல்களால் அல்ல. செக்கிழுத்த பாதையில் சுழன்று வரும் மாடுகளை மாற்றிப்பயன் இல்லை. செக்கு களையே இல்லாமல் செயது மக்களுக்கான நாட்டிற்கான தேசிய இனங்களுக்கான அடிப்படை ஆட்சியமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

# பூனை - வண்ணத்துப்பூச்சி - சில மனிதர்கள்

மூன்றடி அகலம்
நான்கு மனிதரின் உயரம்
ஒருவரேனும் தாண்டிடாவண்ணம்
உச்சிதனில் சுருள் சுருளாக காவற்கம்பி
இதனை யாவருமறிவர்
சிறைச்சாலை மதிலாக.

எங்கோ செல்லும் பறவையின் எச்சத்தில்
எஞ்சி நின்ற விதையொன்று உடைப்பெடுத்து
கம்பிச் சுருளின் மத்தியில்
தன்னை அறிமுகம் செய்தது' ஆலம் கன்றாக

கிழமைகளோ நாலிரண்டு கழிய
தன் சூழல் வளத்துக்கேற்ப உயர்ந்தது ஆலம்
இளமையில் யாவும் அழகே!
அழகையே அழகுபடுத்த
பல்வண்ணம் தரித்த ஒரு வண்ணத்திப் பூச்சி-
ஆலம் உச்சியில்
இவையாவும் கம்பிச் சுருளின் மத்தியில்

மதிற் தொடரின்
ஆலத்தின் மிக அருகில்
கம்பிச் சுருள் தொடாத ஒரு பகுதி- இங்கு
சுருள்க் கம்பித்தான் இல்லை- ஆனால்
பெருச்சாளி, சுண்டெலி, பூச்சி, குருவி
எதையும் தன் குறியில் சற்றேனும் தப்பவிடாத
கரும் பூனை
கடுவப் பூனை
பெரும் பூனை கவனத்துடன், நிதானத்துடன்
கம்பியில்லா சுவர் உச்சியில்
ஆலத்தின் அருகில்

இக் காட்சியைக் கண்டனர் கைதிகள்
சுரண்டும் காட்டாட்சியில்
கொலை, கொள்ளை, கடத்தல், திருட்டு,
போதை மருந்து, பாலியல் வன்முறை
பொய், பித்தலாட்டம் என
இவர்களுக்கா பஞ்சம்

விதிவிலக்காகச் சிறைப்பட்டோர் ஒரு சிலர்
பலர் குழுக்களாகச் சேர்ந்து
பிடித்தனர் பந்தயம்
ஒரு பீடிக் கட்டுக்கை
குழுக்கள் பலதையும் கூறியது
பூனையார்-
"முயற்சியில் வெல்லும்" என்றது ஓர் அணி
"வெல்லாதென்றது எதிரணி
"சுருள் குத்த காயப்படும்" என்றது ஓர் அணி
"காயப்படா" தென்றது அதன் எதிரணி
"மதிலில் இருந்து இடறி விழும்" என்றது ஓர் அணி
"விழாதென்றது" இன்னோர் அணி
வண்ணத்துப் பூச்சி-
"பறக்கும்" என்றது ஓர் அணி
"பறக்கா" தென்றது மற்றோர் அணி
"உயிர்விடும்" என்றது ஓர் அணி
"தப்பும்" என்றது இன்னோரணி
பந்தயமோ விறுவிறுப்பானது
கைதிகள் சுறுசுறுப்பாகினர்
ஓர் ஓரமாக நின்ற அதிகாரிகள் பல்லிளித்தனர்

கைதிகள் கூட்டத்தில் ஐந்து இளைஞர்கள்
கூடினர்- ஏதோ கதைத்தனர்
பக்கத்தில் நின்றவர்களுக்கு
ஓரிருச் சொல் காதிற் புகுந்தது
"கற்கள் எறிவோம்"
"வேண்டாம், வேண்டாம்"
"மதிலுக்கு அப்பால் இருப்பேர்
மண்டை உடையும்"
இப்படி ஏதேதோ- ஆனால்
வேகமாயும், விவேகமாவும்

கணப்பொழுது கழிய
ஐவரில் இருவர் எங்கோ விரைந்தனர்- இரு வேறு திசையில்
போனவர் மீண்டனர் நொடிப்பொழுதில்
ஒருவர் கையில் பழைய காக்கிதத் தாள்
மற்றவர் கையில் கிழிந்த உள்ளாடையின் இறப்பர் நாடா

எஞ்சிய மூவரில் இருவர் வேலைகள் செய்தனர் விரைவாக
ஒருவர் காகிதத்தை கீலமாக்கி
சிறிதாக உருட்டி
ஆங்கில எழுத்து 'V' ஆக்கினார்.
மற்றவர் இறப்பர் நாடாவை
பூனைக்கு எதிர் திசையில்
சிறையின் கம்பிக் கதவில்
இரு கம்பிகளுக்கிடையே கட்டினார்.
இதோ நொடியில் கவண் தயார்
மீதமானவர் உருட்டிய காகிதத்துண்டை எடுத்து
இறப்பர் பட்டியை இழுத்து
குறித்தவாறு ஏவினார் பூனைக்கு
பூனை அதிர்ந்தது
இடறி விழுந்தது
அதிகார, கொலை வெறி பூனை வீழ்ந்தது
பால் திரண்டு வெண்ணை வருகிற நேரமதில்
சட்டி உடைந்தது போல் பந்தயம். சினத்துடன் திரும்பினர்
எதிரில்- இளைஞர் ஐவர்
இவர்களையும், இவர்கள் செயலையும்
அறிந்த பந்தயக்காரர்
சினம் தவிர்த்து அமைதியாயினர்
பூனை- வண்ணத்துப் பூச்சி
கைதிகள்- பந்தயம்
காட்சிக் களிப்பில் இருந்த
சிறைக்காவலாளிகளின் அதிகாரியொருவர்
தன் களிப்பில் மண்விழ
கோபமாய் வினவினார்
யாரடா அவர்கள்?
கேள்விக்கு பதில்
வயதான குரலில்- ஆனால்
படுஞ் சூடாகவும்
மிகத் தெளிவாகவும்
கனமாகவும் ஒலித்தது
"அவர்கள் தொழிலாளியின் பிள்ளைகள்"
"அவர்கள் தொழிலாளரின் தோழர்கள்."

சு.கேசனன்

# யூ. என். பி ஜே. வீ. பி கட்சிகளின் இயலாமை

இலங்கை அரசியலில் கட்சித் தாவல்கள் அண்மைக் காலங்களில் புதிய உச்சங்களை எட்டியுள்ளன. இது நாட்டின் பாராளுமன்ற அரசியலின் சீரழிவை மட்டும் குறிக்கவில்லை. அதன் அடிப்படையான பலவீனத்தையும் அடையாளங் காட்டுகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் முழுமையான தாக்கத்தை மக்கள் இன்னம் அனுபவிக்கவில்லை. இன்றைய சிக்கல் வெறுமனே உலகச் சந்தையில் விலைவாசி ஏற்றங் காரணமானதல்ல. நாட்டின் அடிப்படையான பொருளாதாரத் தளம் சிதைக்கப்பட்டு நாட்டின் உழைப்பாற்றலும் உற்பத்தித் திறனும் சரிந்து கிடக்கின்றன. இவற்றுக்குரிய காரணங்களில் இரண்டு முக்கிய மானவை. ஒன்று ஏகாதிபத்திய உல மயமாக்கலுக்குக் கீழ்படிவான பொருளாதாரக் கொள்கைகள், மற்றது போர். போருக்கு ஒரு முடிவு காணப்படாமல் நிலையான ஒரு அமைதி வராமல் நாட்டின் தேசிய இனங்களிடையே பகை முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் நாட்டின் பொருளாதாரத்தை அதன் இன்றைய திசையிலிருந்து மாற்ற முடியாது. எனவே தேசிய இனப்பிரச்சனையே உடனடியான தீர்வை வேண்டி நிற்கிறது. அதே வேளை நாட்டின் அத்தியாவசியத் தேவைகளில் தன்னிறை வும் அவசியமாகிறது. அதற்கான பாதை தவிர்க்க இயலாமலே உலகமயமாதலையும் அந்நிய ஆதிக்கத்தையும் மறுத்து நிற்கிற ஒன்றாக அமைய வேண்டும்.

எனினும் இலங்கையின் பிரதான அரசியற் கட்சிகள் எதுவும் இந்த உண்மைகளை ஏற்றுத் தமது அரசியல் திட்டங்களை முன்வைக்கிறதாகத் தெரியவில்லை. அரசாங்கம் பற்றிய பலவேறு குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும் பிரதான எதிர்க்கட்சிகளான யூஎன்.பியும் ஜே.வி.பியும் எந்த விதமான மாற்றுக் கொள்கைகளையும் மக்கள் முன் வைக்கவில்லை. தேசிய இனப்பிரச்சனையைச் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிற் சுமுகமாகத் தீர்க்கிற எண்ணம் இரண்டு எதிர்க்கட்சிகட்கும் இல்லை.

அந்நிய நெருக்குவாரங்களாலும் உள்நாட்டில் இருந்த பொருளாதார நெருக்கடியாலும் போரை வெல்லமுடியாத ஒரு சூழலில் அமைதிப் பேச்சுக்கட்கு முன் வந்த யூஎன்.பி அப்பேச்சுக்களை ஒரு தீர்வை நோக்கி நகர்த்த ஆயத்தமாயில்லாததோடு விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துகிற காரியங்களைத் திரை மறைவில் நடத்தி வந்தது. இன்று ராஜபக்ஷ அரசாங்கம் போரை மிகவும் மூர்க்கத்தனமாக முன்னெடுக்கிறது. கிழக்கில் பெருந் சேதத்தை விளைவித்து கிழக்கின் பெரும் பகுதியைத் தனது ராணுவக் கட்டுப்பாட்டிற்குட் கொண்டு வந்ததைக் காட்டி அரசாங்கம் தனது செல்வாக்கைக் காப்பாற்றி வருகிறது. அதற்கு ஆதாரமாக இருப்பது சிங்கள மக்கள் நடுவே வளர்த்தெடுக்கப்பட்டுள்ள பேரினவாத அரசியல். இப் போரின் விளைவான பேரிழப்புக்களை விடக் கிழக்கிற பெறப்பட்ட வெற்றி முக்கியமாகத் தெரிகிறது என்றால் விலைவாசி ஏற்றம் பொருளாதாரத்தின் சரிவு என்பன அரசாங்கத்திற்கு நெருக்கடியை உண்டாக்கவில்லை என்றால் எதிர்க் கட்சிகள் என்ன செய்கின்றன என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

யூஎன்.பி அரசாங்கத்தின் போர் முயற்சிகளை எதிர்ப்பதானால் அது பேரினவாத அரசியலுக்கு எதிரான பிரசாரத்தையும் வடக்கு- கிழக்கில் போரால் ஏற்பட்ட அழிவுகளையும் அவலங்களையும் சிங்கள மக்களுக்கு விளக்குகிற பணியைத் தொடர்ச்சியாக முன் னெடுத்திருக்க வேண்டும். அது யூ என. பிக்கு இயலாதது. ஏனெனில் அது ஒரு பேரினவாதக் கட்சி முன்னைய பொதுசன முன் னணி அரசு போரை வெல்ல இயலாத ஒரு சூழலில் அதன் போர் முயற்சிகள் தோல்வி கண்ட ஒரு பின்னணியில் பலவேறு நெருக் குவாரங்களின் காரணமாகவும் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்தது. ஆனாற் பேரளவிலான போர் நிறுத்தம் என்பதற்கு அப்பால் அதன் அக்கறைகள் போகவில்லை. இன்று அரசாங்கம் போரில் வெல்லுகிறது என்று மக்கள் நம்புகிற சூழ் நிலையில் அது போரை எதிர்த்துத் தன் அரசியலை நடத்த ஆயத்தமாக இல்லை. போரை எதிர்க்காமல் போர் நடத்தப்படும் விதத்தையும் ஊழலையும் மனித உரிமை மீறல்களையும் ஊடக சுதந்திர மறுப்பையும் விமர்சித்து அடிப்படையான பிரச்சனையைத் தொட மறுக்கிறது. விலைவாசி ஏற்றத்திற்கு எதிரான அதன் ஆர்ப்பாட்டங்களை ஒரு அரசியல் இயக்கமாக முன்னெடுக்க இயலவில்லை. வாக்கு வங்கிக்கான




ஒரு பம்மாத்தாகவே செய்கிறது.

ஜே.வி.பியின் நிலை அதிகம் வித்தியாசமானதல்ல தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்த அதன் பேரினவாதம் ஒரு புறமிருக்க, முற்றிலும் சந்தர்ப்பவாத நோக்கங்கட்காகவே ஜே.வி.பி. அதிகாரப்பரவலாக்கத்தை எதிர்த்து வந்துள்ளது. அதன் பாராளுமன்ற அரசியல் எதிர்பார்ப்புக்கள் வளர்ச்சி பெற்றதையொட்டி அது பயங்கரவாத எதிர்ப்பு என்ற பேரில் போரின் தீவிரப்படுத்தலை வற்புறுத்தி வந்துள்ளது. எனவே தேசிய இனப்பிரச்சனைக்கான சுமுகமான தீர்வு பற்றியோ போர் நிறுத்தம் பற்றியோ அதனாற பேச இயலாதளவுக்கு அது பேரினவாத இன ஒழிப்புப் போருடன் நெருக்கமாக அடையாளங் காணப்படுகிறது.

பொதுசன முன்னணியுடன் கூட்டணி அமைத்துத் தன் செல்வாக்கிற்கும் மேலாக பாராளுமன்ற ஆசனங்களை வென்று அரசாங்கத்திலும் பங்காளியான காலத்துடன் பாராளுமன்ற அரசியல் வாழ்வின் சொகுசுகளையும் அனுபவிக்கத் தொடங்கிய அதன் தலைமையால் இப்போது பதவி மோகத்திலிருந்து விடுபட இயலவில்லை. பொதுசன முன்னணி ஆட்சியைக் கவிழ்க்க வேண்டிய நீண்ட காலத் தேவைக்கும் தனது பதவிகளைக் காப்பாற்ற வேண்டிய குறுகியகாலத் தேவை காரணமாகவும் அதைக் கவிழாமற் காக்கும் நிர்ப்பந்தமுமே கடந்த மூன்றாண்டுகளாக அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டிய நிலையில் ஜே.வி.பியை வைத்திருந்தன. இன்றைய பிளவின் நடுவிலும் அந்த நிலையே நீடிக்கிறது. அரசாங்கம் மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமைகளை ஏற்றி வருகிற நிலையில் அதற்கெதிராக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யாமல் போராட வேண்டிய நேரங்களிற் போராடாமல் இருந்த ஜே.வி.பியின் எந்த எதிர்ப்பும் நம்பகமாக இராது என்பது தான் உண்மை.

இப்போதுங் கூடத் தனது இருப்புக் எதிராக அரசாங்கம் கொடு



க்கிற நெருக்குவாரங்களின் விளைவாகவும் வீரவன்ச மூலம் ஏற்படுத்திய பிளவின் விளைவாகவும் ஜே.வி.பி பொது வேலை நிறுத்தம் என்ற மிரட்டலை முன்வைத்தாலும் அதனால் அதை ஒரு தொடர்ச்சியான போராட்டமாக்கி அரசாங்கத்தைப் பணிய வைக்க இயலாது. எனினும் தனது நம்பகத்தன்மையை நிலை நாட்ட வேண்டிய கட்டாயத்தின் கீழ் அது செயற்படுகிறதே ஒழிய ஒரு வெகுசனப் போராட்டத்திற்கான நோக்கமோ வழி நடத்தும் ஆற்றலோ அதனிடம் இல்லை.

நாட்டின் இன்றைய பொருளாதார அவலம் மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள சுமைகள் மனித உரிமை மீறல்கள் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்த நிலை அரசின் அதிகாரத் துஷ்பிரயோகம் பொது மக்களின் பாதுகாப்பின்மை அரசாங்க ஊழல்கள் ஆகிய அனைத்தும் மறுப்பின்றித் தொடரக் காரணம் என்ன என்ற கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பாமல் அவற்றைத் தீர்க்க முடியாது. அவற்றுக்குக் காரணமாக உள்ள போரைக் கணிப்பில் எடுக்காமல் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு கேட முடியாது. அரசாங்கம் தனது தவறான செயல்களை எல்லாம் பயங்கரவாதத்திற்கு எதிரான 'வெற்றிகரமான' போர் என்ற போர்வையின் கீழ் நியாயப்படுத்திக் கொள்கிறது. அந்தப் போர்வையைக் கிழித்தெறிய ஆயத்தமற்ற யூஎன்.பியும், ஜே.வி.பியும் அரசாங்கத்தின் வெவ்வேறு தவறுகளைத் தனித் தனிப் பிரச்சனைகளாக வைத்துப் போராடுவதற்கு முயலகின்றன. ஆனால் அவற்றால் எந்தப் போராட்டத்தையும் தொடர்ச்சியான ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுக்க இயலாமலுள்ளது. அவ்வாறு வளர்த்தெடுப்பதாயின் அவை அவற்றின் பாராளுமன்ற அரசியல் எதிர்பார்ப்புக்கட்கும் அப்பால் அவற்றின் கட்டுப்பாட்டை மீறி வளரலாம். வெகுசனப் போராட்டம் என்ற ஒன்றுக்கு இரண்டு கட்சிகளுமே ஆயத்தமாக இல்லை. ஜே.வி.பியின் 'வெகுசன' இயக்கங்கள் எல்லாமே பேரினவாத அரசியற் பிரசாரக் கருவிகளே ஒழிய மக்களின் பிரச்சனைகளை முன்வைத்தும் போராடும் அமைப்புக்கள் அல்ல என்பதும் கவனத்திற்குரியது.

ஊடகச் சுதந்திரம் ஆட்கடத்தலுக்கு எதிர்ப்பு என்பன போன்ற விடயங்களிலும் இரண்டு கட்சிகளும் தங்களுக்கு அரசியல் ஆதாயம் தேடுகின்றனவே ஒழிய அவற்றைப் பற்றிய ஆழமான கேள்விகளை மக்களிடையே எழுப்பி இன்றை சனநாயக மறுப்பின் அடிப்படை என்ன என்று அடையாளங்காட்ட அவை விரும்பவில்லை.

கிழக்கு மாகாணத் தேர்தல் ஒரு மோசடி என்று சொல்லிக் கொணடே அதற்கெதிரான பகிஷ்கரிப்பு இயக்கத்தை முன்னெடுக்க இக் கட்சிகள் தவறின. அவை மக்கள் இயக்கங்கட்கு ஆயத்தமாக இல்லை என்பது அதிலிருந்து விளங்கியிருக்கும்.

உண்மை என்ன வென்றால் அவை மக்கள் இயக்கங்கட்கு அஞ்சுகின்றன. ஏனெனில் இரண்டு கட்சிகளதும் இருண்ட கடந்த காலங்களின் பிசாசுகள் மறைந்து கிடக்கிற குகை வாசல்களை ஒரு மக்கள் போராட்டம் திறந்து விடுமே எனப் பயப்பிடுகின்றன. தமது மக்கள் விரோத அரசியல் பற்றியும் துரோகங்கள் பற்றியும் சுயவிமர்சனம் செய்ய இயலாததாலேயே தமது கடந்த காலங்களைக் கேள்விக்குட்படுத்த அவை ஆயத்தமாக இல்லை. அதனால் அவர்களது அரசியல் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றுகிற அரசியலாக மட்டுமன்றிக் கையாலாகாத்தனத்தின் அரசியலாகவுமே தொடர இயலும்.

**-மோகன்-**

**மலையக.... 4ம் பக்கத் தொடர்ச்சி**

அடைந்த அமைச்சுப் பதவிகளும் பிற சலுகைகளும், மலையக வரலாறு இவற்றைப் பதிவு செய்தே வருகிறது. நமது வறுமை துன்பங்களைப் போக்க கொழும்பிலும் வேறு நகரங்களிலும் வேலை செய்யும் எங்கள் பிள்ளைகள் எதிர் நோக்கும் சிக்கல்கள் சொல்லில் அடங்காதவை. அவர்களை நினைத்து நாங்கள் எங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றோம். இன்று மலையகத்தை சேர்ந்த பலர் காரணம் இல்லாமலே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் பலர் காணாமல் போயிருப்பதும் தொடர் கதையாய் உள்ளது. அது மட்டும் இல்லாமல் இப்போது மலையகத்தில் பல இடங்களில் பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லி தோட்டங்களில் இருந்து பல பேர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். ஆனால் உங்களது நாற்காலி சுகம் இவை பற்றி யெல்லாம் உங்கள் வாய்களை திறக்க விடுவதில்லை. மிஞ்சிப் போனால் யாருக்கும் வலிக்காமல் உங்கள் பதவிக்கும் பங்கமில்லாமல் ஒரு அறிக்கை விடுவதோடு கடமையைச் சுருக்கி கொள்வீர்கள். ஆனால் மாதாமாதம் அவசரகாலச் சட்டத்திற்கு ஒழுங்காகக் கைகளை உயர்த்தி வால்களை ஆட்டி விசுவாசம் தெரிவித்துக் கொள்வீர்கள்.

எனவே நாங்கள் எதிர் நோக்கும் இந்த துர்ப்பாக்கிய நிலமைகளில் இருந்து எங்களை மீட்பதற்கு எந்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்பது நமக்கு தெரிந்ததே.

ஏன் எனில் உங்கள் பதவிகளையும், சொகுசான வாழ்க்கையையும் இழப்பதற்கு ஒரு போதும் விரும்பமாட்டீர்கள். நாங்களாகவே முன்னெடுத்த போராட்டங்களுக்கு உங்கள் ஆசிர்வாதத்தோடு நடந்த விளைவுகளையும் நினைவு படுத்தாமல இருக்க முடியாது. இவற்றையெல்லாம் உங்களுக்கு சொல்வதனால் நீங்கள் எதையும் சாதித்து விடப் போவதில்லை என்பதை அறிவோம். காலம் கால மாகச் சந்தா கொடுத்து ஓட்டு போட்டு உங்களை உச சானிக் கொம்பில் ஏற்றி வைத்த உழைக்கும் மக்கள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அடுத்த தேர்தலுக்கு நீங்கள் எங்களைத் தேடிவரும் போது எங்களிடம் சொல்ல என்ன னென்ன ஏமாற்று வாக்குறுதிகளைத் தயார்படுத்தி வைத்திருக்கிறீர்களோ தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. உங்கள் பணமும் பவிசும் ஏமாற்று வித்தைகளை நம்ப எம்மைப் போன்ற இளைய தலைமுறையைச் சேர்ந்த மலையகத் தோட்டத் தொழிலாளிகள் தயாராக இல்லை. எமது இந்த விழிப்புணர்வு நிச்சயம் மலையகத்தின் மலைகளில் மோதி எழுந்து எதிரொலி கிளப்பும் என நம்புகின்றோம். அவை துன்பத்தில் உழலும் தொழிலாளர்களின் செவிகளில் புகுந்து சிந்தனைகளைக் கிளறிக்கொள்ளவே செய்யும் என்பதில் நம்பிக்கையாகவே உள்ளோம். ஆற்றல் மிக்கத் தொழிலாளர்கள் ஒரு நாள் எழுந்தே தீருவார்கள். அப்பொழுது நீங்கள் அம்மணப்படுவீர்கள்.

**அட்டன்** **தொழிலாளி**

**எஸ். சிவராஜ சிவம்**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மலையக சமூக அசைவியக்கத்தில் ஆசிரியர்கள்

புதிய மலையகம் மகேந்திரன்

## கலை இலக்கிய செயற்பாடுகளும் ஆசிரியர்களும்

விடுதலை வேண்டி நிற்கும் ஒரு சமூகத்தில் சவால்களை எதிர் கொள்வதற்கான ஆற்றல்களை வலுப்படுத்துவதிலும் எழுச்சியை தோற்றுவிப்பதிலும் கலை இலக்கியத்தின் பணி கனதிமானது. அந்த வகையில் உலக வரலாற்றில் மானுட விடுதலைக்கான படைப்பிலக்கிய தளத்திலே பல ஆசிரியர்கள் சிறந்த இலக்கிய படைப்பாளிகளாகவும் இலக்கியப் போராளிகளாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். அதேவேளை ஒரு சமூகத்திற்குரிய கலை இலக்கிய தளத்தை செப்பனிட்டு வழி நடத்துவதில் ஆசிரியர் வகிக்கக்கூடிய பங்கு பிரதான இடம் பிடிக்கிறது. அந்த வகையில் ஆசிரியரின் இலக்கியப் பணி 1. படைப்பாளிகளை உருவாக்குவது 2. படைப்பிலக்கியங்களை உருவாக்குவது என்ற இரண்டு தளங்களில் விரிகின்றது. எனவே இவ்விரண்டு அடிப்படைகளில் மலையக இலக்கிய தளத்தின் மலையக ஆசிரியர்கள் ஆற்றிவரக் கூடிய பங்கு பற்றி பேசும் போது கற்பித்தல் செயற்பாட்டுக்குள் இலக்கிய அறிவூட்டல் ஓர் வரையறைக்குட்பட்டதே. அதற்கும் அப்பால் இச்சமூகம் அதன் வாழ் நிலை அதன் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள், போராட்டங்கள், பற்றியதான உணர்வூட்டலின் மூலமே கல்வித் தளத்தில் இருந்து படைப்பாளிகள் உருவாக்கப்படுவதை சாத்தியப்படுத்தும். ஆனால் பெரும்பாலான மலையக ஆசிரியர்கள் கலை இலக்கியம் பற்றிய தேடலோ அதன் சமூகத் தேவை பற்றியோ சரியான புரிதல் பெற்றவர்களாக அன்றி அறைகுறை அறிவு கொண்டவர்களாகக் காணப்படும் சூழல் தொடர்கிறது. எனவே தான் மலையகத்து பாடசாலைத் தளத்தில் இருந்து உருவாக்கப்படக் கூடிய படைப்பாளிகளின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ள அதேவேளை சமூக கருத்து நிலை சார்ந்த படைப்புகளின் தரமும் அளவும் குறைந்து காணப்படுகின்றது.

படைப்பிலக்கிய தளத்தில் மலையக ஆசிரியர்கள் வகித்து வரும் பாத்திரம் பல் வகைப்பட்டது. மலையகத்து இலக்கிய பரப்பில் பல ஆசிரியர்கள் படைப்பாளிகளாக வலம் வருகிறார்கள். இவர்களில் சிலர் சரியான தத்துவார்த்த தளத்தில் நின்று மலையக மக்களின் வாழ்வியலையும் விடுதலையையும் நோக்கிய படைப்புகளை உருவாக்கிவருகிறார்கள். ஆனால் இவ்வாறான படைப்பாளிகள் மிக குறைந்த எண்ணிக்கையானவர்களே. மாறாக சில ஆசிரியர்கள் சுய அடையாளத்திற்காகவும் புகழுக்காகவும் எழுதி வருகிறார்கள். இவர்களுடைய எழுத்து இச் சமூகத்திற்கு ஆக்க பூர்வமான எதையும் சொன்னதாக இல்லை. வேறும் சிலர் இலக்கியம் எழுதுது என்பவற்றின் மூலம் மட்டுமே மிக பெரிய மாற்றத்தைச் செய்து விட முடியும் என்ற போலி நம்பிக்கையுடன் செயற்படும் அணியைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய படைப்புகளிலே கனல் தெறிக்கும் புரட்சி சிந்தனைகள் வழிந்தோடுவதை காணலாம். ஆனால் இவ்வாறானவர்களில் பெரும் பகுதியினர் தம் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் எதிர் எதிர் செயற்பாட்டை கொண்டிருப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களின் படைப்புகள் மிக முற்போக்கானதாக காணப்படும் அதேவேளை வாழ்வு நடைமுறை மாறுபட்டதாகவும் பவர் மிக ஆழமான பிற்போக்கு சிந்தனையை வாழ்க்கையோடு பிணைத்துக் கொண்டிருப்பதையும் அடையாளம் காணலாம். இன்னும் சில ஆசிரியர்கள் தங்களால் இந்த மண்ணுக்கு ஏதாவது பங்களிப்பு செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் அடையாளம் காண முடிகிறது. இவ்வாறான செயற்பாடுகளில் பெரும்பாலானவை பிரதேசம் நகரம் இலக்கிய வட்டம் நண்பர்கள் வட்டம் என்ற வரையறைக்குள் நின்று கலை இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை அவதானிக்கலாம். தாழ்த்தப்பட்ட அமிழ்த்தப்பட்ட மக்களின் உணர்வு வெளிப்பாட்டுக்கான இலக்கியம் பல்வேறு தளங்களில் இருந்து உடைப்பெடுப்பது மிகவும் வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் இச் செயற்பாடுகள் சரியான தத்துவார்த்த தளத்திலும் சமூக மாற்றத்திற்கான ஆக்க பூர்வமான செயற்பாட்டு வடிவத்தோடு வழி நடத்தப்பட வேண்டும். இல்லையெனில் வெறுமனே துன்பியல் ஆற்றாமைகளின் வெளிப்பாடுகளாகவும், பிரதேசவாதம், குறுங்குழுவாத வெளிப்பாடுகளாகவும் சுருங்கி போய்விடக் கூடிய அபயாத்தையும் கவனத்தில் கொண்டாக வேண்டும். சில ஆசிரியர்கள் உண்மையான சமூக நேசிப்போடு சமூக விடுதலைப் போராட்டத் தளத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு கலை இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். பொதுவாக மலையக இலக்கிய பரப்பில் ஆசிரியர்களின் பங்கு ஓரளவுக்குப் பிரதிபலிக்கப்படுகின்ற போதும் ஒட்டு மொத்த சமூகத் தேவையோடு ஒப்பீடும் போது இன்றைய ஏகாதிபத்திய சுட்சலுக்கு எதிரான இந்த குரலின் அளவும் ஆழமும் இன்னும் பன்மடங்கு விசாலப்படுத்தப்பட வேண்டும். எனவே மலையக இலக்கிய பரப்புக்கு வேண்டி நிற்பது அரசியல் பொருளாதார தடைகளையும் ஏகாதிபத்திய உலகமயமாக்க சவால்களையும் உடைத்தெறிய வல்ல பரந்துபட்ட இலக்கிய இயக்கங்களும் ஆழமான இலக்கிய சிந்தனைகளுமே. எனவே இந்த சமூக கடமைப்பாட்டை ஏற்க மலையக ஆசிரியர் சமூகம் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறதா?

**ஒடுக்கப்படும் மக்களின் கலை இலக்கியம் வெறுமனே துன்பியலாகவும் ஆற்றாமைகளின் வெளிப்பாடாகவும் பிரதேசவாதம் குறுங்குழுவாத வெளிப்பாடுகளாகவும் சுருங்கிப் போக்கூடிய அபாயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

## அரசியலும் மலையக ஆசிரியர்களும்

மலையகம் தன் வரலாறு முழுவதும் தன் மீதான அடக்குமுறை சுரண்டலுக்கெதிரான போராட்டங்களை வெளிப்படுத்தியே வந்திருக்கின்றது. இன வன்முறைகளுக்கெதிராக, நிலப்பறிப்புக்கு எதிராக சம்பள உயர்வு வேண்டி என காலத்திற்கு காலம் பல போராட்டங்கள் முனைப்பு பெற்றுள்ளன. அண்மைக் காலத்திலே பிந்துனுவெவ இனப்படுகொலைக்கெதிரான போராட்டம் மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான போராட்டம் சிறிபாத கல்வியற் கல்லூரிப் போராட்டம் சம்பள உயர்வுப் போராட்டம் என்பன மிகு அவதானம் பெற்றன. இவை அனைத்துமே மலையக பிற்போக்கு தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டது. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் மலையகமக்களின் வாழ்க்கையோடு அவர்களின் இருப்புக்கான சவால்களோடு சம்பந்தப்பட்டவை என்ற வகையில் இவற்றில் மலையக ஆசிரியர்களின் பங்கு என்ன என்பதே இங்கு நோக்கப்பட வேண்டியது. இந்த அனைத்து போராட்டங்களிலும் உணர்வோடு பங்கெடுத்துக் கொண்ட ஆசிரியர்கள் சிலரே. பெரும்பாலானவர்கள் வெறுமனே தூரத்துப் பார்வையாளர்களாக தங்களுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்ற மன நிலையோடே இருந்து வந்துள்ளார்கள். இவ்வாறு தான் வாழும் சமூகத்தில் இருப்புக்கான போராட்டத்தில் அச்சமூகத்தில் அறிவூட்டல் பெற்ற ஓர் பகுதி அக்கறை அற்று இருப்பது சாத்தியமானதா? இதன் மூலம் பிரதிபலிக்கப்படும் சிந்தனை என்ன. ஏன் இவ்வாறான தோர் சமூக முரண்பாடு தோற்றம் பெற்றது என்ற வினாக்களுக்கு விடை காண்பது அவசியமாகிறது. முதலாளித்துவ சிந்தனையினுடைய பலம் தனக் கெதிராக திரளக் கூடிய எதிர் சக்திகளை கருத்தியல் சிந்தனைத் தளங்களில் சிதைத்து தனிமைபடுத்தி விடுவது. தம் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பாகத் தன் கல்வி வழங்களை அது வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு சமூகத்தின் முரண்பாடுகளை களைவதற்கான போராட்டங்களுக்கு தலைமை வகிக்க கூடிய கற்றவர்கள் அதில் இருந்து ஒதுங்கி தன்னுடைய தனி மனித உயர்ச்சியை நோக்கி வாழ்வதை வாழ்வுக்கான போராட்டமாக மாற்றி விடுவதில் முதலாளித்துவம் வெற்றிகண்டு வருகின்றது என்றே கூற வேண்டும். இது இப்போது தான் வளர்ச்சி காணத் தொடங்கி இருக்கும் மலையக கல்வித் தளத்திலும் வேரூன்றத் தொடங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## சமூகப் போராட்டங்களும் மலையக ஆசிரியர்களும்

ஒரு சமூகத்தின் எல்லாவிதமான ஒடுக்குதல்களில் இருந்து விடுதலை என்பது சமூக மாற்றத்திற்கான அரசியல் வெகுஜன போராட்டத்தின் மூலமே சாத்தியமாக முடியும். எனவே மலையக மக்களின் அரசியல் போராட்டம் நீண்ட காலமாகவே வக்கிரமான வர்க்க இன ஒடுக்குமுறைகளுக்கும் பிற்போக்கு தலைமைகளின் காட்டிக் கொடுப்புகளுக்கும் அதிகார நலன் சார் ஊசலாட்டங்களுக்கும் முகம் கொடுத்தே வந்திருக்கின்றது. இவ்வாறானதோர் சமூக கட்டுமானத்தில் மலையக ஆசிரியர்களின் அரசியல் பற்றி பேசும் போது பிரதானமாக எதிர் ஒலிப்பது ஆசிரியர்கள் அரசியல் பேசக்கூடாது ஆசிரியருக்கு வேலை படிப்பிப்பது அதற்கு அப்பால் அவர்களுக்கு சமூக அரசியல் செயற்பாடுகளில் எந்த சம்பந்தமும் கிடையாது என்பதே. ஆனால் இது நேர்மையான கருத்தாக இருக்க முடியுமா? ஒவ்வொரு மனிதனும் அவனின் ஒவ்வொரு அசைவும் அரசியலாலேயே தீர்மானிக்கப்படுகிறது. எனவே இதில் ஆசிரியர் என்ற சமூகப்பாத்திரம் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா? ஆனால் இந்த வெற்று கூச்சலெல்லாம் மலையக அரசியலில் முற்போக்கு தளத்தில் சமூக மாற்றம் நோக்கிய அரசியல் கலை இலக்கிய பண்பாட்டு விடுதலைக்கான நேர்மையான மாற்று அரசியல் இயக்க செயற்பாடுகளில் ஈடுபட எத்தனிப்பவர்களுக்கு எதிராகவே பிரயோகிக்கப்படுகின்றது. மாறாக மலையக ஆசிரியர்களின் அரசியல் யதார்த்தம் பெரும்பாலான மலையக ஆசிரியர்கள் இன்று மலையகத்தில் கோலோச்சும் பிற்போக்கு மக்கள் விரோத அரசியல் தொழிற்சங்க தலைமைகளுக்குப் பின்னால் துதிபாடித் திரிபவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வாறானவர்களின் நோக்கம் மிக, மிக குறுகியது. அவர்களின் எதிர்பார்ப்புகளெல்லாம் தங்களுக்கான பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற மிக சிறி அற்ப சலுகைகளே. மலையக ஆசிரியர்களின் அரசியல் தளம் இன்னும் சரியான திசை வழி நோக்கி செல்வதற்கான ஆயத்தத்தைக் கூட தொடவில்லை. இவர்கள் சுயநலமும், ஊசலாட்டமும் மிக்க மனநிலையிலேயே உள்ளனர். இன்று மலையகத்தில் எல்லா பிற்போக்குத் தலைமைகளும் ஆசிரியர் தொழிற்சங்கம் நடத்துவதுகின்றன. இந்த சங்கங்களில் பெரும்பாலானவர்கள் அங்கம் வகிப்பதும் இவர்கள் தேர்தல் காலங்களிலும் நல்ல கையாட்களாகப் பயன்படுத்தப்படுவதையும் காணமுடியும். காலம் காலமாக மலையக மக்களை அடகுவைத்து அவர் தம் போராட்ட உணர்வுகளை சிதைத்து அம்மக்களின் நிலமும், இருப்பும், அழிக்கப்படுவதற்கு துணை நின்று வர்க்க விசுவாசத்தோடு அரசியல் பிழைப்பு நடத்தும் தலைமைகளுக்கு துதி பாடித்திரியும் ஆசிரியர்களின் பரிதாபத்தை புரிந்துக் கொள்ள வேண்டும். இதற்கு மலையக ஆசிரியர்களின் அரசியல் பற்றியதான விளக்கம் அவசியமாகிறது. எனவே இந்த அடிப்படையில் தான் மலையக ஆசிரியர்கள் பெரும் பகுதியினர் தங்களுக்கு வாய்ப்பான வசதியான காரணங்களைக் கூறிக் கொண்டு பம்மாத்து தலைமைகளுக்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் சுய ஈடேற்றத்திற்காகவும் சிலர் இந்த தலைமைகள் தான் மலையகத்துக்கு விடுதலையைப் பெற்று தர முடியும் என்ற பொய்யான நம்பிக்கையினாலும் அரசியலில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்று பல ஆசிரியர்கள் இந்த பிறபோக்கு அரசியலை பிரதி நிதித்துவப்படுத்தி அவர்களது அரசியல் செயற்பாடுகளில் ஈடு பட்டு வருகிறார்கள். எனவே தான மலையகத்தில் படித்தவர்களின் ஆதரவு தங்களுக்கே தான் என்ற கோதாவில் மக்கள் விரோத ஏமாற்று அரசியலை சக்திப்படுத்தி கொள்ளவும் துணை நிற்பவர்களாகின்றார்கள். அதேவேளை அரசியல் என்றாலே நடுங்கி ஒதுங்கி நான் என் குடும்பம் என எந்தவித சமூக அக்கறையும் அற்ற ஆசிரியர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

**ஆசிரியர்களுக்கு வேலை படிப்பிப்பது அவர்கள் அரசியல் பேசக் கூடாது சமூக சிந்தனை இருக்கத் தேவையில்லை. பதவி உயரவேண்டும். பணம் சேர்க்க வேண்டும். அதற்காக வாழ்நாள் பூராவும் உழைக்கவேண்டும்.**

எனவே மலையக மக்களின் விடுதலைக்கான சாத்தியப்பாடுகளை யதார்த்தமாக்க கூடிய ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளே இன்றைய முதன்மைத் தேவையாகும். ஆகவே மலையக மக்களின் உழைப்பை, உணர்வை, பேரினவாத ஆளும் வர்க்கதிடம் அடகுவைத்து காலம் காலமாக இம் மக்களை ஏமாற்றி சுரண்டி கொழுத்துக் கொண்டிருக்கும் மலையக பிறபோக்கு தலைமைகள் தூக்கி எறியப்பட சமூக விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று முன்னெடுக்கவல்ல மக்கள் தலைமை கட்டி வளர்க்கப்பட வேண்டும். இதனை வெற்றிகரமானதாக்குதற்கு புதிய பண்பாட்டு மீள் உருவாக்க சமூக எழுச்சியை ஒருங்கிணைத்து முன்னெடுக்க வல்ல கலை இலக்கிய இயக்கங்கள், மண்ணையும், சூழலையும் பாதுகாக்கவல்ல மக்கள் இயக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். எனவே மலையக ஆசிரியர்கள் வெறுமனே ஒரு தொழிற்சமூகம் என்பதற்கப்பால் இந்த மக்களின் வாழ்வியலோடு பிணைந்த சமூகப்பிரிவு என்றவகையிலும் சமூக அசைவியக்கத்தில் காத்திரமான வரலாற்று கடமையைக் கொண்டவர்கள் என்ற வகையிலும் இவர்களில் நேர்மையான பணிக்கான புரிதலையும் உணர்வையும் வளர்த்துக் கொள்ளத் தலைப்படுவார்களா?

# வந்தவர்கள் கண்ணபரம்பரையினரா? கர்ண பரம்பரையினரா?

இம்மாத முடிவில் கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டின் போது பாதுகாப்பில் ஈடுபட மூவாயிரம் இந்தியப் துருப்புகள் வரவிருக்கின்றன. மூன்று இந்திய யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுக கடற்பரப் பில் இருக்குமெனவும் இந்திய விமானப் படைகளும் இங்கு பிரசன்னமாக இருக்கும் எனவும் தெரியவருகிறது.

இலங்கையின் வரலாற்றில் இந்தியப் படைகள் வருவது இது முதற் தடவையும் இல்லை. இந்தியா இலங்கை விவகாரத்தில் தலையிடுவதும் முதற் தடவையல்ல. மன்னராட்சிக் காலத்தில் இந்தியப் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. பின்னர் 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்குவதற்கு இலங்கை படையினருக்கு உதவ இங்கு இந்தியப் படைகள் வந்தன. 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையை அடுத்து 'அமை திப்படையாக' இங்கு வந்தன. 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் போதும் வந்தன. தற்போது 'சார்க்' மாநாட்டு பாதுகாப்பிற்கென வருகிறது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன காலத்தில் (1987இல்) இந்தியப் படைகள் இங்கு வந்தமை அவரின் வெற்றிகரமான இராஜதந்திரம் என்று இன்றும் பலர் கூறுகின்றனர். அதாவது இந்தியாவால் பயிற்றுவிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகளை அழிக்கும் பொறுப்பை இந்தியப் படையிடமே ஜே.ஆர். ஒப்படைத்தார் என்கின்றனர்.

ஜனாதிபதி 'மஹிந்த ராஜபக்சவின் யுத்தத்திற்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்றும் இலங்கை- இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை செய்யப்பட வேண்டுமென ராஜபக்ச இந்தியாவைக் கேட்டுவந்தார். ராஜபக்சவின் இராஜதந்திரத்தினால் (அவர் பாகிஸ்தான் சீனா என்பவற்றிடம் இராணுவ உதவிகளை பெற்றதன் மூலம்) இந்தியா இலங்கையிடம் நெருங்கிவந்திட்டதாகச் சிலர் கூறுகின்றனர்.

இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், பாதுகாப்பு செயலாளர் ஸ்ரீ விஜய் சிங், வெளிவிகாரச் செயலாளர் சிவ சங்கர் மேனன் ஆகியோர் யூன் மாதம் 20 ஆம் திகதி இலங்கை வந்திருந்தனர். அவர்கள் 48 மணிநேர அறிவித்தலை கொடுத்து இலங்கைக்கு வந்து ஜனாதிபதி ராஜபக்ச, தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர், இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரை சந்தித்துள்ளார். அதன் விளைவுகள் பற்றி அனுமானங்களும், ஊகங்களும் பலவாறாக தெரிவிக்கப் படுகின்றன.

யூலை 27 முதல் ஆகஸ்ட் 3 ஆம் திகதிவரை கொழும்பில் நடத்தப்பட ஏற்பாடாகியுள்ள தென்னாசிய நாடுகள் அமைப்பின் (சார்க) மாநாட்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்து கொழும்பு நகரிலும், துறைமுக கடற்பரப்பிலும் கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட இந்திய பாதுகாப்பு படையினர் பாதுகாப்பிற்கு பொறுப்பாக செயற்படவுள்ளனர். 3 ஆயிரத்துக்கு அதிகமான இந்திய பாதுகாப்பு படையினர் பாதுகாப்பில் ஈடுபடவிருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் வழமையாக இந்தியப் பிரதமருடன் செல்லும் இந்திய 'கரும் பூனைகள்' என்ற பாதுகாப்பு படையினருக்கு மேலதிகமானோருக்கு மேலதிகமானோராவர்.

அத்துடன் கொழும்பில் விசேட பாதுகாப்பு திட்டத்தை இந்தியா அமுல்படுத்தவுள்ளதாகத் தெரிகிறது. விசேடமாக 'ராடர்' கருவிகள் பொருத்தப்பட்டு பூரணமான பாதுகாப்பு கண்காணிப்பை இந்தியா மேற்கொள்ளும். இதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு இல்லாமல் சார்க் மாநாட்டை நடத்த முடியாது என்ற நிலையை இந்தியா ஏற்படுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க இந்தியாவின் உதவி இல்லாமல் இலங்கை இராணுவம் வடக்கில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முடியாது என்பதையும் "இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு" என்பதும் இந்தியா இல்லாமல் சாத்தியமாகப் போவதில்லை என்பதையும் இந்தியா மீள நிலை நிறுத்திக் கொள்வதற்காக அந்த இந்திய அதிகாரிகளின் விஜயம் அமைந்துள்ளது.

இதன் உள்ளார்ந்தம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாக இருக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களை புதுடில்லிக்கு வருமாறு அந்த இந்திய அதிகாரிகள் விடுத்த அழைப்பும் அவர்களின் விஜயமும் தமிழ்தேசியவாதத்திற்கு சாதகமானதாக இருப்பதாக மிகவும் கஸ்டப்பட்டு நிருபிக்க சிலர் முயற்சிக்கின்றனர்

சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவது இந்தியாவுக்கு பாதிப்பானது என்பதை இலங்கையின் தமிழ்த் தரப்பினர் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்ததை அடுத்தே இந்திய அதிகாரிகள் இலங்கை வந்ததாக சிலர் பெருமிதம் கொள்கின்றனர். தமிழகத்தில் இருக்கும் எதிர்ப்புகளையும் மீறி இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குவதை உறுதி செய்துள்ளது. தமிழக எதிர்ப்பையும் பொருட்படுத்தாமலேயே இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு வரவிருக்கிறார் என்பவை கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு புறம் இலங்கையில் சீனாவினதும் பாகிஸ்தானினதும் ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதாக மட்டும் தமிழ் தேசியவாதிகள் மிகைப்படுத்திக் கூறுவதும், மறுபுறம் இந்திய மேலாதிக்கம் பற்றி மட்டும் சிங்களத் தேசியவாதிகள் கூறுவதும் இலங்கை மீது அமெரிக்க ஏகாதிபத்தியமும் மேற்கு நாட்டு, ஜப்பான் ஏகாதிபத்தியமும் நிலை நாட்டி வரும் மேலாதிக்கத்தை மறைப்பதாக அல்லது குறைத்து மதிப்பிடுவதாக இருப்பதைக் காணத்தவற முடியாது.

மனித உரிமைகள் மீறல்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தின் மீது ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஜப்பானும் அழுத்தங்களைக் கொடுத்து வருவதுடன் ஏறக்குறைய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன எனலாம்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நிரந்தர நண்பர்களாக வெளிநாட்டு அரசாங்கங்கள் உத்தியோக பூர்வமாக இராது. அந்நாட்டு அரசாங்கங்களுக்கும் இலங்கையின் சிங்கள பௌத்த அரசாங்கத்திற்குமிடையிலான வித்தியாசங்கள் பிரயோசமானவைகளாக அனுகப்பட்டாலும் அவையே போராட்டத்தின் மூலோபாயமாக இருக்க முடியாது.



ஏகாதிபத்திய உலகமயமாதலின் முக்கிய தலைமை நாடான அமெரிக்காவின் இப் பிராந்தியத்தின் முதன்மையான நேச சக்தியாக இந்திய அரசு மாறியுள்ளது. அத்துடன் இப்பிராந்திய மேலாதிக்கத்தினை நிலைநாட்டுவதில் இந்தியா மிகவும் அக்கறையுடன் செயற்படுகிறது. அந்த வகையிலேயே இலங்கையின் இனப்பிரச்சினையைக் கையாண்டு வருகிறது.



நேபாளத்தின் சமாதான நடவடிக்கைகளில் இந்திய ஆளும் வர்க்கம் திருப்திப்படாவிட்டாலும் அவற்றில் தன்னை நுழைத்துக் கொண்டுள்ளதை அறிவோம். நேபாளம் இந்தியாவின் முழுமையான பொருளாதார கொலனியாகவும் அரை அரசியல் கொலனியாகவும் இருந்த போதும் இந்தியா நேபாள சமாதான நடவடிக்கைகளில் எட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தியா அந்நடவடிக்கைகளில் தன்னை நுழைத்துக் கொண்டு நேபாள போராளிகளுக்கு எதிரான சதிகளிலேயே ஈடுபட்டு வருகிறது.



மியன்மாரின் (ஜூன்டா அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு) இராணுவ ரீதியாக உதவி செய்யாதபடியால் அதன் மீதான கட்டுப்பாட்டை இழந்துள்ளதைப் போன்று இலங்கையின் விடயத்திலும் இந்தியா இருந்துவிட முடியாது என்று இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அவரினதும் ஏனைய அதிகாரிகளின் இலங்கை விஜயத்தின் நோக்கம் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

இலங்கையிடம் இந்தியா நெருக்கிவிட்டதா அல்லது இந்தியாவிடம் இலங்கை நெருங்கி விட்டதா என்பதும் இந்த நிலைமைக்கு ராஜபக்ச இராஜதந்திரமா இந்திய இராஜதந்திரமா தமிழ்த்தேசிய இராஜதந்திரமா காரணம் என்பதும் இன்றைய நிலைமையால் ஏற்படும் விளைவுகளாலேயே தீர்மானிக்கப்படும்.

**தயா**

# சம்பள உயர்வுக் கோரிக்கையும் வேலை நிறுத்தப் போராட்டமும்

**இம் மாதம் (யூலை) 10ம் திகதி** ரூபா 5000/= சம்பள உயர்வு கோரி அரசாங்க தனியார் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஊழியர்கள் ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர். இதற்கான பொது அழைப்பை ஜே.வி.பி தலைமையிலான தொழிற்சங்க மத்திய நிலையமே விடுத்துள்ளது. ஜே.வி.பி யின் அரசியல் நிலைப்பாட்டில் முரண்பாடுகள் இருந்த போதிலும் தொழிற்சங்க அடிப்டையில் விடுக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்ட அழைப்பை பல்வேறு அரசியல் நிலைப்பாடு கொண்ட தொழிற்சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. இது நியாயமான ஒரு முடிவுமாகும்.

இன்றைய வாழ்க்கைச் செலவு பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஊழியர்களால் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகி யுள்ளது. அது மட்டுமன்றி நாளாந்தம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்த வண்ணமே உள்ளன. இத்தகைய விலை உயர்வைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்தினால் முடியவில்லை. அதேவேளை அவ் விலை அதிகரிப்புக்கு ஏற்றளவு சம்பள உயர்வை வழங்கவும் முடியவில்லை. இந் நிலையில் பல்வேறு துறைகளிலும் சம்பள உயர்வுக் கோரிக்கை எழுந்து அதற்கான வீதி ஆர்ப்பாட்டங்க ளாகியுள்ளன. ஜே.வி.பி தொழிற்சங்க மத்திய நிலையம் தொழி லாளர்கள் ஊழியர்களின் வற்புறுத்தலால் ரூபாய் 5000/= சம்பள உயர்வுகோரி யூலை 10ம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத் திற்கான அழைப்பை விடுத்தது.

ஜே.வி.பி யின் அரசியல் நிலைப்பாட்டாலும் தொழிற்சங்கத் தலைமைகளின் அணுகு முறையிலும் பலத்த கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன என்பது மறுப்பதற்கு இல்லை. தமது தொழிற்சங்க வளர்ச்சிக்காக ஜே.வி.பி ஏனைய மாற்று தொழிற்சங்கத் தலைமை களை "தொழிற்சங்கப் புலிகள்" என முத்திரை குத்தி பிரச்சாரம் செய்து வந்தது. சில தலைவர்கள் பொய்க் குற்றச் சாட்டில் சிறையிலும் அடைக்கப்பட்டனர். இவை யாவரும் அறிந்த தொன்றாகும். அதே போன்று இனப்பிரச்சினையில் பேரினவாத



நிலைப்பாட்டையும் யுத்தத்திற்கு எண்ணெய் வார்த்தும் வருகின்றமை பகிரங்க மானதாகும்.

இருந்தும் தொழிலாளர்கள் ஊழியர்கள் அனைவரும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் கடும் பாதிப்பை பெற்று வரும் இன்றைய சூழலில் சம்பள உயர்வு உடனடி அவசியமானதாகும். அந்த வகையில் 5000/= சம்பள உயர்வுக்கு கோரிக்கை நியாயமானதும் வென்றெடுக்கப்பட வேண்டியதுமாகும்.

இவ் வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் வகையில் ஜனாதிபதி அவசர அவசரமாக சில தொழிற்சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தி யூலையில் இருந்து 1000/= ரூபா சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொண்டார். அதிலும் கூட 625 ரூபா மட்டுமே சம்பள உயர்வு எனவும் 375 ரூபா வாழ்க்கைச் செலவுப் படியாகவுமே வழங்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். இதனை அரசாங்க ஆதரவுத் தொழிற்சங்கங்கள் மட்டுமே சம்பள உயர்வாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் அத் தொழிற்சங்கங்களில் உள்ள தொழிலாளர்கள் ஊழியர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

மேலும் இவ் ஐயாயிரம் சம்பள உயர்வுக்கான கோரிக்கை நியாயமற்றது எனவும் யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளை திசை திருப்பும் சதி நோக்கம் கொண்டதெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆட்சியில் இருக்கும் எவரும் எந்தக் காலத்திலும் வேலை நிறுத்தங்களின் கோரிக்கைகளை நியாயமானவை என ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பம் கிடையாது. எதிர்த்தரப்பில் இருக்கும் போது கட்சிகளுக்கு தொழிலாளர்களின் கோரிக்கை யாவும் நியாயமானது நீதியானதுமாகவே தெரியும். அதே கட்சியும் தலைவர்களும் ஆட்சிப் பக்கம் சென்றதும் அந் நிலைப்பாடு மாறி விடும் முன்பு மகிந்த ராஜபக்ச தொழிலாளர் பக்கமாக வீதியில் நின்றார். இப்போது அதிகாரக் கதிரையில் இருப்பதால் தொழிலாளர் கோரிக்கையை மறுக்கிறார். இன்று ரணில் வீதியில் நிற்கிறார். நாளை ஆட்சிக்கு வந்தால் நிலை மாறி விடும். இதனைப் புரிந்து கொண்டு தொழிலாளி வர்க்கம் தமக்கான அரசியல் தொழிற்சங்கப்பாதையில் பயணிக்க வேண்டும். ஆதலால் யூலை 10ம் திகதி வேலை நிறுத்தம் இடதுசாரி ஜனநாயக முற்போக்கு தொழிற்சங்கங்களால் நியாயமானதென ஆதரிக்கப்படுகிறது. அதில் பங்கு கொள்ளவும் தயாராகி வருகின்றன. இது நியாயமானதும் அவசியமானதுமாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 11

# கொலனி ஆதிக்கத்தின் கீழ் சர்வசன வாக்குரிமை

பிரித்தானியக் கொலனிய ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளில் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு காலங்களில் ஆளப்பட்டோரின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டவர்களும் சில வரையறைகட்குட்பட்டு ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க வழி செய்யப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை பிரித்தானிய அதிகாரம் இவ்விடயத்தில் முன்னோடியான விட்டுக் கொடுப்புடன் நடக்க முன்வந்தது. இவ்வாறான மாற்றங்கட்குக் கொலனிய அதிகார நாடான பிரித்தானியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் துணையாக இருந்தாலும் கொலனிய அதிகாரத்தின் நலன்களை முன்னிறுத்தியே எவ்விதமான சீர்திருத்தமும் இடம் பெற்றிருக்க இயலும் என்பதையும் நாம் மறக்கலாகாது.

இலங்கையில் அரசியல் சீர்திருத்தம் பற்றிய எண்ணங்கள் எழுந்ததற்கு இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி தேசிய விடுதலை இயக்கமாக இல்லாவிடினும் அரச நிருவாகத்திற்கு கூடிய பங்கை வேண்டி நின்ற சிங்கள, தமிழ் மேட்டுக் குடிகளது வற்புறுத்தல்களுக்கு ஒரு பின்னணியாயிருந்தன. அதே வேளை இவை சார்ந்திருந்த வர்க்க நலன்கள் பிரித்தானிய கொலனிய ஆட்சிக்கு ஒரு மிரட்டலாக அமையவில்லை. இவை போக பிரித்தானியாவிலும் அரசியல் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன.

அங்கே 1924ல் ஒரு தொழிற்கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலமே நிலைத்தது. பின்பு அதே கட்சி 1929ல் மறுபடியும் ஆட்சியமைத்தது. தொழிற்கட்சியின் எழுச்சியின் விளைவாக அங்கே கொலனிகளின் நிருவாகம் பற்றிய மறுபரிசீலனைகட்கும் சீர்திருத்தங்கட்குமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற்கட்சியின் நோக்கம் தொழிலாளி வர்க்கத்தை ஆட்சியில் அமர்த்துவது அல்ல என்பது பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற 'இடதுசாரி' அரசியற் கட்சிகளில் சர்வதேச நோக்குடைய மாக்சியப் போக்கும் அதற்கு எதிரான தேசியவாதத்தன்மை கொண்ட சமூக- ஜனநாயகப் போக்கும் இருந்தன. பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாகக் கொலனி ஆதிக்க நாடுகளில் கொலனி ஆதிக்கத்தைக் கைவிடாமலே சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு முதலாளியத்தின் கீழ்த் தொழிலாளர்களது ஜனநாயக, சமூக உரிமைகளைப் பெறுகிற சீர்திருத்தவாதப் போக்கையே பின்னணிவிதமான கட்சிகள் கடைப்பிடித்தன. தொழிற்கட்சியும் பிரெஞ்சு சோஷலிஸக் கட்சியும் அத்தன்மையான கட்சிகளே.

எவ்வாறாயினும், பழமைவாதக் கட்சியினருக்கும் தொழிற்கட்சியினருக்குமிடையே கொலனி நிருவாகம் பற்றிய அணுகுமுறையில் வேறுபாடு இருந்தது. தொழிற்கட்சியின் எழுச்சி காரணமான பாதிப்புக்களில் ஒன்றாகக் கொலனிகளில் நிருவாகச் சீர்திருத்தத்தையும் நாம் கொள்ளலாம். பிரித்தானியத் தொழிற்கட்சியின் எழுச்சியின் நேரடித் தாக்கமாக இலங்கையிலும் சீர்திருத்தவாத முற்போக்குச் சிந்தனைகள் விருத்தி பெற்றன. அதே வேளை, அவை வரையறுக்கப்பட்டும் இருந்தன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கம்யூனிச விரோதம் என்பது தொழிற்கட்சியின் தலைமையில் மிகவும் ஊறிப் போயிருந்தது என்பதை நாம் மறக்கலாகாது. எனினும் அன்றைய இலங்கையில் தொழிற்சங்க இயக்கமோ அதன் தலைமையிலிருந்து எழுந்த அரசியலோ கம்யூனிச மிரட்டலாக அமையவில்லை என்பதுடன் கொலனிய ஆட்சிக்குள் சீர்திருத்தங்களை மட்டுமே வேண்டி நின்றன என்பதுங் கவனிக்கத்தக்கது.

1927ல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட டொனமூர் ஆணைக்குழு இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தனது விசாரணைகளை மேற்கொண்டது. அதற்கு முன்பிருந்த சட்டவாக்கற் சபைத் தேர்தல் முறையில் படித்த சொத்து அல்லது உயர் வருமானமுள்ள ஆண்கட்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. டொனமூர் ஆணைக் குழு இதனை விரிவடுத்துகிற நோக்குடனேயே இலங்கைக்கு வந்தது. ஆனால் அதை எவ்வாறு விரிவுபடுத்துவது என்பதில இலங்கையில மிகுந்த கருத்து வேறு பாடுகள் இருந்தன. அவ்வேறு பாடுகள் வர்க்க நலன் சார்ந்து இருந்தன. அத்துடன் ஏற்கெனவே சட்டவாக்கற் சபையில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டோர் நடுவே தங்கள் பதவி அதிகாரங்களைத் தொடர்ந்து பேணவும் வலுப்படுத்தவும் உதவுகிற விதமாகவே சீர்திருத்தங்கள் பற்றிய நிலைப்பாடுகள் அமைந்தன. அதே வேளை "சர்வசன" வாக்குரிமையை வேண்டியவர்களிடையிலும் சிலருக்கு அதை எல்லாருக்குமான தாக்குவது பற்றித் திருப்தி இரு க்கவில்லை.

அவ்வேளை சிங்களப் பேரினவாதிகளின் வசமாகி விட்ட இலங் கைத் தேசிய காங்கிரஸ் வாக்குரிமை விரிவடுத்தப்படுவது பற்றி ஆழமான அக்கறை காட்டவில்லை. ஆணைக்குழுவிலிருந்த தொழிற் கட்சியைச் சேர்ந்த ட்ரமண்ட் ஷீல்ஸ் இது பற்றித் தனது விசனத்தை நேரடியாகவே தெரிவித்திருந்தாக இலங்கைத் தொழிலாளர் சங்கம் மட்டுமே முழுமையான சர்வசன வாக்குரிமையை ஆதரித்தது. இதற்கு அதன் தலைவர் ஏ.ஈ குணசிங்கவுக்கு பிரித்தானிய தொழிற்கட்சியுடன் இருந்த தொடர்பு ஒரு உந்துதலாயிருந்ததற்கு ஆதாரமுண்டு. இலங்கைத் தேசிய காங்கிரஸ் மலையகத் தமிழருக்கு வாக்குரிமையை எதிர்த்த போதும் குணசிங்ஹ அதை எதிர்க்காதது குறிப்பிடத்தக்கது.

சட்டவாக்கற் சபையில் டொனமூர் ஆலோசனை கள் (முக்கியமாக 21 வயதான ஆண்கட்கும் 30 வய தான பெண்கட்கும் வாக்குரிமை) விவாதிக்கப்பட்ட போது வெவ்வேறான நான்கு திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டன. ஒன்று 21 வயதான பெண்கட்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் இலங்கையரல்லா தோருக்குக் குறைந்த பட்சக் கல்வித் தகைமையும் ஐந்தாண்டு வதிவுத் தகைமையும் வறுபுறுத்தப்பட்டது. (இதன் நோக்கம் இந்திய வம்சாவழியினரை ஓரங்கட்டுவதாகும்).

இன்னொரு பிரேரணை சர்வசன வாக்குரிமையைக் குறைந்த வருமான/ சொத்துடைமைத் தகுதி எல்லையைச் சிறிது தாழ்த்தி ஆண்கட்கும் பெண்கட்கும் வாக்குரிமை வழங்குவது என்பது. மூன்றாவது வைத்திலிங்கம் துரைசாமி பிரேரித்து பொன்னம்பலம் ராமநாதன் ஆமோதித்ததான படித்த பெண்கட்கு மட்டுமே வாக்குரிமை என்ற திருத்தம்.

இறுதியானது 21 வயதான எல்லாருக்கும் வாக்குரிமை என்பதாகும்.

இந்த நிலைப்பாடுகள் டொனமூர் ஆணைக்குழு தனது பரிந்துரைகளை ஆலோசனையாக முனவைத்த போது மேற் கொள்ளப்பட்டவை. ஆனால ஆணைக்குழுவின் முன்பு சாட்சிய மளிக்கையில் ராமநாதன் பெண்களுக்கான வாக்குரிமையும் படிக்காதவர் கட்கான வாக்குரிமையையும் கடுமையாக எதிர்த்தார். செல்வ நாயகத்தின் மருமகனும் யூஎன்.பி விசுவாசியுமாயிருந்த ஏ.ஜே. வில்சன் தனது வரலாற்று ஆய்வுகளில் ராமநாதன் பெண்களுக்கு வாக்குரிமையை எதிர்த்ததைப் பற்றிப் பேசாமல் படிக்காதவர்கட்கு வாக்குரிமை அளித்தால் அது சிங்களப் பேரினவாதிகளது ஆதிக்கத்திற்கு இட்டுச் செல்லும் என்ற தீர்க்கதரிசனத்தின் காரணமாகவே படிக்காதவர்கட்கு வாக்குரிமையை எதிர்த்தார் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

சிங்களப் பேரினவாதம் பிரதேச அடிப்படையிலான தொகுதி முறையால் வலுப்பெறும் என்பதற்காக அதை ராமநாதன விமர்சித்ததில நியாயமிருக்கலாம். படிக்காதவர்கட்கு வேண்டாம் என்றதன் நோக்கமே வேறு. ஏனெனில் அன்று கல்வி வசதி படைத்த தமிழ் மேட்டுக்குடிகளிடம் ஆதிக்கம் பெருமளவில் இருந்தது. அதிலும் கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்டவர்கள் மேலும் வலிய நிலையில் இருந்தனர்.

இந்த சாதிய- வர்க்க மேலாதிக்கப் பிரிவு சிங்களவர்களது ஆதிக்கத்திலிருந்து தமிழரைக் காப்பதற்காகச் சர்வசன வாக்குரிமையை எதிர்த்ததென்பது உண்மையின் திரிபு. இந்த வாதம் சரியானதென்றால் பெண்களுக்கான வாக்குரிமையை ராமநாதன் மறுத்ததை அதன் மூலம் விளக்க இயலுமாயிருந்திருக்கும். ராமநாதனின் கணிப்பில யாழ்ப்பாணச் சைவ வேளாளப் பரம்பரையினரது நலன்கள் முக்கியம் பெற்றதாலேயே அவர் கல்வியையும் ஆண்பாலினராயிருப்பதையும தகுதிகளாக்கினார். ஏனெனில படித்த பெண்களிற் சன விகிதப்படி கூடிய பகுதியினர அன்று கிறிஸ்தவர்களாகவே இருந்தனர்.

இந்த விதமான குறுகலான பார்வையின் படியே அரசியலமைப்புச் சீர்திருத்தப்பட்டிருந்தால் அதன் நீண்டகால விளைவுகள் எப்படி இருந்திருக்கும் என்ற தெளிவு ராமநாதனுக்கு நிச்சயமாக இருக்

> **பொன்னம்பலம் இராமநாதனின் நிலைப்பாட்டில் இருந்த வர்க்க மேட்டுக்குடி ஆணாதிக்க சாதிய பிரதேசவாத மதவாதச் ஆதிக்கச் சிந்தனைகளை மூடிக் கட்டியே தமிழர் தேசியவாத வரலாறு எழுதப்படுகிறது.**

கவில்லை. பிரித்தானியக் கொலனிய எசமானர்களது உத்தரவாதங்கள் உள்ளவரை சட்டவாக்கற் சபையில் அல்லது அதற்குப் பிறகு வந்த அரசுச்சபையில் சிங்களப் பெரும்பான்மையின் அதிகாரத்தைக் கொஞ்சக் காலத்திற்கும் பிறபோட்டிருக்கலாம். தமிழ் மேட்டுக்குடிகள் வடக்கிற சாதியாற் தாழ்த்தப்பட்ட பெரும்பான்மையினருக்குக் கல்வியை மறுத்து பிற மாகாணங்களில இருந்த தமிழரின் கல்வி பற்றி அக்கறை காட்டாத ஒரு பின்னணியில் சிங்களவர் கல்வியில் வேகமாக முன்னேறக் கூடிய ஒரு சூழலில் என்ன நடந்திருக்கலாம் என்பதைக் கற்பனை செய்ய ராமநாதனுக்கு இயலாதது விளங்கக் கூடியது. அவரது சுய நலமும் வர்க்க நலன்களும் அதை விளங்கிக் கொள்ளும் வாய்ப்பை அவருக்கு மறுத்திருந்தன. ஆனால் இன்று வரலாறு என்று சொல்லி நமக்குள்ளே பழங்கதைகள் பேசி மகிழுகிற ஆய்வுப் பாரம்பரியம் அதை அறியாமல் இருக்க நியாயமில்லை.

ஏ.ஜே. வில்சன் மட்டுமன்றிப் பொன்னம்பலம் ராமநாதனைத் தமிழ்த் தேசியத்தின் மூலவராகக் கொண்டாடுகிற அத்தனை பேரும் ராமநாதனின் நிலைப்பாட்டில் இருந்த மேட்டுக்குடி ஆணாதிக்க, சாதிய, பிரதேசவாத, மதவாத ஆதிக்கச் சிந்தனைகளை வேண்டுமென்றே மூடிக்கட்டி வருகிற காரணத்தாலேயே அவை பற்றி இங்கு விரிவாகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

மற்றப்படி, இலங்கையின் அன்றைய அரசியல் தலைமையின் ஆர்வத்தினால் அல்லாமல் பிரித்தானிய கொலனிய ஆட்சியில பொறுப்பிலிருந்த தொழிற்கட்சி இலங்கையில் சர்வசன வாக்குரிமையைப் புகுத்துவது கொலனி ஆதிக்கத்திற்குச் சவாலாக அமையாது என்ற கணிப்பின் அடிப்படையிலேயே சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்தியது. இந்தப் பரிடசார்த்தமான கொலனி ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட "சனநாயகம்" நீண்டகாலத்திற்குத் தொடர்வதற்குப் பாதகமாக அமைந்தவை எந்த விதமான "பாராளுமன்ற" அரசியல் நடவடிக்கைகளுமல்ல. இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கியமான பகுதி பிரித்தானியர் ஏற்படுத்திக் கொடுத்த பல வேறு சட்ட சபைகட்கு வெளியே தான் செயற்பட்டது என்பதும் இரண்டாம் உலகப் போரின் பின்பு பிரித்தானிய எசமானர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தங்களுக்கு உடன்பாடானவர்களிடம் ஆட்சிப் பொறுப்பைக் கைமாற்றியிரா விட்டால் தென்னாசியாவின் தேசிய விடுதலைப் போராட்டங் களும் சமூக விடுதலைப் போராட்டங்களும் தென்னாசியாவில ரஷ்யாவிலும் பின்பு சீனாவிலும் ஏற்பட்டது போன்ற மாற்றங்கட்கு இட்டுச் சென்றிருக்கும் என்பதைக் கொலனிய எசமானர்களில் ஒரு பகுதியினராவது அறிந்திருந்தனர். நம்மிடையே உள்ள வரட்டுத்தனமான வரலாற்றுப் பாராயணக்காரர்கட்கு மட்டும் அது ஏனோ விளங்குவதில்லை.

## 60 வருட சுதந்திரமும் ஜனநாயகமும்

**அறுபத்தியொரு** வருட முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி. அறுபது வருட சுதந்திரம். ஆண்ட பரம்பரையினரின் மாறி மாறிய ஆட்சி அதிகாரம். இவற்றால் இலங்கையின் ஏகப் பெரும்பான்மையினரான தொழிலாளர்கள் விவசாயிகள் கீழ் நடுத்தர வரக்கத்தினர் தேசிய இனங்கள் என்போர் பெற்ற பலா பலன்கள் யாவை. வறுமை பட்டினி இல்லாமை போதாமை கொடு நோய்கள் வீடின்மை வேலை இன்மை செய்யும் தொழில்களுக்குப் போதிய ஊதியமின்மை போன்றவற்றையே மக்கள் அனுபவி த்து வந்துள்ளனர்.

நாட்டின் சனத்தொகையில் 20 வீதமான மக்கள் தினம் ஒன்றிற்கு ஒரு டொலருக்கும் (100 ரூபாவிற்கு) குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். நாட்டின் சனத்தொகையில் அரைவாசியளவு மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் தினமொன்றிற்கு இரண்டு டொலர் (200ரூபா) வருமானத்துடன் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். மக்களில் கால்வாசிப் பேர் மிகவும் வறியவர்களாகவும் போஷாக்கு குறைந்தவர்களாகவும் உள்ளனர். கல்வி சுகாதாரம் என்பன பிராந்தியத்திற்கு பிராந்தியம் பாரிய வேறுபாடாகவும் குறைபாடானவையாகவும் உள்ளன.

60 வருட சுதந்திரத்தின் பின் மக்களுக்கு சுகாதாரமான இருப்பிட வசதியில்லாமல் பலர் கஷ்டப்படுகின்றனர். 12 1/2 வீதமான மக்கள் மிகவும் மோசமான குடிசைகளில் வாழ்கின்றனர். 25 வீத மக்களுக்கு மின்சாரம் கிடையாது. 5.6 வீத மக்களுக்கு மலசல கூட வசதிகள் இல்லை.

சில குடும்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் ரேடியோ தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கிறது உண்மையே. ஆனால் நாட்டில் 20 வீதமான மக்களிடம் சாதாரண ரேடியோ தானும் இல்லை.

இவற்றுக்கும் அப்பால் தேசிய இனங்களுக்குச் சுதந்திரம் இல்லை. அதற்குப் பதிலாக பேரினவாத ஒடுக்குமுறை உண்டு. ஊடகங்களுக்குச் சுதந்திரம் இல்லை. பதிலுக்கு ஊடக அடக்குமுறை இருக்கிறது. நடமாடும் சுதந்திரம் உயிர்வாழும் சுதந்திரம் கிடையாது. ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் யாவும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழான இரும்புச் சப்பாத்துக்களின் கீழே நசுக்கப்படுகின்றன.

எங்கே பாராளுமன்ற ஜனநாயகம்? யாருக்கு அறுபது வருடச் சுதந்திரம்? சொத்தும் சுகங்களும் அனுபவிப்போர் யார்? துன்பதுயரங்களைப் பாரச் சுமைகளாகச் சுமப்போர் யார்? மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

ஞானகரன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஏகாதிபத்திய எதிர்ப்பும் கியூபாவிற்கான ஒத்துழைப்பும் பிரிக்கப்பட முடியாதவை

முதலாளித்துவத்தின் உயர்ந்த வடிவம் ஏகாதிபத்தியம் என்று லெனின் நிறுவியதுடன் சோஷலிஸத்திற்கான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சுரண்டப்படும் அனைத்து வர்க்கங்களினதும் போராட்டமாகும் என்பதையும் வலியுறுத்தினார். அந்த நிலைமை இன்றும் மாற்றமடைய வில்லை. ஆனால் ஏகாதிபத்தியத்தின் நிகழ்ச்சி நிரல்கள் மாற்றமடைந்துள்ளன. அது இன்று ஏகாதிபத்திய உலகமய மாதலாக இருக்கிறது. அதனால் அனைத்து நாடுகளும் மக்களும் சோஷலிஸ கியூபாவுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதை கடமையாக கொண்டுள்ளன. ஏனெனில் ஏகாதிபத்திய உலக மயமாதலினால் சோஷலிஸ கட்டுமானங்களில் ஈடுபட்டுள்ள கியூபா பாரிய நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கிறது. பொருளாதார தடைகள் அரசியல் சதிகள் போன்றவற்றின் மத்தியிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாமல் இருக்கிறது. கியூபாவுக்கான ஒத்துழைப்பு என்பது ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான போராட்டங்களையும் சோஷலிஸ கட்டுமானங்களையும் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்புக்களையும் கொண்டதாகும்.

இந்த ஒத்துழைப்பு என்பது தனியே உலக நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடதுசாரி கட்சிகளுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் மட்டும் ஏகபோகமானதல்ல. எனவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒத்துழைப்பை வரலாற்று ரீதியாக நினைவு படுத்திக் கொள்வது இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ் நிலையில் மிகவும் பிரயோசனமானதாக இருக்கும்.

பாசிசத்தை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அனைத்து சக்திகளையும் பரந்துபட்ட ரீதியில் ஒன்றிணைப்பதற்காக இத்தாலிய கம்யூனிஸ்ட் தோழர் அந்தோனியோ கிராம்ஷி கட்டியெழுப்பிய சிவில் இயக்கம் மிகவும் பலமாக அமைந்ததுடன் முன்மாதிரியாகவும் இருந்தது 'சிவில் இயக்கம்' என்ற எண்ணக்கரு அனைத்து சக்திகளையும் இணைத்து கட்டி எழுப்ப அடிப்படையானது

நாசிசத்திற்கு எதிராக ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்பி போராடுவதற்கு தோழர் டிமிற்றோவின் ஐக்கிய முன்னணி என்ற எண்ணக்கரு அடிப்படையாக அமைந்தது. அதன் மூலம் நாசிசம் தோற்கடிக்கப்பட்டது. பல நாடுகளில் சோஷலிஸப் புரட்சிகள் ஏற்பட்டன.

தோழர் மாஓசேதுங் அவரது ஐக்கிய முன்னணியின் கொள்கையின் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை இன்னும் விரிந்த தளத்திற்கு கொண்டு சென்றார்.

சோஷலிஸ அரசுகள் கட்டப்பட்டப் பிறகு அவை சோஷலிஸ நாடுகளிலும் சோஷலிஸமல்லாத நாடுகளிலும் உறவுகளை பலப்படுத்தின. அந்நாட்டு மக்களுடன் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் அரசாங்கங்களுடன் உறவுகளை வளர்த்தன. அதற்காக நட்புறவு சங்கங்களையும் அமைத்துச் செயற்பட்டன.

ஒரு நாட்டின் அரசாங்க வரையறைகளுக்கு அப்பால் உறவுகளை வளர்க்க முடியாத நிலையில் சோஷலிஸநாடுகள் எனப்பட்டவை இன்னொரு நாட்டிலுள்ள அரசாங்கத்துடனான உறவு, கட்சியுடனான உறவு மக்களுக்கான உறவு என வகைப்படுத்தின. இந்த உறவுகளில் நாளடைவில் மக்களுக்கும் மக்களுக்குமிடையேயான உறவும் கட்சிக்கும் கட்சிக்குமிடையிலான உறவுகள் கைவிடப்பட்ட நிலையில் சோஷலிஸ நாடுகள் எனக்கூறப்பட்டவை கூட முதலாளித்துவ அரசுகளுடனான உறவை- நாட்டிற்கும் நாட்டிற்குமிடையிலான உறவாக்கிக் கொண்டன.

அதனால் 1980களில் நவ தாராளவாதமும் பின்னர் ஏகாதிபத்திய உலகமயாதலுமாக உலக ஒழுங்கு தீர்மானிக்கப்படுகின்றபோது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகமக்களின் நாடுகளின் கட்சிகளின் பரந்துபட்ட ஐக்கியத்திற்கான இடமே இல்லாமல் போய்விட்டது. ஆனால் உலக மக்களினதும் கம்யூனிஸ்கட்சிகளினதும் வெகுஜன அமைப்புகளினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மத்தியப்படுத்தப்படா விட்டாலும் மேலோங்கி வந்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் மேலும் கியூபா மீது நெருக்கடிகளை அதிகரித்தது. சோஷலிஸ கட்டுமானங்களை கைவிட்டு முதலாளித்துவ அரசியல் நவதாராள பொருளாதபர முறைமைகளை ஏற்படுத்தும்படி வற்புறுத்தி தொடர்ச்சியாக கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்து வந்தது. உள்நாட்டில் தோழர் பிடல் கஸ்ரோ உட்பட அரசியல் தலைவர்களை கொலை செய்யவும் அரசியல் சதிகளை ஏற்படுத்தவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிட்டு செயற்பட்டுவந்துள்ளது.

1989இல் சோவியத்யூனியன் முற்றாகச் சிதைக்கப்பட்டப் பிறகு கியூபாவிற்கு பொருளாதார ரீதியாக மோசமான நெருக்கடிகள் ஏற்பட்ட சூழலில் கியூபா தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக பல நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுக்க வேண்டியதாயிற்று. கியூபாவிற்கு எதிரான ஏகாதிபத்திய நடவடிக்கைகளிலிருந்து கியூபாவை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக்கொள்வதும் ஏகாதிபத்திய உலகமய மாதலுக்கு எதிராகப் போராடுவதும் முக்கியத்துவம் பெற்றன. உலகமெங்கும் வாழும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் எதிர்ப்பு ஏகாதிபத்திய உலகமயமாதலால் பாதிக்கப்படுகின்ற அரசாங்கங்களும் கியூபாவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் ஒன்றிணையலாயின. அந்த அடிப்படையிலேயே கியூபாவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அதில் இப்பிராந்திய கம்யூனிஸ்ட், இடதுசாரி, ஜனநாயக கட்சிகளுடன் அரசாங்கங்களின் அங்கம் வகிப்போரும் கூட இணைந்து செயற்படுகின்றனர். அந்த அமைப்பின் 4வது மாநாடு இப்போது கொழும்பில் யூன் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது.

இதில் கியூபாவின் 50 வருடகால வெற்றிகளையும் சவால்களையும் மதிப்பிடுவது அவசியமாகும்.

நேற்றைய சவால்கள் இன்றைய வெற்றிகளாகவோ தோல்விகளாகவோ இருக்கின்றன. இன்றைய சவால்கள் நாளைய வெற்றிகளாகவோ தோல்விகளாகவோ இருக்கும். அதேபோன்று நேற்றய வெற்றிகள் இன்றைய சவால்களாகவும் இன்றைய வெற்றிகள் நாளைய சவால்களாகவும் இருக்கும். இதில் தோல்விகள் தற்காலிகமானதாகவும் தற்காலிகப் பின்னடைவுகளாக மட்டுமே இருக்கின்றபோது வரலாறு எப்போதும் முன்னோக்கியதாகவே இருக்கும். எனவே வெற்றிகளும். சவால்களும் வரலாற்றின் முன்னோக்கிய சங்கிலிக்கோர்வை ஆகும்.

**தேசப்பற்று**

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கியூப மக்களின் தேசப்பற்றை வளர்க்க வேண்டியது நேற்றைய சவால். அது சர்வதேசப்பற்றின் பகுதியாக பாதுகாத்து வளர்த்தெடுப்பது என்பது தொடர்ச்சியான சவலாகும். அதாவது தேசபக்தி தற்காப்பிற்கான அடையாளமும் எண்ணக்கருவமேயன்றி இன்னொரு தேசத்தை, நாட்டை, இனத்தை தாக்குவதற்கான அடையாளமோ எண்ணக்கருவோ அல்ல.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கியூபாவை மக்கள் குறுகிய தேசியவாதங்கள், மதவாதங்கள் இன, நிறவாதங்களுக்கு அப்பால் கட்டினார்கள். அது இன்றைய வெற்றி என்றாலும் தொடர்ந்து அதை விரிவானதாகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பலதேச மக்களினதும் தேசப்பற்றிற்கு சமமானதும் பகுதியானதுமாக பாதுகாத்து வளர்த்தெடுப்பது சவாலாகவும் இருக்கிறது.

**சோஷலிஸம்**

சோஷலிஸ கட்டுமானத்திற்கு நவதாரளவாதமும் ஏகாதிபத்திய உலகமயமாதலும் பாரிய சவால்களாகும். அச்சவால்களிலிருந்து கியூப சோஷலிஸத்தை பாதுகாத்து ஏகாதிபத்திய உலகமாயமாதலை தோற்கடிப்பதற்கான உலகளாவிய வேலைத்திட்டத்தைக் கட்ட வேண்டும். அதற்கான முன் முயற்சிகள் பல முனைகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். சோஷலிஸ நாடுகள் எனப்பட்டவைகளில் சோஷலிஸ கட்டுமானங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மத்தியில் கியூபா சவால்களுக்கு முகம் கொடுத்து சோஷலிஸ கட்டுமானங்களை அதன் விஷேட சூழ்நிலைக்கு ஏற்ப முன்னெடுத்து வருகிறது. அதாவது கியூப சோஷலிஸம் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு அடிபணிந்துவிடவில்லை. இதுவரை அது வெற்றியாவதுடன் தொடர்ச்சியான சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேற வேண்டியும் உள்ளது.

கியூப கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர்களும் உலகமாயமாதலை ஏகாதிபத்திய உலகமயமாதல் என நிறுவியதுடன் அதற்கு எதிரான போராட்டத்திற்கான பல முன் தேவைகளை பூர்த்தி செய்துள்ளனர். அதற்கு பிரதானமாக கியூபாவின் உள்ளக விடயங்களை ஒழுங்குபடுத்தியுள்ளனர். சோஷலிஸம் என் பது ஒரு நாட்டில் கட்டப்படுகின்றபோதும் அது குறுகிய தேசியவாத தேச எல்லைகளுக்குட்பட்டதாக கட்டப்படாமை கியூப சோஷலிஸத்தின் வெற்றியாகும். கியூப மக்களின் ஏகாதிபத் திய எதிர்ப்பு சோஷலிஸத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.



கியூப ஒத்துழைப்பிற்கான 4வது ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் மாநாட்டில் இ.தம்பையா உரையாற்றுகிறார்

சோஷலிஸத்தின் அடிப்படையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது மத அடிப்படைவாதத்தினதும் (ஒசாமா பின்லேடனின் அல்ஹைடா) தனியார் சர்வதிகாரத்தினதும் (ஈராக்கின் சதாம் ஹூசைனின் ஏனைய அராபிய நாடுகள் பர்மா போன்ற கீழைத்தேய நாடுகள்) இனவாதத்தினதும் குறுகிய தேசிவாதத்தினதும் ஏகாதிபத்திய எதிர்ப்புகளிலிருந்து வேறுபடுத்தி பார்க்கப்பட வேண்டும். இவ்வாறான ஏகாதிபத்திய எதிர்ப்பை உச்சரிக்கும் மத, இன, தேசியவாதங்கள் ஏகாதிபத்தியத்தின் தேவைகருதிய உருவாக்கங்களாகவும் அதனைப் பாதுகாப்பதற்கு தேவையானதாகவும் இருக்கின்றன.

**ஒத்துழைப்பு**

கியூபாவின் வரலாறு ஒத்துழைப்பின் அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்டது என்று தோழர் பிடல்கஸ்ரோ கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் உள்நாட்டிலும் பல கருத்துடையவர்களின் ஒத்துழைப்பையும் வெளிநாடுகளில் பல கருத்துடையவர்களின் ஒத்துழைப்பையும் குறிப்பதாகும்.

கடந்த காலத்தில் சர்வதேச ஒத்துழைப்பு பற்றியும், கம்யூனிஸ பாட்டாளிவர்க்க சர்வதேசியம் பற்றியும் பேசிய சோஷலிஸநாடுகள் தமது தேசத்தின் நலனை மட்டுமே முதன்மைப்படுத்தி செயற்பட்டன. அவற்றின் சோஷலிஸம் சர்வதேச புரட்சியின் ஒரு பகுதியெனவும் தனிநாட்டின் புரட்சி உலகப்புரட்சியின் பகுதி என்று கூறிக் கொண்டபோதிலும் உண்மையில் உலகப் புரட்சிஎன்பதை அதன் அர்த்தத்தில் புரிந்து கொண்டு செயலாற்றவில்லை. அதனாலேயே பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பின்னடைவைக் கண்டது. பல நாடுகளில் சோஷலிஸ கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டன.

ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியில் சோஷலிஸ நாட்டிற்கும் ஏனைய நாடுகளுக்குமிடையிலான தொடர்பும், கம்யூனிஸ்ட்டுகளுக்கும் கம்யூனிஸ்டல்லாதவர்களிடையிலான தொடர்பும் தவிர்க்க முடியாதது. ஏகாதிபத்திய எதிர்ப்பை தனியே கம்யூனிஸ்ட்டுகளினால் மட்டுமோ, சோஷலிஸ நாடுகளினால் மட்டுமோ முன்னெடுத்து வெற்றியடைய முடியாது. அதேவேளை சோஷலிஸ நாடுகளல்லாத, கம்யூனிஸ்ட்டுகள் அல்லாதவர்களினால் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்ற ஏகாதிபத்திய எதிர்ப்பும் வெற்றியடைய முடியாது.

ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கான உள்நாட்டு சர்வதேச ஒத்துழைப்பு அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றிணைக்கும் ஐக்கிய முன்னணி தந்திரோபாயமேயாகும். ஆனால் அவ் ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது கியூப ஒத்துழைப்பு என்பதில் அடிப்படை சக்திகள், பக்க சக்திகள் என்ற இரண்டு பிரிவை அவதானிக்க வேண்டும். அடிப்படை சக்திகள் கம்யூனிஸ்ட்டுகளே. இவர்களை அடிப்படையாக கொள்ளாத ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி முன்னோக்கிச் செல்ல முடியாது. ஏனெனில் ஏகாதிபத்திய எதிரப்பை கம்யூனிஸ்ட்டுகள் தந்திரோபாயமாகவன்றி மூலோபாயமாகவே கொள்கின்றனர். அத னால் அவர்களின்றி தந்திரோபாயமாக ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் தலைமையான அடிப்படையான பாத்திரத்தை வகிப்பது ஆரோக்கியமானதாக இராது. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பக்க சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பரந்த ஐக்கிய முன்னணியில் இணைக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்கமுடியாது. ஆனால் தலைமை சக்திகளாக இருப்பது ஆரோக்கியமானதல்ல.

எனவே அடிப்படை அம்சமானது கியூப மக்கள், கியூப அரசு ஏனைய நாட்டு மக்களுடனும், கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகளுடனம் கொண்டிருக்கும் அடிப்படையான தொடர்பாக வலுப்பெறுவதுடன் கம்யூனிஸ்ட்டுகளை முன்னிலையாகக் கொண்ட ஒத்துழைப்பாக வளர்க்கப்படுவதிலுமே வெற்றி தங்கி இருக்கிறது. அந்த அடிப்படையில்

தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சாமிமார்களும் செய்திப் பத்திரிகைகளும்

**15.6.2008 வீரகேசரியில் முன்பக்கத்தில்** கொட்டை எழுத்திலும் உள்ளே மிகுந்த முக்கியத்துவங் கொடுத்தும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமி என்கிற ஒரு வெண்சட்டை அரசியல் தரகரின் நேர்காணல் வெளியிடப்பட்டிருந்தது. அவரிடங்கேட்கப்பட்ட கேள்விகட்கு வழங்கப்பட்ட பதில்கள் அவருக்குப் பல பெரும் அரசியற் புள்ளிகளிடம் செல்வாக்கு உள்ளது போலவும் அவர் மூலமே இலங்கையின் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு வரும். என்கிற எதிர்பார்ப்பைத் தூண்டுவனவாயும் அமைந்திருந்தன. சாமியார் சாமானியரல்லர். சாமர்த்தியமானவர் "உங்களுக்கு .......... அவர்களிடம் மிகுந்த செல்வாக்கு உண்டு என்கிறார்களே" என்று கேட்டால் "அதற்கு நான் மறுமொழி சொல்ல இயலாது. அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று பதில் வரும் சராசரியான வாசகர் சுவாமிகளுக்கு எங்கெங்கெல்லாமோ செல்வாக்கு இருந்தாலும் மிகவும் தன்னடக்கமாக அதைப் பற்றிப் பேசாமலிருக்கிறார் என்று நினைத்துக் கொள்வர்.

செல்வி காணப்போகிறவர் சொல்லி அனுப்பிய விதமாகவே கேள்விகளைக் கேட்டாரோ தானே சிந்தித்துக் கேட்டாரோ தெரியாது. ஆனால் எந்த ஒரு கருத்தையும் மேலும் விசாரணைக்கு உட்படுத்தியதாகத் தெரியவில்லை. இன்றைய நேர்காணல்கள் பல எழுதிக் கொடுக்கிற கேள்விகட்கு எழுத்தில் வருகிற விடைகளாக அமைகிறதால் இந்த நேர்காணல் பற்றி மேலும் எதுவுங் கூற இயலாது. என்றாலும் அதற்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் வேறு ஐயங்களை எழுப்புகிறது.

இந்தச் சாமியாருக்கு விளம்பரம் பெறுகிற வித்தை நன்கு தெரியும். இதற்கு முன்பு இலங்கை வந்த வேளைகளிலும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுகளை எல்லாம் தனது தாடிக்குள் மறைந்து வைத்திருக்கிறார் என்று நம்பக் கூடிய வித



மாக அவருக்கு ஆங்கில நாளேடுகள் சிலவற்றிலும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இம் முறை ஆங்கில நாளேடுகளில் இல்லாத முக்கியம் ஒரு தமிழ் ஏட்டில் மட்டும் வந்துள்ளதால் சாமியாரின் ஒளி கொஞ்சம் மங்கத் தொடங்குகிறதோ என்று எண்ணம் தூண்டுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரைச் சந்திக்கத் தனக்கு அனுமதி கிடைக்கும் என்று சாமியார் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். நோர்வே சமாதானத் தூதர்களையோ பிற நாட்டு அரசியற் பிரமுகர்களையோ வன்னிக்குப் போக விடாத அரசாங்கம் இவரை அனுமதிக்கும் என்றால் அதன் அர்த்தம் என்ன? இவரை அனுமதிக்குமாறு இந்திய ஆட்சியாளர்கள் நெருக்குவாரங் கொடுக்கிறார்கள் என்று கொள்வதா? அல்லது இவர் இந்த அரசாங்கத்தின் பெரும் நம்பிக்கைக்குரிய ஒருவர் என்று கொள்வதா? அல்லது நேர்காணலின் மிகுதியிலிருந்து தோன்றுவது போல் ஒரு புலுடா மன்னர் என்று கொள்வதா?

இந்திய அரசாங்கம் போதிய அக்கறை காட்டாததால் தான் இலங்கைப் பிரச்சனை இழுபடுகிறது என்ற கருத்துக்குக் கொட்டை எழுத்துத் தலையங்கம் வழங்கியுள்ள வீரகேசரிக்கு இந்திய அரசாங்கம் "அக்கறை" காட்டியதால் முன்பு என்ன நட ந்தது என்று இன்னமும் தெரியாதா?

இன்னும் காவிச்சட்டை – வெண்ணுடைச்சாமிகள் மூலமே மனிதரை ஏய்க்கவும் மிரட்டவும் இயலுமாக உள்ளது. அடுத்தடுத்து நூறு காவிச்சட்டைக் மற்றும் வெண்ணுடைக் காரர்களால் அணாப்பப்பட்டது தெரிந்த பிறகும் நூற்றியொராவது சாமியார் என்பவருடைய (காலில்) விழுவதற்கு ஆயத்தமானவர்கள் இந்திய மண்ணில் மட்டுமல்ல இந்த மண்ணிலும் இருக்கிறார்கள். கடவுளின் பேராலும் மதத்தின் பேராலும் சோதிடம் மாந்திரிகம் என்கிற பேர்களிலும் ஏமாறக் கூடியவர்கள் தான் முக்கிய அரசியற் தலைமைப் பொறுப்புக்களில் இருக்கிறார்கள். அந்தப் பாவ மூட்டைகளுக்கு மனோதைரியம் தருகிறதற்காக வேறு பாவ மூட்டைகள் சாமியார் வேடத்தில் உலாவுகின்றன. இத்தகைய சாமி மார்களுக்குப் பின்னார் இடம் பெறும் தகடுதத்தங்கள் மோசடிகள் பாலியல் வக்கிரங்கள் பணப்புரள்கல்கள் ஏராளம்.

ரஷ்யப் பேரரசின் மண்ணையே பேய்க் கூத்தாட்டியவன் ரஸ்புட்டின் என்கிற கபட சந்நியாசி. எல்லார் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டிய இந்திரா காந்தியை முட்டாளாக்கியவன் சந்திரா சுவாமி என்கிற பித்தலாட்டக்காரன். ஆனாலும் இன்னமும் இந்திய மண்ணில் கிராமம் முதல் மாநகரம் வரை சாமிமாருடைய ஆட்டம் ஓயவில்லை. போதாதற்கு அது அமெரிக்காவுக்கும் ஏற்றுமதியாகிறது.

பத்திரிகைகள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். சில படு பிற்போக்கான பத்திரிகைகள் கூடச் செய்திகளை வெளியிடுகிற போது நிதானத்துடன் வெளியிடுகின்றன. தமக்கு மாறுபாடான கருத்துக்கட்குக் கூடக் குறைந்த பட்ச இடம் ஒதுக்கித் தமது நம்பகத் தன்மையைத் தக்க வைத்துக் கொள்கின்றன. இலங்கையில், முக்கியமாகத் தமிழில் அந்த விதமான வாய்ப்பு மிகக் குறைவு. ஒரு சில பத்திரிகைகள் மிகவும் மோசமாகவே நடந்து கெள்ளகின்றன.

வெறுமனே தமிழ்த் தேசியவாதத்தைப் பிரசாரப்படுத்துகிற விதமாகச் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு உண்மை நிலவரங்கள் தெரியாமல் மறைக்கப்படுகிறது. அது மட்டுமன்றி உலக விவகாரங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிரான தகவல்களோ விமர்சனங்களோ வராமற் கவனித்துக் கொள்ளப்படுகிறது. இன்னமுங் கூட நேபாள மாஓவாதிகட்குப் பாதகமான முறையிலேயே செய்திகள் வெளியாகின்றன. சீன விரோதம் வசதிகிடைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் புலனாக்கப்படுகிறது. கியூபாவைப் பற்றிய அவதூறுகள் வெளிவரும் அளவுக்கு மக்கள் கியூபாவை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக எதுவுமே காணக் கிடைப்பதில்லை.

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பிறகு சோஷலிசம் முடிந்து விட்டது என்கிற பாட்டைக் கிளிப்பிள்ளைகள் போல ஒப்பித்து அதுவே இவர்களுக்கு மனப்பாடமாகிவிட்டது. எனவே அந்த நம்பிக்கைக்கு முரணான எந்தத் தகவலையும் கவனமாகவே கசிய விடாமல் கவனித்துக் கொள்கிறார்கள்.

தமிழ் நாட்டில் கருணாநிதி ஆட்சியின் அத்தனை திருகு தாளங்களையும் அறிந்தும் இன்னமும் கருணாநிதி மூலம் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டு என்று நம்பச் செய்கிற விதமான கூலி எழுத்தாளர்களையும் உலகில் என்ன நடக்கிறது என்று அறியவே அக்கறையற்றவர்களைக் கொண்டு இந்திய உலக விவகாரங்களை எழுதுவிக்குமளவுக்கு நமது பத்திரிகை உலகத்தில் சுயமான சிந்தனையுள்ளவர்கட்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதா?

நமது பத்திரிகை உலகில் நடக்கிறவற்றுக்குச் சோம்பலையோ அக்கறையின்மையையோ மட்டும் காரணம் என்று நம்புவது கடினமாக உள்ளது. ஏனெனில் அவை சாமிமார் பற்றியும் அக்கறை காட்டுகின்றன. சமூக முக்கியம் உள்ள அரசியல் அறிக்கை உட்ட சில கட்சிகளின் நடவடிக்கைகளை புறக்கணிக்கின்றன.

இந்திய மேலாதிக்க வாதிகளது நோக்கங்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதி வலைகளும் அம்பலப்படுத்தப்பட வேண்டிய ஒரு நெருக்கடி மிக்க சூழலிலும் உலகமயமாக்கலின் கொடுமையை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு நேரத்திலும் அத்தேவைகட்கு எதிர் மாறான விதமாகவே நமது நாளேடுகள் நடந்து கொள்கின்றன என்றால் அதற்குப் பின்னால் ஆழமான சில நோக்கங்கள் செயற்படுகின்றன என்பது தான் காரணமாயிருக்கும்.

நமது ஏடுகள் எதையெதைச் சொல்கின்றன என்பதையும் எதையெல்லாம் சொல்லாமற் தவிர்க்கின்றன என்பதையும் பற்றி வாசகர்கள் கொஞ்சம் விழிப்புடன் இருந்தால நமது செய்திப் பத்திரிகை உலகம் கொஞ்சமேனுந் திருந்த வாய்ப்பு உண்டு.

–ஆறுமுகசாமி–

# கலைஞர் 85

**அண்மையில் தமிழகத்தின் தலைநகர்** சென்னையில் "கலைஞர் 85" கொண்டாடப்பட்டது. இன்னும் பல்லாண்டுகளுக்கு கலைஞர் கருணாநிதி வாழ வேண்டும் என அவரால் வாழ்பவர்கள் வாழ்த்துத் துரைத்தனர். 71 வருட அரசியல் வாழ்க்கை என்பார்கள். அதுவும் திராவிடப்பாசறையின் தலைமைத்தளத் தராக இருந்து பல்வேறு பதவிகள் பட்டங்கள் வகித்து உயர் பதவியான முதலமைச்சராகவும் தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் தலைமை தாங்கி வந்தவர் "கலைஞர்" "டாக்டர்" "முத்தமிழ் காவலர் மு. கருணாநிதி ஆனால் தமிழகத்தின் வறுமை சாதிய தீண்டாமை ஒழிந்ததா? பெண்கள் விடுதலை பெற்றார்களா? அல்லது தமிழர் மொழியும் பண்பாடும் தான் வளர்ந்ததா? அந்த சுத்தத் தமிழன் கலைஞர் தனது 85 வயதினுள் தன்னை வளர்த்து கோடீஸ்வரர் ஆகினார். பிள்ளைகளை வளர்த்து கோடீஸ்வரர்களாக்கினார், உறவினர்களை உயர்த்தி லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களாக்கினார். இறுதி ஆசை தன் பிள்ளைகளில் ஸ்டாலினை அல்லது கனிமொழியை தான் ஆண்ட சிம்மாசனத்தில் அமர்த்திக் கொள்வது தான். தமிழனைத் தமிழன் ஆண்டதன இலச்சணம் கலைஞர் 85ல் காணமுடியும்.

# கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

## செங்குருவி

### கிறிக்கெட் யாருக்காக?

**2007ன் உலக கிரிக்கெட்** கிண்ணத்திற்கான போட்டியில் இலங்கை கலந்து கொண்டது. இப் போட்டிக்குச் செலவிடப்பட்டுள்ள முழுத் தொகை ஒரு கோடி முப்பதெட்டு லட்சமாகும். இதில் அமைச்சர் "பெரும் மக்கள்" கலந்து கொண்டதால், அவர்களுக்குரிய செலவு மட்டும் 50 லட்சம் ரூபாய்களாகும். மிகுதி கிறிக்கெட் அதிகாரிகள் பிரதிநிதிகளுக்கானதாகும். கிறிக்கெட் விளையாட்டில் பணம் விழுங்கி உல்லாசம் அனுபவிப்போர் யார்? இந்த விபரத்தை விளையாட்டு அமைச்சர் பாராளுமன்றத்தில் கேட்கபபட்ட கேள்விக்கு பதிலாகக் கூறி உள்ளார். ஆனால் செலவு செய்யப்பட்ட தொகை பல கோடிகள் என்றும் பேசபபடுகிறது.

### பசியும் களவும்

மனைவி பிள்ளைகள் கொண்டு ஒரு இளம் சிங்கள குடும்பஸ்தர் இரவு நேரத்தில் தென்னந் தோட்டத்தில் களவாகத் தேங்காய் பிடுங்கச் சென்றார். அங்கு கம்பி வேலியில் மின்சாரம் பாச்சப்பட்டிருந்ததை அறியாது அதில் சிக்கி உயிர் இழந்தார். ஒரு இறாத்தல் பாணின் விலை 40 ரூபாய். ஒரு தேங்காயின் விலை 50 ரூபாய் குடும்பத்தின் பசி போக்கவே அவர் தேங்காய் பிடுங்க முற்பட்ட உயிர் துறந்தார் இது களவா? இது களவென்றால் மேட்டுக்குடி மாளிகைகளில் அரசாங்க நிறுவன உயர் மட்டங்களில் பாதுகாப்புகளோடு நாளாந்தம் நடைபெறும் ஊழல் மோசடி மூலமான களவுக்கு என்ன பெயர்? என்ன தண்டனை?

### தனி நாட்டிற்குப் பின்னால்?

அண்மையில் தனிநாடாகப் பிரகடனம் செய்யப்பட்டு அமெரிக்க மேற்குலகால் அங்கீகரிக்கப்பட்டது கொசோவா அங்கு சுமார் இரண்டாயிரம் ஐரோப்பியர்களை அனுப்பி வைக்க அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் முடிவு செய்யப்பட்டது. அவர்களில் நீதிபதிகள் நீதித்துறை அதிகாரிகள் நிர்வாக முகாமைத்துவத் திறமையாளர்கள். வங்கியாளர்கள் பொலிஸ்துறை அதிகாரிகள், படையதிகாரிகள் உள்ளிட்ட பல்துறை நிபுணர்கள் அடங்குகின்றனர். ஏற்கனவே ஐ.நா வின் அதிகாரிகளும் நேட்டோப் படையினரும் அமெரிக்காவின் வழிகாட்டலில் இருந்து வருகின்றனர். இவை யாவும் தனிநாட்டுப் பிரகனத்திற்குப் பின் வந்து சேரும் விடயங்களாகும். கொசோவோ சுதந்திர நாடா அமெரிக்க ஐரோப்பியக் கொலனியா? இது சிந்திக்கும் ஒவ்வொரு வரும் கவனத்திற்கு எடுக்க வேண்டியதாகும்.

"கடந்த எட்டரை வருடங்களாக வவுனியா தேசத்தில் நீதபதியாகப் பதவி வகித்த காலத்தில ஆயிரம் வரையான மரண விசாரணை களுக்கு கண்டுள்ளேன் இவ்வாறு மேல் நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற நீதிபதி எம். இளஞ்செழியன் தமக்கு அளிக்கப் பட்ட பிரியாவிடையின் போது கூறியுள்ளார். இந்த ஆயிரம் அகால மரணங்களில் இடம் பெற்றவையாகும். ஆனால் அழிக்கப்பட்டவர்கள் சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகளும் அவர் தம்பிப் பிள்ளைகளுமாவர்.

### குடைபிடித்தோருக்கு இல்லை

வடக்கு மாகாணம் கிழக்கிலிருந்து பிரிக்கப்பட்ட பின் அதன் ஆளுனர் பதவி தத்தமக்கு வரக் கூடும் எனச் சில தமிழ் கனவான்கள் கனவு கண்டு வந்தனர். ஆனால் ஜனாதிபதி பொலீஸ்மா அதிபர் பதவியில் இருந்து இறங்கியவுடன் அவரை வட மாகாண ஆளுனராக விக்டர் பெரேராவை நியமித்து விட்டார். பேரினவாதத்திற்கு குடைபிடிப்பர்களை நம்புவதை விட பேரினவாத நிலைப்பாட்டளாரை நம்புவதையே ஜனாதிபதி நடைமுறைப் படுத்தியுள்ளார். இதனால் பதவிக்கு கனவு கண்டு வந்த சில தமிழ்க் கனவான்கள் கடும் சினத்துடன் உள்ளனராம்.

### சுடலை ஞானம்

இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் சந்திகா அம்மையார. அவருககு முன்பு வராத ஞானம் எல்லாம் இப்போது அடுக்கடுத்து வந்த கொண்டிருக்கிறது. ஜனநாயகம் கருத்துச் சுதந்திரம் நேர்மையானவர்களின் வாய் திறக்க முடியாத நிலை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என எடுத்துரைத்து வருகிறார். கண்கெட்டுப் போகும் வரை சூரியனைப் பற்றி சிந்திக்காது இருந்து விட்டு முற்றும் போன பின் சூரிய வணக்கத்திற்கு தயாரான கதை தான். இனிச சுடலை ஞானம் பேசிப் பயன் இல்லை.

# சாதியப் போராட்ட அனுபவங்கள் படிக்கப்பட வேண்டியவை

## நூல் அறிமுக அரங்கில் கேட்டவை

**இலங்கைச் சமூக அமைப்பின் அசைவியக்கத்தில்** சாதியம் ஒரு கூறாக் நிலைத்து நீடித்து வந்துள்ளது. குறிப்பாக இலங்கைத் தமிழர்களிடையே சாதியமும் அதன் உடன் பிறப்பான தீண்டாமையும் தீவிரமான சாதிய முரண்பாடாகவும் ஒடுக்கு முறையாகவும் இருந்து வந்துள்ளது. அவற்றுக்கு எதிரான பன்முக எதிர்ப்புகளும் போராட்டங்களும் அவ்வப் போது இடம் பெற்று வந்துள்ளன. இருந்த போதிலும் 1966-71 வரையான புரட்சிகர கம் யூனிஸ்டுக்கள் நடாத்திய கடுமையான போராட்டங்களினால் பொது இடங்களில் தீண்டாமை ஒழிக்கப்பட்டதுடன் சாதியத்தின் தீவிரமும் பலமான அடிகளின் மூலம் பலமிழக்கச் செய்யப்பட்டது. இத்தகைய சாதியத்தையும் அதற்கெதிரான போராட்டங்களையும் வரலாற்றுப் பதிவாகக் கொண்டு வெளிவெளிவந்துள்ளதே "இலங்கையின் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூலாகும். இந் நூல் 1989ல் முதலாவது பதிப்பாக வெளிவந்தது. இதனை வெகுஜனன், இராவணா ஆகிய இரு வரும் எழுதியிருந்தனர். இப்போது திருத்தப்பட்ட இரண்டாவது பதிப்பாக 242 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதனை தமிழ் நாட் டின் சவுத் விஷன் பதிப்பகம் வெளியிட் டுள்ளது. சாதியத்தை எதிர்த்து நிற்கும் அனைத்து மக்களும், சாதிய வக்கிர மனத்தடைகளைக் கடந்த ஜனநாயக சக்திகளும் சாதியத்தை வேரோடு அறுத்தெறியக் போராடி வரும் பொதுவுடைமை வாதிகளும் இந் நூலின் மீள் வரவை மனமார வரவேற்றுள்ளனர். அதே வேளை சாதியம் பற்றி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தமிழ்த் தேசியவாதப் பற்றாளர்களும் பழமைவாதிகளும் சாதிய மேன்நிலையாக்கம் பெற்றவர்களும் ஒருவகை முகச் சுழிப்புடனேயே இந் நூலின் வரவைக் காணுகின்றனர்.

இத்தகைய தமிழ்ச் சூழலில் வெளி வந்துள்ள இந் நூலின் இரண்டாவது பதிப்பிற்கான அறிமுக அரங்கு கடந்த 15-06-2008 அன்று கொழும்பில் இடம் பெற்றது. வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பேராசிரியர் சி. சிவசேகரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அறிமுக அரங்கில் கணிசமானனோர் வந்து கலந்து கொண்டனர். பொதுவாகவே இலக்கியம் சமூகம் தமிழ்ப் பற்று தமிழ்த் தேசியம் என நீட்டி வாசிப்போரும் தரிசிப்போரும் இந் நூல் அறிமுக அரங்கிற்கு வரவில்லை. காரணம் அவர்களிடம் உள்ளூரப் படிந்து காணப்படும் பழைமைவாதச் சாதியழுக்கும் அதனாலான மனத்தடையுமாகும். அத்தகைய சாதிய அழுக்கை வெவ்வேறு அளவுகளில் சுமந்து கொண்டு எவ்வளவிற்கு தமிழ்த் தேசியம் விடுதலை பற்றிப் பேசினாலும் அல்லது எழுதினாலும் அவை இரண்டக நிலை தான். இத்தகையோரைப் போன்றவர்கள் தான் சமூகம் இலக்கியம் சாதிய எதிர்ப்புப் பற்றிப் பேசும் முற்போக்குப் போர்வை போர்த்தியவர்களும். தமிழர் சமூகத்தில் நிலவும் ஒரு கொடிய அமைப்பு முறைக்கும் அதன் வக்கிரத்தையும் எதிர்த்து நிற்க முடியாத எவரும் முழுத் தமிழராக அன்றி பாதித்தமிழராகவே இருப்பர் என்பதே உண்மையாகும்.

அந்த வகையில் இன்றைய சூழலில் மிகுந்த துணிச்சலுடனும் சம காலத் தேவை அடிப்படையிலும் "சாதியமும் அதற் கெதிரான போராட்டங்களும்" நூல் வெளிவந்திருப்பது வரவேற்கப்பட வேண்டி யது. அதேயளவு முக்கியத்துவமுடையது கொழும்பில் இடம் பெற்ற அதன் அறிமுக அரங்குமாகும்.

### சோ. தேவராஜாவின் வரவேற்புரை

இந் நூல் அறிமுக அரங்கை ஆரம்பித்து வைத்து சட்ட த்தரணி சோ. தேவராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். இன் றைய சூழலில் இந் நூல் சமூக இழிவாகப் பின்பற்றப்படும் சாதியத்தையும் அதனை எதிர்த்த போராட்டங்களையும் பற்றி எடுத்துக் கூறுகிறது. தமிழர்களிடையே கொடூர ஒடுக்கு முறையாக நீடித்த சாதியத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற வரலாறு முழுத் தமிழர்களின் விடுதலைக்கு படிப்பினை தரும் போராட்டமாகும். அந்த வெகுஜனப் போராட்டங்கள் ஜனநாயகம் மனித உரிமை சமத்துவம் மனித கௌரவம் என்பனவற்றை வென்றெடுத்தது. ஆனால் இன்று இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபட வெளிநாடுகளை எதிர்பார்த்து தமிழர் தரப்பினர் தவமிருக்கின்றனர். முன்பு பட்டவற்றைக் கூட மறந்து அந்நியர் வருகைக்காக குரல் வைக்கப்படுகிறது. ஆனால் அன்றைய சாதியப் போராட்டம் மக்களால் மக்களுக்காகவே முன்னெடுக்கப்பட்டவையாகும் என்று கூறினார். அத்துடன் இன்றைய நெருக்கடியும் அச்சமும் நிறைந்த சூழல் இருந்தும் கூட இந் நிகழ்வுக்கு வருகை தந்துள்ள இந்தியத் தோழர்கள் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றுக் கொள்வதாகவும் கூறினார்.

### சி. சிவசேகரம் தலைமையுரை

பேராசிரியர் சி. சிவசேகரம் தனது தலைமையுரையில் இந் நூலின் இன்றைய தேவை பற்றி எடுத்துக் கூறினார். பழை மைவாதத்தையும் சாதியத்தையும் கொண்டிருப்பவர்களை தூக்கி நிறுத்திப் புகழ்பாடுவார்கள். அதேவேளை அவற்றுக்கு எதிரான கருத்துக்களை நிராகரிப்பதுடன் இருட்டடிப்பும் செய்து கொள்ளவார்கள். உதாரணமாக பொன்னம்பலம் இராமநாதனைப் போற்றிப் புகழுவோர் அவரது தம்பியான அருணாசலத்தைக் கவனிப்பதில்லை. காரணம் தனது சூழலையும் மீறிய வகையிலான சமூகச் சார்புக் கருத்து க்களை அருணாசலம் முன்வைத்தமையேயாகும். அவ் வாறே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சாதியத்தை ஒழிக்கப் பாடு பட்டார் என்று கூறும் தமிழ்த் தேசிய வாதிகள் அவரது காலத்தில் கண்ணெதிரே இடம் பெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றி வாயே திறப்பதில்லை. அந்தவகையில் ஒரு வரலாற்றுகப் பதிவாக மட்டுமன்றி இன்றைய தமிழ்த் தேசியவாதப் போராட்ட சூழலில் அன்றைய சாதிய எதிர்ப்பும் வெகுஜனப் போராட்டங்களில் பின்பற்றப்பட வர்க்கப் போராட்ட அணுகுமுறைகளுக்கான முன்னுதாரணங்களையும் இந் நூலில் காணமுடிகிறது. அந்தவகையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் நூல் வெளிவந்திருப்பது காலத்தின் தேவையாகிறது என்றும் கூறினார்.

### சோ. சந்திரசேகரம்

அடுத்து உரையற்றிய பேராசிரியர் சோ. சந்திரசேகரம் இந் நூல் சாதியம் பறறி விரிவான ஒரு சமூகப் பார்வையைப் பதிவு செய்துள்ளதுடன் சாதியத்திற்கு எதிரான படிமுறையான வளர்ச்சிப் போராட்டங்களையும் எடுத்துரைக்கின்றது. ஆதலால் சமூகவியலைப் படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் நமது சமூகத்தில் படிந்து காணப்படும் சாதியத்தைப் புரிந்து கொள்வது அவசியம் எனவும் கூறினார்.

சாதியத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர்கள் விவாசா யிகளாகவே உள்ளனர். நமது கல்வி முறையில் அவர்களின் உற்பத்தி அறிவ என்பது பெறப்படுவதில்லை. இதற்கு காரணம் இப் பொழுதும் கல்வித்துறையில் மேல்மட்டத்தில் உள்ளோர் மத்தியில் நிலவி வரும் நிலமானியச் சிந்தனையின் தாக்கமேயாகும். இத் தகையோர் சாதியத்தையும் உள்வாங் கியே செயல்படுகிறார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது.

அத்துடன் இந் நூலில் சிங்கள மக்களிடையேயும் மலையகத் தமிழர்கள் மத்தியிலும் இருக்கும் சாதியத்தையும் எடுத்துக் கூறியிருப்பதும் முக்கியத்துவமுடையது என்றும் கூறினார்.

### ஜி. இராமகிருஷ்ணன் கருத்துரை

மேலும் கொழும்பில் இடம்பெற்ற கியூப ஒத்துழைப்பிற்கான ஆசிய பசுபிக் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா) யின் மத்திய குழு உறுப்பினர் ஜி. இராமகிருஷ்ணன் இந் நூல் அறிமுக அரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தமதுரையில் இந்தியாவில் பிறந்து வளர்ந்து வேரூன்றிய சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்துப் போராடுவதில் இந்தியக் கம்யூனிஸ்டுகளும் இடதுசாரிகளும் தொடர்ந்து போராடி வந்த வரலாறுக் குறிப்புக்களைச் சுருக்கிச் சுட்டிக்காட்டினார். அத்தகைய பாரம்பரியத்தில் மாக்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி தொடர் ந்து சாதிய எதிர்ப்பில் முன்னின்று போராடி வருவதாகவும் கூறினார். அதேவேளை முழு இந்தியாவிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலும் சாதிய தீண்டாமை தலைவிரித்து ஆடிவருவதையும் உதாரணங்களுடன் எடுத்துக் கூறினார். கம்யூனிஸ்டுக்கள் பலம் பெற்றுள்ள மாவட்டங்களில் சாதிய மும் தீண்டாமையும் முறியடிக்கப்பட்ட சம்பவங்களையும் கூறினார். இலங்கையில் சாதியம் எவ் வாறு செயற்படுவதையும் அதற்கெதிரான போராட் டங்களையும் இந் நூல் விபரி ப்பதன் வாயிலாக இங்குள்ள நிலைமைகளை அறிய முடிகின்றது. எனவே இந் நூல் தமிழ் நாட்டில் வெளிவந்திருப்பதால் அதனை அங்கு விற்பனை செய்வதற்கு தாம் முழு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் எடு த்துக் கூறினார்.

### சி. தில்லைநாதன் கருத்துரை

அடுத்து பேராசிரியர் சி. தில்லைநாதன் உரையாற்றினார். அவர் தனது உரையில் சாதியத்தின் மையப பகுதியாக விளங்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் சாதியப் படிமுறை யை தனக்கேயுரிய அழகு தமிழில் எடுத்துக் கூறினார். அங்கு ஒவ்வொரு வருக்கும் தமக்குக் கீழே மற்றவர் சாதிய ரீதியில் இருப்பதையே விரும்பினர். சாதியப் படி நிலையில் கடைசியாக இருத்தப் பட்ட மக்களே சாதிய தீண்டாமைக்கு ஆளாக்கப்பட்டனர். இவர்களை அந்தந்த இடத்தில் வைக்க வேண்டும். அல்லாது இடம் கொடுத்தால் தலையிலும் ஏறுவினம் என்றவாறு சாதி யம் பாதுகாக்கப்பட்டதை எடுத்துக் கூறினார். சாதியத்தை ஆரியரே கொண்டு வந்தனர் எனக் கூறுவது இட்டுக்கட்டலாகும். எமது சங்க இலக்கியங்களில் இந்தச் சாதியம் பற்றிக் காணமுடியும். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறும் திருக்குறள் மூலம் எதனைக் காணமுடிகிறது. சாதியத்தைக் கைவிடத் தயாரில்லாத மேல சாதித் தமிழர்களுக்கு பத்திரிகைகளில் சாதியம் பற்றி விபரித்து எழுதினால் கோபம் வந்து விடுகிறது. 1962ல் "சிலோன் ஒப்சேவர்" பத்திரிகையில் நான் சாதியம் பற்றி எழுதினேன். (இக் கட்டுரையின் தமிழ வடிவம் இந்நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) அதனை வாசித்த ஒரு வெள்ளைக்காரர் விபரமான கடிதம் ஒன்றை அதே பத்திரிகையில் எழுதினார். இதையிட்டு அன்றைய தமிழ்ப் பாரா ளுமன்ற உறுப்பினர் சிலருக்கு கடும் கோபம். ஏன் இவ்வாறு நம்மை அம்பலப்படுத்தி எழுத வேண்டும் எனச் சினந்தனர். சாதியம் இழிவாகவும் ஒடுக்கு முறையாகவும் இருப்பதையிட்டு தமிழ்த் தேசியவாதிகளுக்கு பிரச்சினை இல்லை. அதனை அம்பலப்படுத் துவதும் எதிர்த்துப் போராடுவதும் தான் பிரச்சினை என்றவாறா கவே இப்போதும் உள்ளது. இங்கு மட்டுமன்றி புலம் பெயர்ந்த நாடுகளிலும் இச் சாதியம் இப்போதும் பேணப்படுவதை புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து வரும் எழுத்துக்கள் கூறுகின்றன. எனவே சாதியத்திற்கு எதிரான போராட்டம் தொடரப்பட வேண் டும் எனக் கூறினார்.

### இ. தம்பையா கருத்துரை

அடுத்து சட்டத்தரணி இ. தம்பையா தனது உரையில் தீண் டாமை அற்றுப் போய் கொண்டிருப்பினும் சாதியம் இன்றும் பேணப்படுகிறது. இது தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்களவர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்படுகிறது. சாதியம் ஒருவருக்கான அடையாளமாக இருப்பது மாற்றப்பட வேண்டும். இத்தகைய குறுகிய அடையாளம் கடந்து வாழ முடியாதா என்பது பற்றி இளைய தலைமுறை சிந்திக்க வேண்டும். அப்பொழுது தான் மனிதரை மனிதர் அடக்கும் அடையாளங்களை ஒழிக்க முடியும். அதற்கு சமூகப் புரட்சியின் ஊடான பண்பாட்டுப் புரட்சி அவசியமாகின்றது. அந்த வகையில் இந் நூல் போராடி உரிமைகளை வென்றெடுத்த மக்களின் வரலாற்றுப் படைப்பாக வெளி வந்துள்ளது. இந் நூலின் பதிவு செய்யப்பட்டவை படிக்கப்பட வேண்டியவை. போராட்ட அனுபவங்களாகப் மட்டுமன்றி சிந்திக்கப்படுவதற்கான அடிப்படையையும் தருகின்றது என்றும் கூறினார்.



### வெகுஜனன் ஏற்புரை

வெகுஜனன் தனது ஏற்புரையில் சாதியம் என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் உரிய பிரச்சினை அன்று. அது முழுத் தமிழ்த் தேசிய இனத்திற்கும் முழு இலங்கைக்கும் உரிய பிரச்சினையாகும். தமிழ் இனத்தின் மத்தியில் இருந்து வந்த இரண்டு வகைத் தமிழர்களை ஒரே தமிழர்களாக மாற்றிய கம்யூனி ஸ்ட்டுக்கள் நடாத்திய புரட்சிகரப் போராட்டங்களின் வரலாற்றுப் பதிவே இந் நூலாகும்.

### இராவணா ஏற்புரை

இராவணா தனது ஏற்புரையில் இந் நூலை நாம் இருவரும் எழுதினாலும் போராடிய கிராமங்களின் மக்களிடம் திரட்டப்பட்ட தகவல்கள் விபரங்கள் உள்ளடங்கி இருப்பதால் இது ஒரு பரந்துபட்ட கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகும். நான் சாதியப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்டவன் அல்லன். ஆனால் போராடிய மக்களிடம் மாணவனாக இருந்து பல்வேறு விடயங்களைப் பெற்றுக் கொண்டவன் என்றும் கூறினார்.

தொகுப்பு: அறிமுகன்

புதிய பூமி 14 யூலை 2008

# அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சேகுவேரா சிம்ம சொப்பனம்

**எர்னஸ்டோ சேகுவேரா லத்தீன் அமெரிக்க நாடான** அர்ஜென்டீனாவில் 1928 யூன் 6ம் திகதி பிறந்தவர். அவரது பெற்றோர் கியூபப் புரட்சிகர இயக்கங்களையும் ஆதரித்து அமெரிக்கா மீது வெறுப்புக் கொண்டவர்களாக இருந்தனர். 1947ல் சே பியூனோஸ் எய்ரஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மருத்துவம் படித்து 1952ல் வெளியேறினார். அவர் நண்பர்களுடன் சேர்ந்து லத்தீன் அமெரிக்க நாடுகளில் நீண்ட மோட்டார் சைக்கிள் பயணம் செய்திருக்கிறார். அதன் மூலம் லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் வாழ்ந்த துன்பம் நிறைந்த வாழ்வின் சகல பக்கங்களையும் கண்டறியும் வாய்ப்பைப் பெற்றார். அதன் மூலம் அவரிடம் புரட்சிக்கான கனல் மூள ஆரம்பித்து புரட்சிவாதியாகினார். மாக்சிசத்தின் மீதான ஆரம்ப பார்வையையும் சே பெற்றுக் கொள்கிறார். அவரது மக்கள் சார்பு நிலைப்பாடும் மக்களின் துயரங்களுக்காகப் பணிபுரியும் புரட்சிகரப் போக்கும் வளர்ச்சி பெறுகிறது.

1956ல் முக்கியமான இளம் புரட்சிகரப் போக்குடையவராக அறியப்பட்ட சேகுவேரா அவரது நண்பர் வீட்டில் தற்செயலாக பிடல் காஸ்ரோவைச் சந்திக்கிறார். அன்று முதல் இறுதிவரை கியூபப் புரட்சியின் ஊடான மகத்தான நண்பர்களாகவும் தோழர்களாகவும் போராட்டங்களத்திலும் கியூபாவை சோசலிச நாடாகக் கட்டியெழுப்புவதிலும் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள். கடந்த வருடம் (2007) 1967ல் சே சி.ஐ.ஏ உளவு அமைப்பினால் பொலிவியாவில் வைத்து கொல்லப்பட்டதன் 40வது ஆண்டு நினைவு கியூபாவிலும் உலகம் பூராவும் புரட்சிகர உணர்வுடனும் நினைவு கொள்ளப்பட்டது. இவ்வருடம் கடந்த யூன் ஆறாம் திகதி சேகுவேராவின் 80வது பிறந்த தினம் உலகெங்கும் நினைவு கூரப்பட்டது.

சேகுவேரா தனது பிறந்த நாடான அர்ஜென்டீனாவிற்கு மட்டும் உரிய ஒருவராக இருந்தவர் அல்ல. அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அவர்களது கையாட்களான நிலவுடைமை முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சிகளினதும் கொடுமை மிகு ஆட்சிகளுக்கு





எதிராகத் துப்பாக்கி ஏந்தி கொரில்லாப் போராட்டங்களில் ஈடுபட்ட ஒரு சர்வதேசப் புரட்சிவாதியாவார். கியூபப் புரட்சிக்கும் சோசலிச நிர்மாணத்திற்கு அவரது பங்களிப்பு மகத்தானதாகும். மாக்சிச லெனினிசத்தால் ஈர்க்கப்பட்ட சே அதன் அடிப்படையிலான இளந்தலைமுறையினை உருவாக்கவும் கியூபாவைப் பாதுகாக்கும் போராளிகளாக மக்களை உருவாக்குவதில் முன்னின்றார். சே கொல்லப்படும் போது அவருக்கு வயது 39 மட்டுமே. ஆனால் தனது இளமைக்காலத்தை பயனுள்ள வகையில் ஒரு புரட்சிவாதிக்குரியது அத்தனை லட்சியங்களுடனும் வாழ்ந்து மடிந்தார். அவர் தனது ஆற்றல் முழுவதையும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்திருந்தார்.

"இலட்சக்கணக்கான பக்கங்களில் ஆயிரம் வருடங்கள் வேண்டுமானாலும் சேகுவேராவை எழுதிக் கொண்டிருக்கலாம்" என எழுத்தாளர் காப்ரியல் கார்சியோ மார்கோஸ் எழுதியிருந்தார்.

"எங்கெல்லாம் அடக்கப்பட்டவர்களின் இதயத்துடிப்புகள் கேட்கிறதோ அங்கெல்லாம் எனது கால்கள் பயணிக்கும்" என்ற குரல் சேயினுடையது. அந்த மாபெரும் புரட்சியின் முகத்தை கேடுகெட்ட முதலாளித்துவம் தமது வியாபார விளம்பரத்திற்கு பயன்படுத்தி வருவதுதான் இழிவுச் செயலாகும். சில வருடங்கள் முன்பு ஒரு பிரித்தானியக் கம்பனி தனது புதிய பியருக்கு சேயின் படத்தைப் போட்டு விளம்பரம் செய்தது. அதன் வாசகம் "அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டது" என்பதாக இருந்தது. ஆனால் அமெரிக்காவில் தான் அந்த பியர் அதிகம் விற்பனையாகியது. இதனை கியூப அரசாங்கம் தடைசெய்தது சேகுவேராவின் மனைவி இதற்கு எதிராகக் கடும் கண்டனம் தெரிவித்து குரல் எழுப்பினார். இதனால் அந்தக் கம்பனி சேயின் படத்தையும் வாசகத்தையும் அகற்றிக் கொண்டது. சேயை கொன்றொழித்த ஏகாதிபத்தியம் அவரது புரட்சிகர பிம்பத்தையும் உணர்வையும் சிதைக்கிற சூழ்ச்சியைத் தொடர்ந்தும் செய்கிறது. இவற்றை முறியடிக்கவும் இளைஞர்களை அறிவூட்டவும் சேகுவேராவின் வாழ்வையும் புரட்சிகரப் பணிகளையும் ஆற்றல் ஆளுமைகளையும் படித்தறிய வேண்டும்.

-நமன்

# இஸ்ரேல் 60 வருட அட்டூழியமும் போராட்டமும்

**இஸ்ரேல் உருவாக்கப்பட்ட அறுபதாம்** ஆண்டு நினைவு முற்றிலும் எதிர்மாறான முறைகளில் அண்மையில் நினைவுகூரப்பட்டது. இஸ்ரேலின் ஆட்சியாளர்களும் அவர்களால் ஒரு போர்ச் சூழலுக்குள் தள்ளப் பட்டு முற்றுகைக்கு உட்பட்டோரின் மன நிலையில் உள்ள யூதர்களில் பெரும்பாலானோரும் அதை ஒரு பெருமைக்குரிய நாளாக விடுதலைக்குரிய நாளாகக் கொண்டாடினர். இஸ்ரேல் பற்றிய விமர்சனக் கண்ணோட்டமுடைய யூதர்கள் போக உலகில் வாழும் யூதர்கள், குறிப்பாக அமெரிக்காவில் வாழ்வோர் அதை மகிழ்வுடன் கொண்டாடினர். இஸ்ரேலின் இருப்புக்கு உத்தரவாதமாக உள்ள அமெரிக்க அதிகாரம் அதைக் கொண்டாடியது.

ஆனால் அந்த நாள் பல லட்சக்கணக்கான அராபியர்களுக்குத் தமது மண்மீதான உரிமை மறுக்கப்பட்ட நாள் தங்கள் வீடுகளிலிருந்தும் பயிர் நிலங்களிலிருந்தும் வன்முறையாலும் வஞ்சகத்தாலும் விரட்டப்பட்டதைச் சட்டபூர்வமாக்கிய கொடுமையான நாள். அது மட்டுமன்றி இஸ்ரேலின் உருவாக்கத்தின் பின்பும் அராபியர்களை வெளியேற்றுவது தொடர்ந்தது. இஸ்ரேலின் பாதுகாப்பு என்கிற பேரில் இஸ்ரேலிய அரசாங்கங்கள் ஆளுங்கட்சி வேறுபாடின்றி இஸ்ரேலின் பரப்பை விஸ்தரித்துக் கொண்டே போயினர். 1967ல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட நிலப் பரப்பில் சினாய் என்கிற பெருமளவும் பாலை நிலமான எகிப்தியப் பகுதி மட்டுமே மீட்கப்பட்டது. 1974ல் அதைப் போர் மூலம் இய லூமாக்கிய எகிப்து அரசாங்கத்தில் ஏற்பட்ட உள் மாற்றங்கள் எகிப்தை அமெரிக்காவின் அடிமையாகவும் இஸ்ரேலின் அடிமை யாகவும் மாற்றின.

பலஸ்தீனத்தின் கிழக்கு எல்லையில் அமைந்த ஜோர்தானிய மன்னராட்சி எப்போதுமே அமெரிக்க விசுவாச முடையதாகவும் உள்நாட்டிற் பகைமையைச் சம்பாதிக்காமலிருக்க இஸ்ரேலை அங்கீகரிக்காமல் இருப்பதாக வேடங் காட்டி வந்தது. ஆயினும் தனது மண்ணில் இருந்த அகதி முகாங்களில் வாழ்ந்து வந்த பலஸ்தீன அகதிகளையும் குறிப்பாக விடுதலைப் போராளிகளையும் அடக்கி வைப்பதில் மிகுந்த கவனங் காட்டியது.

எனவே பலஸ்தீன மக்களைப் பொறுத்த வரை அவர்கட்கு எதிரான சக்திகளே பலஸ்தீனத்தை அண்டிய எல்லாப் பகுதிகளிலும் அதிகாரத்திலிருந்தனர்.

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக 1954ல் எகிப்தில் ஆட்சிக்கு வந்த நாசரின் அரசாங்கம் இருந்தது. 1960களில் ஈராக், சிரியா ஆகிய நாடுகளிலும் ஆதரவான புதிய ஆட்சிகள் உருவாகி இருந்தன. இம் மூன்று நாடுகளிலும் மன்னராட்சி கவிழ்க்கப்பட்டதால் சிறிது வெகுசன ஆதரவுடனான ஆட்சிகள் இருந்தாலும் அவை சனநாயக ஆட்சிகளாக இருக்கவில்லை என்பது ஒரு பலவீனம். லெபனானின் பல மத பல இனச் சமூக அமைப்பால் அங்கு சமூக முரண்பாடான ஒரு சூழ்நிலை நிலவியது.

மற்ற அரபு நாடுகளும் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகத் தோற்றங் காட்டினாலும் ஏகப் பெரும்பாலான ஆட்சிகள் அமெரிக்க ஆதரவில் தங்கியிருந்த அடக்குமுறை அரசுகள் தாம். அவற்றில் எண்ணெய் வளம் மிகுந்த சவூதி அராபியா முக்கியமானது. சிரியாவும் ஈராக்கும் காலப்போக்கில் தமக்குள் முரண்பட்டன. இவ்வாறான நிலைமைகளில் கீழ் பலஸ்தீனத்தில் உருவான விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றின் மீதும் ஒவ்வொரு அரசாங்கம் ஏதோ வகையில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது.



சியோனிசத்தின் ஸ்தாபகரது படத்தின் கீழ் முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் பலஸ்தீன அழிப்பின் தொடர்ச்சிக்கு சிந்திக்கிறார்.

இஸ்ரேலின் 1967ம் ஆண்டுப் போரின் பின்னரே பலஸ்தீனத்தில் ஒரு வலுவான தேசிய விடுதலை இயக்கம் உருவானது. வேறுபட்டு நின்ற பல வேறு பலஸ்தீன விடுதலைப் போராளி அமைப்புக்கள் பலஸ்தீன விடுதலைத் தாபனம் என்கிற ஒரு பொதுவான அமைப்பின் கீழ் வந்தன. அல் ஃபதாஹ் என்கிற மதச்சார்பற்ற அமைப்பே அனைத்திலும் பெரிதாயும் வலிதாயும் இருந்தது. அதன் தலைவரான யசீர் அரஃபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரானார். 1970கள் பலஸ்தீன விடுதலை நிறுவனத்தின் எழுச்சி மிக்க ஆண்டுகளாயின.

பலஸ்தீன விடுதலைத் தாபனத்தின் மூலம் நடத்தப்பட்ட போராட்டங்கள் ஒரு புறமிருக்க 1970களில் மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட விடுதலை எழுச்சிகளுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பல நாடுகள் அங்கீகரிக்கவும் ஐ.நா. சபையின் அதனால் பங்குபற்றவும் இயலுமாக்கின. எனினும் 1970களின் முடிவில் ஏகாதிபத்தியம் தன்னை மீளவும் நிலைநிறுத்திக் கொண்டது. மூன்றாமுலக நாடுகள் பலவற்றின் தேசிய முதலாளியத் தலைமைகளின் இயலாமை அப்போது புலனானது. உழைக்கும் மக்களின் பலவேறு போராட்டங்களின் முன்னே ஈடுகொடுக்க முடியாமலும் தேசிய பொருளாதாரம் ஒன்றைத் தனது தலைமையில் முன்னெடுக்க இயலாமலும் ஒவ்வொரு நாட்டிலும் தேசிய முதலாளியம் ஏகாதிபத்தியத்தின் ஆணைக்கு கீழ்ப்படியத் தொடங்கியது.



சியோனிச இஸ்ரேலியருக்கு எதிரான போராட்டத்தில் ஆயுதம் ஏந்திய ஹமாஸ் பலஸ்தீனப் போராளி ஒருவர்.

இந்தப் பின்னணியிலேயே மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மேலாதிக்க வேலைத்திட்டத்தை நிறைவு செய்யும் முன்னணிப் படையாக இஸ்ரேல் கட்டியெழுப்பப்பட்டது. 1948 முதலே ஏகாதிபத்திய நலன்களை முன்னிறுத்திச் செயற்பட்ட இஸ்ரேல் தனது பாதுகாப்பு என்ற பேரில் அண்டை நாடுகளான எகிப்து, சிரியா, ஜோர்டான், லெபனான் ஆகிய நாடுகளில் அதிகரித்து வந்த இஸ்ரேலியக் குறுக்கீடுகள் எல்லை தாண்டி முழுப் பிராந்தியத்தின் மீதும் தனது இலக்குகளை வைக்கத் தொடங்கியதற்கான காரணம் ஒரு போதுமே இஸ்ரேலின் பாதுகாப்பு அல்ல.

ஈரானில் ஏற்பட்ட புரட்சி அமெரிக்க சார்பு சர்வாதிகார முடியாட்சியின் இடத்தில் ஒரு இஸ்லாமிய மதவாத ஆட்சியை ஏற்படுத்தியது. அமெரிக்கா அதன் மீது கடும் பகைமை பாராட்டியதன் விளைவாக ஏற்பட்ட சிக்கல்களில் ஈராக்- ஈரான் போர் ஒன்று. அதன் தொடர்ச்சியாக ஈராக்கில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவாக ஈராக்கிய ஆட்சி தனது பொருளாதார நலன்களை வலியுறுத்த முற்பட்டது. அதன் தொடர்ச்சியாக இன்று முழுப் பிரதேசமும் கொந்தளிப்பான நிலையில் உள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான அரபு நாடுகளதும் ஈரானினதும் மக்களது முக்கிய கவனத்திற்குரிய பிரச்சனையாகப் பலஸ்தீனப் பிரச்சனையையே கூற முடியும். அதன் தீர்வு இஸ்ரேலில் ஸியோனிஸவாதிகளது இனவாத ஆட்சிக்கு முடிவுகட்டிவிடும். அத்தீர்வு ஒரு வெகுசனப் போராட்டத்தின் மூலமே எட்டப்பட முடியும். அது இயலுமானால் மத்திய கிழக்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது ஆட்சியாளர்களுக்கும் அவர்களது அமெரிக்க எசமானர்கட்கும் எதிரான எழுச்சிகளில் ஊக்கம் பெறுவர். எனவே பலஸ்தீன விடுதலைப் போராட்டம் நசுக்கப்படுவதும் இஸ்ரேல் பலப்படுத்தப்படுவதும் அமெரிக்காவுக்கு முக்கியமானதாக உள்ளது.

இன்றைக்கு இஸ்ரேலிடம் உள்ள ஆயுத வலிமையுள் அணு ஆயுதங்களும் அடங்கும். இஸ்ரேல் உலகின் முன் வரிசை ஆயுத உற்பத்தி, ஆயுத விற்பனை நாடுகளில் ஒன்றாக உள்ளது. அதனால் இன்று மத்திய கிழக்கில் எந்த நாட்டின் மீதும் இஸ்ரேல் துணிந்து தாக்குதல் தொடுக்கக் கூடிய விதமாக மத்திய கிழக்கின் பல அரபு நாடுகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் மத்தியில் கொதிப்பு உயர்ந்து வருகிறது.

அமெரிக்கா நேரடியாகத் தாக்கத் தயங்குகிறது ஈரான் போன்ற ஒரு நாட்டை இஸ்ரேல் தனது பாதுகாப்பின் பேரால் தாக்கக் கூடிய சூழ்நிலை திட்டமிட்டே உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 1948ல் பலஸ்தீன அராபியர்களை மிரட்டி நாட்டைவிட்டு விரட்டுவதை மட்டுமே நோக்காகக் கொண்ட சியோனிசம் இன்று முழுப் பிராந்தியத்திற்கும் எதிரான மிரட்டலாகவும் பிராந்தியத்திற்கு வெளியில் தனது ராணுவ உறவுகள் மூலம் உலக அமைதிக்கும் மூன்றாம் உலகின் ஒடுக்கப்பட்ட சகல மக்களுக்கும் எதிரான மிரட்டலாகியுள்ளது.

எனவே சியோனிச இஸ்ரேலின் வீழ்ச்சி தேவையான பிரிக்க இயலாதது ஒன்றாகும். அறுபது ஆண்டுகளாகத் தளராமற் போராடும் பலஸ்தீன மக்கள் அந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வை இயலுமாக்குவர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கவிஞர் முருகையனும் குழம்பிய பார்வைகளும்

பேராசிரியர் கைலாசபதிக்கு அடுத்தபடியாக அவரது காலத்தில் இடதுசாரி எதிர்ப்பாளர்களால் வெறுக்கப்பட்ட இலக்கியவாதி கவிஞர் முருகையன் என்பேன். கைலாசபதியின் அக்கறைகள் திறனாய்வுத் துறை சார்ந்து இருந்தன. அவரது நெருங்கிய நண்பராக இருந்த முருகையனின் அக்கறை கவிதைத்துறையிற் குவிந்தது. எனினும் இருவருமே பலதுறை சார்ந்த அக்கறையுடையோராயும் ஆழமான சமூக அக்கறையும் அதன் விளைவான இடதுசாரிச் சிந்தனையுடையோராயும் இருந்து வந்தனர். அவர்களது பங்களிப்புக்கள் இலக்கியம் தொடர்பான விடயங்களிலும் சமூகச் சிந்தனை சார்ந்த விடயங்களிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தன. அந்த முக்கியத்துவத்தை ஏற்போர் போல ஏற்க விரும்பாதோரும் எப்போதும் இருந்து வந்துள்ளனர்.

கைலாசபதியை விமர்சிக்க முற்பட்டோர் கடுமையான அவதூறுகட்கும் நிந்தனைகட்கும் அவரை உள்ளாக்கிய அளவுக்கு அவரை முறையாக விமர்சித்ததாகக் கூற இயலாது. தமிழகத்தில் இருந்து வரும் தமிழவன் போன்ற அரை வேக்காடுகளுக்கு உச்சிகுளிருகிற விதமாக அன்று அமைந்தவை ஈழத்திலிருந்து வெளியான அவதூறுகள் தாம். கைலாசபதியின் மாக்சியச் சிந்தனை தமிழ் இலக்கியக் கொள்கையில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகவே அவரை நிராகரிப்பதில் அத்தனை மாக்சிய எதிர்பாளர்களும் அணி திரண்டனர். க.நா.சு போன்ற பிற்போக்காளர்களை விமர்சன விக்கிரகங்களாக்குகிற தேவையும் இதனாலேயே சிலருக்கு ஏற்பட்டது. வெங்கட் சாமிநாதன்



போன்ற நேர்மையற்ற இலக்கியப் பிரமுகர்களுடன் இங்கே சிலர் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டிய தேவைக்கும் கைலாசபதியின் திறனாய்வுக் கொள்கைகளின் தாக்கம் முக்கியமான ஒரு காரணம்.


முருகையனுடைய நிலைமை வேறாக இருந்தது. பல்வேறு துறைகளிலும் அவர் வழங்கிய பங்களிப்புக்களில் அவரது சமூகப் பார்வை அடி நாதமாய் அமைந்திருக்கக் காணலாம். அவரது சமூக நோக்கு அவரது படைப்புலகத்தின் விருத்தியோடு சேர்ந்து ஆழமும் அகலமும் பெற்றது. அவரது இடதுசாரிச் சிந்தனை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையின் விருத்தியோடு ஒட்டி உருவானது. நடைமுறை அரசியலில் தமிழ்த் தேசிய வாதத் தின் போக்கின் விளைவாக அதன் வர்க்க இயல்பு அவருக்குப் புலனானது. சமூக நீதி பற்றிய அவரது அக்கறைகள் ஆழம் பெற்று வருகையில் தமிழ்த் தேசியவாத அரசியல் அதற்கு ஈடு கொடுக்க இயலாதிருந்தது. முருகையனது இலக்கியக் கொள்கையின் முக்கியமான பண்பாகச் சமூக நீதிக்கான அவரது தணியாத தாகம் தொடர்ந்தும் இருந்து வந்தது.

முருகையனை மாக்ஸிய எதிர்ப்பாளர்கள் எவரும் நேசிக்கவில்லை. அவரது முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கான பல வேறு முயறசிகள் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஈழத்தின் அதி முக்கியமான கவிஞர் என்று மகாகவியை உயர்த்திப் பிடிக்கிற முயற்சியில் ஒருவர் அண்மையில் கணிதச் சூத்திரம் ஒன்றை நிரூபிக்கிற விதமாக ஆகவே மகாகவி தான் இலங்கையின் அதி சிறந்த கவிஞர் என்று நிரூபிக்க முற்பட்டிருந்தார். போகிற போக்கில் முருகையனை ஒரு கவிஞராகக் குறிப்பிடுவதற்கு மேலாக அவரது கவித்துவத்தின் வீச்சையும் அவரது கவிதைகளின் ஆழத்தையும் அவரது ஆளுமையையும் விதந்துரைக்க இடதுசாரி எதிர்ப்பாளர்கட்கு மனம் வந்ததில்லை. முருகையனை அவர்களால் முற்றாகப் புறக்கணிக்க இயலாமைக்குச் சில புறக் காரணங்கள் இருந்தன. அவற்றுட் குறிப்பிடத்தக்க ஒன்று ஏ.ஜே. கனகரத்னா முருகையனின் கவிதைகள் மீது வைத்திருந்த மதிப்பு. மாக்ஸிய எதிர்ப்பாளர்களிடையே கனதியான திறனாய்வாளர்கள் இல்லாமையால் கட்சி எதிலும் சாராதிருந்த இடதுசாரிச் சிந்தனையாளர் ஏ.ஜே. கனகரத்னாவின் மீது அவர்கள் பல தேவைகட்காகவும் தங்கியிருந்தனர்.

அண்மையில் சிவசேகரத்தின் கவிதைகளை மெச்சுகிற தோரணையில் எழுதியிருந்த செ. யோகராசா வழமை போல மிக மேலோட்டமான முறையில் சிவசேகரம் மட்டுமே பலதுறை சார்ந்து பன்முகப்பட்ட ஆளுமைகளை வெளிப்படுத்திய இடதுசாரிக் கவிஞர் என்ற விதமாக எழுதியிருந்தார். இதன் மூலம் இடதுசாரி வட்டங்கட்கு வெளியே தான் அத்தகைய ஆளுமைகள் இருந்து வந்துள்ளது என்றே எண்ணத்தோன்றும். அதற்கான ஆதாரங்கள் எதுவும் அந்த மதிப்பீட்டிற் காணப்படவில்லை. மாறாகக் கவிதையை ஒரு நாடக வடிவமாகவும் காவிய வடிவமாகவும் பலவகைப்பட்ட பார்வைகளையும் உணர்த்தும் ஒரு சாதனமாகவும் தமிழ் மரபு இலக்கிய வடிவிற்குப்பட்ட பல்வேறு செய்யுள் வடிவங்கள் மூலமும் நவீன சிந்தனைக்குரிய ஒரு இலக்கிய வடிவமாகச் செழுமைப்படுத்திய முருகையனைப் பற்றித் தெரியாத ஒருவர் ஈழத்துக் கவிதையைத் திறனாய என்ன விதமான தகுதியுடையவராக இருக்க இயலும்?

அண்மையில் தினக்குரலில் மு. பொன்னம்பலம் முருகையனது கவிதைகளை மெச்சி எழுதியிருந்தார். இது முருகையனுடைய குடும்பத்தினருக்கு வியப்பளித்தது. ஏனெனில் முருகையனின் கவிதைகளையோ முருகையனையோ மெச்சி இதற்குமுன்னம் பொன்னம்பலம் எதையுமே பேசியதோ எழுதியதோ இல்லை. மாறாக முருகையன் உட்பட்ட மரபுக் கவிஞர்கள் வலிந்து சொறகளைத் திணிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டிச் சில ஆண்டுகள் முன்னம் எழுதியிருந்தார். தன்னையும் தன்னுடைய தமையனையும் இடையிடை உறவினர் நண்பர்களையுமே உயர்ந்த படைப்பாளிகளாகக் காட்டுகிற நோக்கம் பொன்னம்பலத்தின் இலக்கியக் கட்டுரைகளிற் தவிர்க்க இயலாத ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளது. தமையன் தளையசிங்கத்தின் "மாக்ஸியத்தைத் தாண்டிய" பார்வை பசப்பானது என்பதைக் கைலாசபதியும் முருகையனும் பின்பு சிவசேகரமும் சுட்டிக்காட்டியதை அந்த வட்டம் தாங்கிக் கொள்ள இயலாமல் தவித்தது என்பது அவர்களது எழுத்துக்களில் வெளிப்பட்டது. முருகையன் மீது தனக்குத் தனிப்பட்ட பகைமை இல்லை என்றும் கருத்து வேறுபாடுகளே இருந்து வந்தன என்றும் தினக்குரலில் வந்த முருகையனுடனான நேர்காணலின் பின்பு பொன்னம்பலம் கூறியிருந்தார். இடதுசாரிகட்கு இடதுசாரிகளல்லாத எவருடனும் தனிப்பட்ட பகைமை இல்லை. ஆனாலுங் கருத்து வேறுபாடுகள் போக விமர்சனக் கருத்துக்கட்கு முகங்கொடுக்க முடியாமல் தனிப்பட்ட தாக்குதல்களில் இறங்கிய இடதுசாரி எதிர்ப்பாளர்களது பட்டியல் மிக நீளமானது.

பொன்னம்பலத்தின் கட்டுரையில் மாவை வரோதயன் அவதானித்த ஒரு விடயம் முக்கியமானது. முருகையனை இடதுசாரிகள் கூடக் கவனிப்பது போதாது என்ற தோரணையில் அவர் முருகையனது ஆக்கங்களை வேறு யாரோ தொகுக்கிறதை முன்வைத்து எழுதியிந்தார். ஆனால் முருகையன் தாயகம் சஞ்சிகையிலும் தேசிய கலை இலக்கியப் பேரவையிலும் முக்கிய பொறுப்புக்களில் தொடர்ந்தும் இருப்பதுடன் ஈழத்துக் கவிஞர்களுள் எவரது கவிதை ஆக்கங்களையும் விட அதி முக்கியமான இடம் புதிய-ஜனநாயகக் கட்சியின் ஆங்கில ஏடான நியூ டெமோக்ரசியில் வழங்கப்பட்டு வருவதைப் பற்றி பொன்னம்பலம் அறியாமலிருக்கலாம்.



மூத்த கவிஞரும் கலை இலக்கியப் படைப்பாளியும் தமிழறிஞரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினருமான கலாநிதி இ. முருகையன் அகவை 73ற்குள் புகுந்துள்ளார். அவருக்கு எம் அனைவரினதும் வாழ்த்துக்கள்

(ஆ.குழு)

இடதுசாரிக் கட்சிகளை ஓரங்கட்டுகிற போக்கு இன்றைய பத்திரிகையாளர்கள் பலரிடம் உண்டு. இது தமிழ்த் தேசியவாத வியாதியின் துணை விளைவுகளில் ஒன்றெனலாம். தினக்குரலில் வந்த முருகையனுடனான நீண்ட நேர்காணலிற் கூட அவருடைய அரசியற் சிந்தனைகள் பற்றிய கேள்விகள் எழுப்பப்படாததோடு தேசிய கலை இலக்கியப் பேரவையுடனான அவரது நெருக்கமான உறவு பற்றியும் எதுவுமே கேட்கப்படவில்லை.

முருகையன் மீதான சில புதிய அக்கறைகள் அவரது அரசியல் அடையாளத்தைத் திரித்துக் கூறுகிற நோக்கமுடையவை. இவ்வாறான முயற்சிகள் முக்கிய இடதுசாரித் தலைவரான தோழர் மு. கார்த்திகேசன் தொடர்பாக நடந்துள்ள போது கவிஞர் முருகையனை விட்டு வைப்பார்களா? கவிஞரின் உண்மையான நண்பர்கள் இது பற்றி விழிப்புடன் இருப்பது நல்லது.

**சிதுமுகன்**

**மாநாடும் 35வது ஆண்டுவிழாவும்**

**தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாடும் 35வது ஆண்டு விழாவும் எதிர்வரும் 2008ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 23ம், 24ம் (சனி, ஞாயிறு) திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும்.**

**மாநாட்டுத் தயாரிப்புக் குழு**

11ம் பக்க தொடர்ச்சி

**கியூப தேசிய**

1) கியூப தேசபக்தி என்பது பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பின் பகுதியாக மேலும் வளர்க்கப்பட வேண்டும்

2) கியூப ஏகாதிபத்திய எதிர்ப்பும் கியூப ஒத்துழைப்பும் சோஷலிஸத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

3) கியூபவிற்கான ஒத்துழைப்பு என்பது கியூப சோஷலிஸ கட்டுமானத்தை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும்.

4) கியூப மக்களுக்கான சர்வதேச ஒத்துழைப்பு என்பது உலக மக்களின் அரச, கட்சி எல்லைகளுக்கு அப்பாலான பரந்துபட்டதாக இருக்க வேண்டும்.

கியூபாவிற்கான ஒத்துழைப்பு என்பது கியூபாவிற்கு உண்மையான நண்பர்களான கம்யூனிஸ்ட்டுகளையும் ஏனைய நேர்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் மையமாகக் கொண்டதாக இருப்பது அவசியமானதாகும். சந்தர்ப்பவாத சக்திகளுடனான உறவும் தொடர்பும் உண்மையான ஒத்துழைப்பைக் கட்டி வளர்க்க உதவாது என்பதே எமது கருத்தாகும்.

**தோழர் பிடல் கஸ்ரோ நீடு வாழ்**
**சோஷலிஸ கியூபா வாழ்க**
**கியூபாவிற்கான சர்வதேச ஒத்துழைப்பு வெல்க.**

## மாடுங் கயிறும் மானிடமும்

மாடும் கயிறுக்கும்- மற்றெவரோ கட்டியதை
மானுடர்கள்?
மதமென்று மொழியென்று இனமென்று நாடென்று
மானிடரைப் பிரித்துள்ள மதில்கள் தகர்ப்பாரோ?
சாதியெனப் பாலென்னச் சூழ்ந்திருக்குஞ் சிறை விடுத்து
வெளியேறும் எண்ணஞ் சிந்தையிலே கொள்வாரோ?
சடங்கென்று மரபென்று தாமே தம் தலை மீது
ஏற்றி வைத்த பழஞ்சுமைகள் இறக்கத் துணிவாரோ?
கைகளிலுங் கழுத்தினிலுங் கட்டுவித்த மெல்லியதோர்
நூலறுக்கும் வலிமையிலார் கைவிலங்கு உடைப்பாரோ?
தாமே பிணைத்த கயிறுகளுங் கைவிலங்கும்
தாமே அமைத்த சிறைக் கூண்டும் மதிற் சுவரும்
யாரோ தகர்ப்பார்? யாரோ விடுவிப்பார்?

தம்மைப் பிணித்திருக்கும் மனக் கயிற்றைத் தாம் இளக்கி
மனத் தடைகள் தமை விலக்கி மனச் சிறையின் விடுபட்டு
நோக்கத் துணிவாரேல் தம் பகைவர் மாட்டிவைத்த
கைவிலங்கு பொடிப்பொடியாய் நொறுக்கும் வலிவுடையார்
சிறைக்கதவும் நெடுமதிலும் தகர்த்தெறிவார்
தலைமீது
ஏற்றிவைத்த சுமையனைத்தும் எடுத்தெறிவார்
தலை நிமிர்வார்
அடிமை நிலை அறுப்பார், முன்னோக்கித் தாம் நடப்பார்
மானுடத்தை விடுவிப்பார்.

**சிவா**

**(கவிஞர் முருகையனின் "மாடுங் கயிறுகள் அறுக்கும்" என்ற கவிதையை மனதில் இருத்தி எழுதப்பட்டது.)**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

யூலை 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



பலஸ்தீன மண்ணில் இருந்து விரட்டப்பட்ட வீடு அழிக்கப்பட்ட பின்பும் வீட்டின் திறப்பை இன்று வரை வைத்திருக்கும் ஒரு தாய். திறப்பு பலஸ்தீனியர்களது மண்மீட்புப் போராட்டத்தில் பொதுச் சின்னமாக உள்ளது. 1948ல் இஸ்ரேல் உருவான போது எழுபது இலட்சம் பலஸ்தீனர்கள் தமது தாயகத்தில்



# 60 வருடங்களில் இஸ்ரேலின் அட்டூழியமும் பலஸ்தீனியரின் போராட்டங்களும்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.